NAVA LAW
Professional Corporation
Real Estate | Corporate | Commercial | Immigration | Family | Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

தாயகத்திலும் கனடாவிலும் வெளிவரும்

# ஈகுருவி

ekuruvi.com

iNFORCE LIFe Financial Services Inc.
WE ARE HIRING
416.909.0400
www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough

சிறகு 3 December 2015 இணைய மாத இதழ் பறப்பு-10

# தலைவர்கள்

2015 இல் இகுருவியை சந்தித்தவர்கள்

உங்களின் அருகில் ஒரு பாலியல் குற்றவாளி

பூனைக்கு மணி கட்டுவது யார்

சதிவலையில் விக்னேஸ்வரன்



ALL YOUR MORTGAGE NEEDS
Gini Annarasa
Mortgage Broker
416 830 3241
MORTGAGE ALLIANCE The Guardian
80 Nashdene Rd. Unit D221-222, Toronto ON M1V 5K4
Independently Owned and operated

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON. M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change $24.99 + tax
Conditions apply
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com


GT Brokers
Protect You & Your Family
நாளை நம் கையில் இன்றே செயற்படுங்கள்
Critical Illness | No medical Life | Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances. RRSP | RESP
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Foresters

MRI SUPER
RENOVATIONS AND PAINTING
www.mrisuperrenovations.com
Raj Munees
General Contractor
Cell: 416-618-4584 | Off: 416-299-3633
Free Estimate | Reasonable Price | Quality & Relible Work
Full Basement Renovation | Kitchen Cabinets
Hardwood & Tiling | Painting | Electrical & Plumbing

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
TIME FOR SOLUTIONS
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc.

Tam Sivathasan
Broker of Record
416.804.3443
MEDICAL & PROFESSIONAL CENTRE
AT MARKHAM & FINCH
800 SQ. FT AND UP
2015 FALL OCCUPANCY
CALL FOR INFORMATION
VEEDU REALTY INC. BROKERAGE

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

## எண்ணக் குருவி

இகுருவி ஊடகம் 2014-2015 ஆம் ஆண்டுகளில் பல சாதனைகளை புரிந்து கனடிய ஊடகங்களில் ஒரு தனித் தன்மையை நிலைநாட்டியுள்ளது யாராலும் மறுக்கமுடியாது .

கனடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, இலங்கை எதிர் கட்சி தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், ஒன்ராரியோ முதல்வர் கதிலின் வின், டொரோண்டோ மேயர் ஜோன் டோரி, ஒன்ட்டாரியோ கோன்சவேர்டிவ் தலைவர் பற்றிக் பிரவுன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் போன்றவர்களை எமது ஊடகப்பயணத்தின் ஊடாக அவர்களது அரசியல் நிலைப்பாட்டையும் மக்கள் பற்றிய அவர்களது பார்வையையும் இகுருவி சுட்டிக்காட்டத் தவறியதில்லை. அத்துடன் பல அரசியல் வெற்றிகளுக்கும் களம் அமைத்த ஒரு சிறந்த ஊடகமாகவும் 2014ம் ஆண்டையும் 2015ம் ஆண்டையும் நாம் கடந்து வந்துளங்ளோ ம். அதன் வெளிப்பாடே எமது இம்மாத அட்டைப்படம்.

எமது நிறுவனமானது ekuruvi கனடிய பத்திரிகை , இலங்கை பத்திரிகை , இணைய தினச் செய்திப பிரிவு (இகுருவி.com ) புகைப்படப் பிரிவு , காணொளி பிரிவு , சமூக வலைத்தள பிரிவு , Biztha.com வர்த்தக சர்வதேச இணைப்பு மற்றும் விளம்பரபிரிவு, Online Marketing பிரிவு ,சமூக அமைப்புகளுக்கான உதவிப் பிரிவு , அரசியல் செயற்பாட்டு உதவி பிரிவு , Business Solution , மற்றும் விருது விழாவுடன் கூடிய இரவு விழா போன்ற சேவைகளை வழங்கிவருகின்றது

கடந்த வருடம் " Biztha Award " மிகச் சிறப்பாக நடைபெற்றது மட்டுமல்லாது, அதில் சிறப்புரை யாரிய பேராசிரியர் ஜெயந்தி ஸ்பாலகிருஷ்ணன் அவர்களது சிறப்புரை உலகம் முழுக்க சுமார் 5 லட்சம் மக்கள் பார்வயிட்டுள்ளார்கள் . இந்த வருடம் நடைபெறவிருந்த எமது " Biztha Award 2015", கனடிய பொது தேர்தலில் எமது பங்களிப்பு கூடுதலாக அங்கம் வகித்தமையினால் கொஞ்சம் தாமதமாதப்படுத்தியுள்ளோம். 2016இனை தமிழோடு ஆரம்பிக்கும் முகமாக "தமிழ் மரபுத்திங்கள் நாளில்" தனித் தமிழ் பெயருக்கு 1500 வெள்ளிகளை பரிசாக வழங்கவுள்ளோம். கனேடிய ஊடகம் என்ற எமது பதிவுகளை முன்நிறுத்தி விரைவில் "கனடியப் பிரதமருடன் இகுருவி" என்னும் நூல் ஒன்றும் வெளியிடப்பட இருக்கிறது.

நாம் சமூகம் சார்ந்த உடகமாகவே எதிர்வரும் காலங்களையும் கடந்து செல்ல உறுதி கொண்டுள்ளோம். பாரதி பிறந்த இம்மாதத்துடன் இவ்வாண்டும் நிறைவுக்கு வருகிறது. பாரதியின் பின்வரும் வரிகள் போல்

தேடிச்சோறு நிதம் தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக வுளன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போல - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ

எமது சமூகம் சார்ந்த ஊடகப் பணி தொடர்ந்த வண்ணம் இருக்கும். இகுருவி பத்திரிக்கையின் இக்கட்டான செயல்பாடுகளுக்கு மத்தியிலும் எமது பயணம் 60% விழுக்காட்டுக்கு மேலாக ஒரு சமூகப் பணியாகவே இன்னமும் இருந்து வருகின்றது. எங்களை காத்திரமான வர்த்தக ஊடகமாக மாற்ற நாங்கள் தயாராக உள்ளோம் அதற்கு வசகர்களாகிய உங்களது கருத்துப்பரிமாற்றங்கள் எங்களையும் எங்கள் எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் திறன்வினை கொள்ளச் செய்யும். எங்கள் மீது நம்பிக்கை வைக்கும் வர்தகர்களை அவர்களின் வளர்ச்சிக்கு உகந்த வைகயில் விளம்பர வடிவமைப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் மூலம் எங்களை வாசிப்பவர்கள் மத்தியில் பிரபல்யம் அடைய செய்கிறோம். அதேவேளை உங்கள் ஆதரவோடு தமிழ்ச் சமூகத்தை வளர்ச்சிப்பாதையில் எடுத்துசெல்லக்கூடிய எல்லா விடயங்களையும் எல்லாத் திக்குகளிலும் இருந்து எடுத்துக் கொடுக்கின்றோம். இதனாலேயே எங்களை சமூகப்பத்திரிக்கை எனச் செல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

பல கற்பித்தல்களையும் ஏராளமான சவால்களையும் இகுருவிக்கு அதிகமாக அறிமுகம் செய்து வைத்தது 2015ம் ஆண்டுதான். ஆதலால் இந்த ஆண்டிற்கு உங்கள் அனைவரினதும் அன்போடு நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு புத்தாண்டை புதிய சிந்தனைகளோடும் பாரிய பல மாற்றங்களோடும்வரவேற்கின்றோம். தொழில்நுட்பங்களும் தொழில்முறை மாற்றங்களும் இந்த ஆண்டை விடவும் வீரியம் கொண்டவையாக இருக்கும் அனைத்தையும் நம்வசப்படுத்தி எங்கள் எழ்த்துக்களையும் உங்கள் விளம்ரங்களோடு உலகளாவிய வாசகர் சபை கொண்டு வெல்வோம். நம்பிக்கையுடன் விளம்பரம் செய்யுங்கள். எங்ளோடு நீங்களும் உங்களோடு நாங்களும் வெல்வது உறுதி.

வாசகர்கள், வர்த்தகர்கள், மற்றும் அனைவருக்கும்

இகுருவி மற்றும் குழுவினரின்

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## உள்ளடக்கம்

`தண்ணிரில் தவித்த சென்னை'
சென்னையிலிருந்து இகுருவிக்காக அருள்

சதிவலைகளும் சி .வி விக்னேஸ்வரனும்
- இகுருவிக்காக புருஜோத்தமன் தங்கமயில்

கனடா மூர்த்தி எழுதும் 'குருவி ஐயாவும் நானும்'
புருசனை நம்பி அரசனைக் கைவிடாதே !

மார்க் ஸக்கர்பர்க்கின் மிகப் பெரிய நன்கொடையை பார்த்து
நாம் ஆச்சரியப்படவேண்டுமா

கனடாவில் எதிர் வரும் ஆண்டுகளில் வீடு விற்பனை
நிலைமை - செல்வா செலத்துரை

பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் எழுதும் தொடர்
உலகளாவிய சிறப்பு கற்கைநெறி
IB Programme பற்றிய ஒரு அறிமுகம்

கடந்த மாதம் டொரான்டோவில்
நிகழ்ந்த 20 ற்கு மேற்பட்ட நிகழ்வுகளில்,
இகுருவி ஐயாவின் சிறப்பு புகைப்படங்கள்...
மேலதிக புகைப்படங்களை இணையத்தில் பார்வையிடலாம்

ஆட்சிமாற்றம் நிலக்கபளீகரத்தை இல்லாதொளிக்குமா?
கலாநிதி சர்வேந்திரா

தமிழன் காதல் பேராசிரியர் நொபுருஹ்ர்சிமா

சர்வதேசத்தை விழிப்படைய வைத்துள்ள பிரான்ஸ் தாக்குதல்

சிவதாசன் அவர்களின்
`பூனைக்கு மணிகட்டுவது யார் `
- பாரிஸ் சூழல் மாநாடு ( கொப் 21)

நக்கீரன் அவர்களின் படைப்பில்
`தமிழர்களின் முப்பெரும் விழாக்கள்

சிவமணியின் தெறிக்க விடலாமா

சிரியா தரும் பாடம்

அ . ஜான்லி எழுதும்
`ரஷ்ய விமானம் மீதான துருக்கியின் தாக்குதல்

ஆர் எஸ் எழுதும்
உங்கள் அருகில் ஒரு பாலியல் குற்றவாளி ?

தலைவர்கள் 2015 இல் இகுருவியை சந்தித்தவர்கள்

"சகிப்புத்தன்மை, சமத்துவம், நீதி மற்றும் மனித உரிமைகள்
போன்றவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கனடா
விளங்குகிறது!"
கனடிய நாடாளுமன்றத்தில் டிசெம்பர் 8 ஆம் நாள் கரி
ஆனந்தசங்கரி ஆற்றிய கன்னிப் பேச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE 25 CTCC 1991 - 2016

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின்

# 25வது ஆண்டு நிறைவு

# வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

– 2016 –

புரட்டாதி மாதம் 09 மற்றும் 10ம் திகதிகளில்

உலக நாடுகளில் இருந்து தமிழ் தலைவர்களும், கல்விமான்களும், வர்த்தகத் துறையில் சாதனை நிலை நாட்டிய தமிழர்களும், கனேடிய அரசியல் பிரமுகர்களும், பல்லின மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் எமது பிரமாண்ட நிகழ்வில் உங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள்.

எமது வெள்ளிவிழா நிகழ்வுக்கான
உங்களின் வர்த்தக அனுசரணை (sponsorship)
வரவேற்கப்படுகின்றன.

## இனியுமேன் தாமதம்?

இன்றே உங்கள் அனுசரணைக்கு (Sponsorship)
முந்திக்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

அஜித் சபாரட்ணம் : 647-401-5800
தலைவர்

ரோசான் தவரட்ணம் (Roshan) : 416-561-5733
வெள்ளிவிழா நிகழ்வு இயக்குனர்

CTCC
கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின்
வெள்ளிவிழாக் கொண்டாட்டம்
"இளைய சாதனைத் தமிழர்களை நோக்கி"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னையிலிருந்து அருள்

# தண்ணீரில் தவித்த சென்னை

சென்னையின் இயல்பு வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி, ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகளை அடித்து நொறுக்கி பல்லாயிரம் மக்களை அகதிகளாக்கி அறுநூறுக்கும் அதிகமான மனித உயிர்களைக் காவு கொண்டு லட்சக்கணக்கான சென்னை வாசிகளை பீதியில் உறையவைத்த துயரம் நடந்தேறி ஒரு கிழமை உருண்டோடி விட்டது.

ஆம், காட்டாற்று வெள்ளம் போல சென்னை நகரை சூறையாடிய வெள்ளத்தின் கோர தாண்டவம் முடிவுக்கு வந்து விட்டாலும் அது ஏற்படுத்திய துயர வடுக்கள் ஒரு தொடர்கதையாய் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மேற்குத் தாம்பரம் முடிச்சூர் மற்றும் புறநகர் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புளின் தரை மற்றும் முதல் தளங்களை மூழ்கடித்த வெள்ளம் ஓரளவுக்கு வடிந்து விட்டாலும் சில இடங்களில் ஒரு துயரத்தின் சாட்சியாய் இப்போதும் சேறும் சக்தியுமான சாக்கடைத் தண்ணீர் துர்வாசனையோடு மார்பளவிற்கு தேங்கி நிற்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சென்னை மக்கள் குடி நீருக்காய் தவமிருந்ததும் ஆழ்குழாய் கிணறுகள் கூட தண்ணீரின்றி வரண்டு கிடந்ததும் ஏதோ ஒரு கற்பனையை போலத் தோன்றுகிறது.

சென்னை நகரின் தெற்கு பகுதியில் ஓடி மெரினா கடற்கரையின் வலது கரையில் கடலோடு கலக்கும் அடையாறு ஆற்றில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கு சைதப்பேட்டை கோட்டூர்புரம் என அதன் கரையோரங்களில் துவங்கி திநகர் அண்ணாசாலை ஆழ்வார்பேட்டை தேனாம்பேட்டை என்று நினைத்தே பார்க்க முடியாத இடங்களிலெல்லாம் தன் கோர தாண்டவத்தை அரங்ற்றிவிட்டு அமைதியாகியிருக்கிறது.

அன்றைய சென்னையில் குறுக்கும் நெடுக்குமாக மூன்று நன்நீர் நதிகள் ஓடிக்கொண்டிருந்தன. அடையாறு, கூவம், பக்கிம்காம் கால்வாய் எனப்படும் இந்த மூன்று நதிகளும் ஒரு காலத்தில் நல்ல நீர் ஆதரங்களாகவும் போக்குவரத்து வழித்தடங்களாகவும் விளங்கின. கிழக்கிந்திய கம்பனியை கவர்ந்து புதிய சென்னைக்கு வித்திட்டவை இந்த ஆறுகள்தாம் என்றால் அது மிகையாகாது.

1639 ஆண்டில் தென் இந்தியாவில் தங்களுக்கு ஒரு தளத்தை அமைக்க விரும்பிய பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி இந்த மூன்று ஆறுகள் சூழ்ந்த ஒரு எழில் மிகுந்த பிரதேசமாக காட்சியளித்ததாலேயே சென்னையை தென்னிந்தியாவின் தலைமை கேந்திரமாக உருவாக்கினர். ஆக சென்னையின் வரலாறு இந்த ஆறுகளிடமிருந்துதான் ஆரம்பிக்றது.

ஆனால் நகரமயமாதலின் விளைவாக கழிவுகளும் சாக்கடைகளின் கல்க்கும் சங்கமமாக இந்த மூன்று நதிகளுமே கறுமை நிறம் பூண்டு நகர மறுக்கும் நதிகளாக தேங்கிக் கிடக்கின்றன.

இதன் கரையோரங்களில்தான் சமுகத்தில் புறக்கணிக்கப்பட்ட விளிம்பு நிலை மனிதர்களும் ஏழைகளும் குடிசைகள் அமைத்து ஆண்டாண்டு காலமாக வசித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு பருவமழை காலத்திலும் அவர்களின் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுவதும் பின்னர் வெள்ளம் வடிந்ததும் அவர்கள் சொற்ப நிவாரணங்களின் திருப்தியடைந்து விடுவதும். ஆண்டாண்டு நடக்கும் சாதாரண நிகழ்வு இது.

ஆனால் இந்த முறை சென்னையில் வழக்கத்தைவிட (டிசம்பர்1 மற்றும் 2 ஆம் தேதிகளில்) சற்று அதிகமாக அதாவது கடந்த முப்பத்தாறு ஆண்டுகள் பெய்த மழையின் அளவைக்காட்டிலும் சற்று அதிகமாக பெய்ய அது தலைநகரின் சாபமாகி விட்டது.

'இது ஒன்றும் அவ்வளவு பெரிய மழை அல்ல... இதைவிட பெரிய மழையையெல்லாம் சந்தித்திருக்கிறோம் ... ஆனால் இந்த மழை பெரு வெள்ளமாய் விஸ்வரூபமெடுக்க காரணம் ஊழல் வாதிகளும் ஏரிகளைக் கூறுபோட்டு விற்றுவிட்ட ரியல் எஸ்டேட்

சென்னையை வாட்டி வதக்கிய இந்த வெள்ளப்பெருக்கு தமிழக அரசியலிலும் சில எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்றே கருதப்படுகிறது.

ஏற்கனவே சென்ற மாதம் பெய்த மழை சேதங்களை பார்வையிட வந்த ஜெயலலிதா காரிலிருந்து இறங்காமலே தேர்தல் பரப்புரைக்காக வந்தது போல வந்து சென்றது ஒரு புறம் அதிர்வு அலைகளை உண்டாக்கி இருக்க அடிக்கொரு தரம் அம்மாவின் புகழ்பாடும் அமைச்சர்களோ ஆளும் கட்சி எம்.எல்.ஏக்களோ கவுன்சிலர்களோ தற்போது மக்கள் பாதிக்கப்பட்டவுடன் அவர்களைத் தேடி வராதது மக்களை எரிச்சலடைய வைத்திருக்கிறது.

இந்த நிலையில் பெரும் வெள்ளச்சேதம் ஏற்பட்ட பிறகும் முதலமைச்சர் ஜெயலலிதா பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க வராததும் பின்னர் பிரதமர் மோடி சென்னை வெள்ளச் சேதங்களை பார்வையிட வருகிறார் என்று அறிவிப்பு வெளியானதும் அவசர அவசரமாக ஒரு உலங்கு வானூர்தியை எடுத்துக் கொண்டு அரைமணி நேரம் வானில் வட்டமிட்டு வெள்ளச்சேதப் பகுதிகளை முதலமைச்சர் சுற்றிப்பார்த்துவிட்டு பாதிக்கப்பட்ட மக்கள் எவரையும் பார்க்காமல் சென்று விட்டதும் பொது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோக நிவாரணப் பொருட்களில் அம்மாவின் படத்தை ஸ்டிக்கர்களாக ஒட்டுவதிலேயே அரசு குறியாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் சென்னையின் துயர் கண்டு கிளம்பி வந்த தன்னார்வ தொண்டர்கள் கொண்டு வரும் நிவாரணப்பொருட்களை பிடுங்கும் அதிமுக கட்சிக்காரர்கள் அவற்றில் அம்மா படத்தை ஒட்டச்சொல்லி வற்புறுத்துவதாகவும் நிவாரணப் பொருட்களை தாங்களே வினியோகிப்போம் என்று மிரட்டுவதாகவும் சில இடங்களில் அடித்து உதைப்பதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

இது பற்றி தொடர்ந்து ஊடகங்களில் செய்திகள் வந்ததால் அ.இ.அ.தி.மு.க. சார்பில் இவ்வாறு எவராவது நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கு இடையூறு செய்தால் சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக அதிமுக தலைமை நிலையத்திற்கு தகவல் தருமாறு தெரிவித்துள்ளது.

உண்மையில் அ.இ.அ.தி.மு.க. நிர்வாகம் இவ்வாறு தவறு செய்பவர்கள் மீது உளபூர்வமாக நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் சம்மந்தப்பட்டவர்களை காவல் துறையினரிடமல்லவா புகார் அளிக்கும்படி அறிவுறுத்திருக்க வேண்டும்.

சென்னையில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அம்மாவின் பெயரை சொல்லிக்கொண்டு வந்த அமைச்சர்களை முதலமைச்சர் ஜெயலலிதாவின் தொகுதியிலேயே மக்களால் முற்றுகையிடப்பட்டு விரட்டப்பட்ட சம்பவங்களும் அரங்கேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபியாக்களுமே காரணம்..'! என்ற ஒரு கருத்தும் ஒரு மட்டத்தில் பேசப்படுகிறது.

அதாவது இந்தியாவிலேயே அதிகமான ஏரிகள் நிறைந்த மாவட்டமாக முதலிடம் பெற்றது செங்கல்பட்டு மாவட்டம். சென்னையை ஒட்டி அமைந்த இந்த மாவட்டத்தில்தான் புகழ் பெற்ற வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் கூட அமைந்திருக்கிறது. சென்னையிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் நூற்றுக்கும் அதிகமான இருந்தன.

கடந்த முப்பது ஆண்டுகளாக படிப்படியாக இந்த ஏரிகள் கொஞ்சம் கொஞ்சமாக கபளீகரம் செய்யப்பட்டு அந்த ஏரிகள் இருந்த இடங்களெல்லாம் தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளாகவும் வீட்டு மனைகளாகவும் தொழில் வளாகங்களாகவும் உருமாறியிருக்கின்றன.

அதுவும் கடந்த பத்து ஆண்டுகளில் சென்னை புற நகர் பகுதிகளில் புற்றீசல்போல புறப்பட்டு வந்த கிரிமினல் பின்னணியும் அரசியல் பின்னணியும் ஒருங்கே அமையப்பெற்ற ரியல் எஸ்டேட் மாபியாக்கள் ஆட்சியாளர்களின் துணையோடு இடைப்பட்ட காலத்தில் தண்ணீரின்றி வறண்டு கிடந்த ஏரிகளையும் அந்த ஏரி தண்ணீரை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாய நிலங்களையும் கூறு போட்டு வீட்டு மனைகளாக விற்று காசாக்கி விட்டாட்கள்.

ஏரிகள் வறண்டு இருந்த காலத்தில் அதை தூர் வாரி பராமரிக்கவேண்டிய அரசுகள் அவற்றை கூறு போட்டு விற்க உடந்தையாய் இருந்ததன் விளைவு ஏரிகளில் சரணடைந்து விவசாயத்தை செழுமையடைய வைத்திருக்க வேண்டிய மழை நீர் ஏரிகளைத் தேடி வந்து அவற்றைக் காண முடியாத்தால் வீடுகளுக்குள் விருந்தினராக புகுந்துகொண்டது.

இது ஒரு புறமிருக்க சென்னைக்கு குடி நீர் ஆதாரமாக விளங்கும் செம்பரம்பாகக்ம் ஏரி, புழல் ஏரி ஆகியவையும் அவற்றின் கொள்ளளவு நிறைந்ததால் திறந்து விரப்பட அவ்வாறு திறந்து விடப்பட்ட நீர் அடையாற்றுக்குள் புகுந்து விட தூர் வாங்காமலும் குப்பை மேடாகவும் காட்சியளித்த அடையாறு நிரம்பி அதன் கரைகளைத் தாண்டி அந்த தண்ணீர் நதி நகருக்குள் பிரவேசித்து விட்டது.

பல்வேறு ஏரிகளிலும் சேர வேண்டிய நீரும் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறக்கப்பட்ட நீரும் சேர்ந்து சென்னையின் வரலாற்றில் இல்லாதவாறு ஒரு மாபெரும் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியது. வழக்கமாக ஒவ்வொரு மழைக்காலத்திலும் சந்திக்கிற தண்ணீர் தானே என்று அலட்சியமாக இருந்த கரையோரக் குடிசைகளை சுனாமி போல எழுந்து வெள்ளம் அடித்துச் சென்றது.

அடையாற்றின் பாலங்களை எகிறிக் குதித்து கோரதாண்டவ மாடிய தண்ணீர் அசோக்நகர் ஜாபர்கான் பேட்டை பாலத்தை மூழ்கடித்து கோடம்பாக்கம் வரை பாய்ந்தோடியது.

இங்கே தண்ணீர் வராது என்று நம்பிக்கையுடன் இருந்த புதிய தலைமுறை தொலைக்காட்சி ஜெயா தொலைக்காட்சி வேந்தர் தொலைக்காட்சி ஆகிய தொலைக்காட்சி நிறுவனங்களின் தரைத்தளத்தை தாண்டி இரண்டாவது தளத்திற்குள்ளும் வெள்ளம் நுழைய அதன் ஊழியர்கள் மொட்டை மாடிகளில் தஞ்சம் அடைய வேண்டியதாயிற்று..

ஈக்காடுதாங்கல் பகுதியில் மேட்டுக்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் வீடுகளுக்குள் நுழைந்த வெள்ளத்துக்கு பலரும் குடும்பத்தோடு பலியாயினதோடு வெள்ளப்பகுதியை கடந்து தப்பிக்க முயற்சித்த பலரையும் வெள்ளம் இழுத்துச் சென்றது.

அடையாரு ஆற்றங்கரையோர குடியிருப்புகளிலும் முடிச்சூர் வேளச்சேரி பகுதிகளிலும் முதல் இரண்டாம் தளங்கள் வரை தண்ணீர் புகுந்துவிட மொட்டை மாடிகளில் தஞ்சம் புகுந்த இலட்சக்கணக்கான மக்கள் பீதியுடன் பொழுதை கழிக்க ஆரம்பித்தார்கள்.

யாருக்கும் யாரும் உதவி செய்ய வராத நிலையில் கட்டுக் கோப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு இஸ்லாமிய இயக்க இளைஞர்கள் மீனவர்களின் படகுகளோடு களத்தில் குதித்து அரசுக்கு முன்பாக மீட்புப் பணிகளில் ஈடுபட ஆரம்பிக்க அதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தன் ஆர்வலர்கள் கட்டுமரம் போன்ற நாட்டுப்படகுகளில் வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.


அதன் பிறகே மாநகராட்சியும் தமிழக அரசும் நிலமையின் தீவிரத்தை உணர்ந்து நிவாரணப் பகுதிகளுக்கு விரைந்தன.ராணுவமும் கடற்படையும் உலங்கு வானூர்திகள் மூலம் மீட்பு நடவடிக்கைகளிலும் உணவுப் பொட்டலங்களையும் வழங்கியது..

எண்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டதாக அரசு அறிவித்திருந்தாலும் ஆங்காங்கே தேங்கிக் கிடக்கும் சாக்கடையும் சுகாதார சீர்கேடுகளும் அடுத்த கட்டமாக தொற்று நோய்களுக்கு வித்திடுமோ என்ற அச்சத்தை மக்களிடையே தோற்றுவித்திருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதிவலைகளும், சி.வி.விக்னேஸ்வரனும்!?



**இகுருவிக்காக புருஜோத்தமன் தங்கமயில்**

மத்திய அரசாங்கத்தினால் வடக்கு மாகாண சபைக்கு 2015ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில்,பெருமளவான நிதி வேலைத்திட்டங்களில் முறையாக பயன்படுத்தப்படாமல் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. கடந்த ஆண்டும் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருந்தது.

ஆயுத மோதல்களினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணம் உள்ளக அபிவிருத்தியை அதிகமாக எதிர்பார்த்துள்ளது. அதனையே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். “மத்திய அரசாங்கம் மற்றைய மாகாணங்களோடு வடக்கு மாகாணத்தினை ஒப்பிடக் கூடாது. வடக்கின் தேவைகள் அதிகம். அதனைப் புரிந்து கொண்டு நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும்” என்று ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களைச் சந்திக்கும் போதும், வடக்கு மாகாண சபையின் அமர்வுகளின் போதும் குறிப்பிட்டு வந்திருக்கின்றார். அப்படிப்பட்ட நிலையில், ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் மீளவும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படும் சூழலினை எவ்வாறு புரிந்து கொள்வது என்கிற அதிருப்தி எழுவது இயல்பானது.

அப்படிப்பட்ட நிலையில், வடக்கு மாகாண சபை மற்றும் முதலமைச்சரின் வினைத்திறன் தொடர்பில் கேள்வியெழுப்பும் பேஸ்புக் பதிவொன்றில் ‘ஈழத்து சீமான் சி.வி.விக்னேஸ்வரன்’ என்றொரு பின்னூட்டம் இடப்பட்டிருந்தது. ‘ஈழத்து சீமான்’ என்கிற அடைமொழியினை முன்வைத்தவர், என்ன எண்ணத்தில் எழுதினார் என்று தெரியவில்லை. ஆனால், அந்த அடைமொழி குறிப்பிட்டளவான விடயங்கள் தொடர்பில் உரையாடல்களை தோற்றுவிக்குமளவுக்கு இருந்தது. அது, தமிழ்த் தேசிய அரசியல் சார்பிலும், வடக்கு மாகாண சபையின் செயற்பாடு மற்றும் போக்கு தொடர்பிலுமாகும். (‘ஈழத்து சீமான்’ சி.வி.விக்னேஸ்வரன் என்கிற பின்னூட்டத்திற்கு சொந்தக்காரர் பிரித்தானியா வாழ் வைரவநாதன் சிவரதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவராக மட்டுமின்றி, தமிழ்த் தேசிய அரசியலில் முன்னிலை தலைவர்களில் ஒருவராகவும் தன்னுடைய நிலையை உயர்த்திக் கொண்டிருக்க வேண்டிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அந்த இடத்தினை அடைந்திருக்கின்றாரா, அதனை மக்கள் மனதார ஏற்றுக்கொண்டிருக்கின்றார்களா? என்பது தொடர்பில் சிக்கலான உரையாடல் களம் பல தளங்களிலும் விரிந்திருக்கின்றது. அந்த உரையாடல்கள் அதிக தருணங்களில் சார்ப்பு நிலையில் இருந்து முன்னெடுக்கப்பட்டாலும், மூன்றாம் தரப்பாக இருந்து அணுகப்படும் போது சி.வி.விக்னேஸ்வரனின் தற்போதைய நிலையை இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

“பல்வேறு தரப்புக்களினால் விரிக்கப்பட்ட வலையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிந்து கொண்டே மாட்டியிருக்கின்றார்.” இதுதான், இந்தக் கட்டுரையின் இறுதி முடிவு. கட்டுரையின் இடைநடுவில் முடிவினை எழுதிவிட்டு எப்படி அதன் அடுத்த கட்டத்தினை நோக்கி நகர முடியும் என்கிற சந்தேகம் வாசகர்களுக்கு எழலாம். அதுவொன்றும் அவ்வளவு சிக்கலான விடயமல்ல. ஏனெனில், முதலமைச்சரின் இன்றைய நிலை தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் ஆர்வலர்கள் பலருக்கு நல்ல தெளிவிருக்கின்றது. ஆனால், அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் சார்ப்பு நிலைகள் தான் பல விடயங்களை வெளிப்படையாக பேசுவதைத் தவிர்க்க வைத்திருக்கின்றது. அது, தொடர்ச்சியாக போலியான நம்பிக்கைகள் சிலவற்றை எம்மிடையே தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய அரசியலில் முன்னோக்கி நகர்கின்றார். அவருக்கான முதன்மையிடம் தென்னிலங்கை அரசியல் சூழலுக்கு சிக்கலானது என்பதை உணர்ந்து ஆரம்பத்திலிருந்தே காய்களை நகர்த்த ஆரம்பித்தவர்களில் தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க முக்கியமானவர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் ஒரே நிலையில் வைத்தே பெரும்பாலும் அணுகினார். அவருக்கு, நெகிழ்நிலை— வன்நிலை தமிழ்த் தலைமைகள் தொடர்பில் எல்லாம் அவ்வளவு அக்கறையிருக்கவில்லை. அவர், தமிழ்த் தலைமைகளில் நெகிழ்நிலைத் தலைமைகள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீரசிங்கம் ஆனந்தசங்கரி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டவர்களையே கருதினார். அதுபோக, வடக்கு— கிழக்கில் தமிழ்த் தலைமைகள் என்பது தன்னுடைய கட்சிகளிலிருந்து உருவாக்கப்பட வேண்டும் என்கிற வெற்றுக்கனவோடு களமாற்றியவர். அப்படிப் பட்டவருக்கு இரா.சம்பந்தனும், சி.வி.விக்னேஸ்வரனும் ஒன்றாக தோற்றுவதில்லை அவ்வளவு பிரச்சினையில்லை.

ஆனால், ரணில் விக்ரமசிங்க அப்படிப்பட்டவர் அல்ல. அவர், தமிழ்த் தேசிய அரசியல்— விடுதலைப் போராட்டங்களில் என்ன மாதிரியான தலையீடுகளைச் செய்து, அவற்றினை கலைத்திருக்கின்றார் என்று எமக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சூழ்நிலையில், ரணில் விக்ரமசிங்கவின் கொள்கை— கோட்பாடுகள்— இராஜதந்திர ஆளுமை செலுத்தும் தென்னிலங்கை அரசியலை எதிர்கொள்வது தொடர்பிலான நிலைப்பாட்டில் மிகவும் கவனமாகவும், காத்திரமாகவும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானது. மஹிந்த ராஜபக்ஷ என்கிற காட்டாட்சிக்கு எதிராக ஒன்றிணைந்த தமிழ் மக்கள், ஆளுமையுள்ள நரித்தனமாக தலைவரான ரணில் விக்ரமசிங்கவினை எதிர்கொள்வது தொடர்பில் கணிசமான அக்கறையை வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியல் ஒருங்கிணைவை கலைப்பது தொடர்பில்ரணில்விக்ரமசிங்கஎறிந்த முதற்கல் சி.வி.விக்னேஸ்வரனை நோக்கியிருந்தது. ஏனெனில், தமிழ் மக்களின் ஆணைபெற்று சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களில் முதன்நிலையில் இருப்பவரும், அதிகமாக உணர்ச்சி வசப்படுபவருமான ஒருவரை நோக்கிய எறியப்படும் கல்லே அதிகமாகவிளைவுகளைஏற்படுத்தும். அதனை வைத்துக் கொண்டு ஒருங்கிணைவைக் கலைப்பது இலகுவானது என்பது. அந்த சதி வலைக்குள் தெரிந்து கொண்டே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாட்டிக் கொண்டார். (அது, சி.வி.விக்னேஸ்வரனை வெளிப்படையாக பொய்யர் என்று தென்னிந்திய ஊடகமொன்றிடம் கூறுமளவுக்கும், அவரை நிராகரிக்கும் அளவுக்கும் சென்றது அதன் தொடர்ச்சியை வாசகர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்.)

தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பில் அதிக அக்கறையான நிலைப்பாட்டின் பக்கத்தில் முதலமைச்சர் நகர்ந்து 24 மாதங்கள் தான் ஆகின்றது. ஆனால், அதனை அவர் பிரதிபலித்த விதம் என்பது யதார்த்த அரசியல் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள மறுக்கும் அளவுக்கான ஆர்ப்பாட்டத்தன்மை கொண்டது. அது, ஊடகங்களில் கவனம் பெற்று மக்களிடம் அபிமானமொன்றை ஆரம்பத்தில் பெற்றுத் தந்தாலும், போகப்போக, முதலமைச்சரின் மூப்பில்லாத அரசியல் வெளிப்பாடாக அது கொள்ளப்பட்டது. அதன், அடுத்த கட்டம், கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது வெளிப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தலில் யாரையும் ஆதரிக்கப்போவதில்லை. மௌனியாகின்றேன் என்று அறிவித்தவர், தேர்தல் நேரத்தில் இரண்டு அறிக்கைகளை விட்டு மக்களைக் குழப்பியதில் மக்களுக்கு ஏகப்பட்ட வருத்தம். ஏனெனில், தேர்தல் களத்தில் அவரின் அறிக்கைகள் பல்வேறு தரப்புக்களினால் கையாளப்பட்டது. அதனை, மக்கள் அவ்வளவுக்கு இரசிக்கவில்லை. அதனை, அவர் உணராமலும் இல்லை. அந்த உணர்நிலைக்குப் பின்னராக இன்றைய அவரின் நிலை என்பது பெரு எழுச்சி பெற்ற தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் பெரு வீழ்ச்சிக்கான ஆரம்பத்தில் வந்து நிற்கின்றது.

இன்னொரு பக்கம், தமிழ்த் தேசிய அரசியலின் ஏக தலைமையாக மாற வேண்டும் என்று கருதி நகரும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு சி.வி.விக்னேஸ்வரனின் அரசியல் போக்கு மற்றும் நிலைப்பாடுகள் அதிர்ச்சியூட்டின. தாமே முன்னிறுத்திய ஒருவர் தமக்கு எதிராகவே திரும்பும் சூழலைக் கையாள்வது தொடர்பிலான நிலைப்பாடு அது. அப்படிப்பட்ட நிலையில், பாராளுமன்றத் தேர்தலில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நடந்து கொண்ட விடயத்தைப் பிடித்துக் கொண்டு அதனைக் கையாள வேண்டும் என்பதில் தமிழரசுக் கட்சியின் தலைமை தெளிவாக இருந்தது. அதனை, குறிப்பிட்டளவில் செயற்படுத்தியும் விட்டது.

"பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒருவகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்றவர்" என்றொரு விடயத்தை நண்பர் ஒருவர் அண்மைய உரையாடலொன்றின் போது என்னிடம் குறிப்பிட்டார். எனக்கு திக்கென்றது. ஆனால், அதற்கான பொழிப்புரை இவ்வாறு இருந்திருக்க வேண்டும். அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளின் நகர்வு என்பது இராணுவ ரீதியிலானதாக இருந்தாலும், அரசியல் ரீதியிலானதாக இருந்தாலும் இறுதி முடிவுகளை தலைவர் பிரபாகரனே எடுத்து வந்திருக்கின்றார். தன்னுடைய முடிவுகளை செயற்படுவது தொடர்பிலான நிலைப்பாட்டிலேயே மற்றவர்களை நகர்த்துவார். அப்படித்தான், எம்.ஏ.சுமந்திரனும் செயற்படுகின்றார். எவ்வளவு விமர்சனங்கள் இருந்தாலும், தான் முன்வைக்கும் விடயங்களை செயற்படுத்துவது தொடர்பில் அவர் உறுதியாக இருக்கின்றார். மக்களின் அபிமானம் பெற்றவரா இல்லையா என்பதெல்லாம் அவரினால் கணக்கில் எடுக்கப்படுவது இல்லை. அப்படியான நிலையொன்றுக் குள்ளேயே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான தன்னுடைய நிலைப்பாட்டையும், நகர்வையும் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்து குறிப்பிட்டளவான வெற்றியைப் பெற்றிருக்கின்றார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை (தமிழரசுக்) கட்சியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்கிற தன்னுடைய கோரிக்கை அடிப்படை அற்றது என்பது எம்.ஏ.சுமந்திரனுக்கு தெரியும். ஏனெனில், சி.வி.விக்னேஸ்வரன் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் இல்லை. மாறாக, அந்தக் கட்சி சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டவர். அவ்வளவுதான். ஆனால், அது தோற்றுவிக்கும் அதிர்வும், அதன் போக்கில் நிகழ்த்தப்படவுள்ள உரை யாடல்களும் சி.வி.விக்னேஸ்வரன் மீதான அபிமானத்தை குறிப்பிட்டளவு அகற்றும் என்பது

> **6** பாராளுமன்றத் தேர்தலில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நடந்து கொண்ட விடயத்தைப் பிடித்துக் கொண்டு அதனைக் கையாள வேண்டும் என்பதில் தமிழரசுக் கட்சியின் தலைமை தெளிவாக இருந்தது. அதனை, குறிப்பிட்டளவில் செயற்படுத்தியும் விட்டது.

ரீதியிலானது அது. ஏனெனில், சி.வி.விக்னேஸ்வரனை முன்னிறுத்தி சில தரப்புக்கள் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் மாற்றுத் தலைமைகளாக உருவாகிவிடக் கூடாது என்பது தொடர்பிலான விடயம் அது.

அப்படிப்பட்ட நிலையில், தமிழரசுக் கட்சி தன்னுடைய ஏக தலைமைக்கான பயணத்தில் சி.வி.விக்னேஸ்வரன் எனும் தடையை இலகுவாகக் கடப்பதற்கு வலையொன்றை விரித்தது. அதிலும், சி.வி.விக்னேஸ்வரன் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு சிக்கிக் கொண்டார். இதில், இன்னும் சில வருடங்களில் அரசியல் ஓய்வுபெற்றுக் கொள்ளப் போகும் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இழப்பு என்று ஏதும் இல்லை. ஆனால், அவரை முன்னிறுத்தி நகர எத்தணித்த தரப்புக்கு பெரும் இழப்பாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகும் உரிமை சி.வி.விக்னேஸ்வரனுக்கு உண்டு. அதனை தீர்மானிப்பது மக்களும், கட்சியுமே" என்றார். அத்தோடு, நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. அவர் இன்னொரு விடயத்தையும் சேர்த்துக் கொண்டார், "முதலமைச்சருக்கு ஆதரவாக குப்பைத் தொட்டியில் போடப்பட்ட ஆனந்த சங்கரியும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இருக்கின்றனர். இதனால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை." என்றார். முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்பில் கவனமாக கருத்துக் கூறுவது போல ஆரம்பத்தில் காட்டிக் கொண்டாலும், இறுதிப் பகுதியில் எள்ளலான விடயத்தை முன்வைத்து முடித்தார். இப்படிப்பட்ட நிலையில் தான், சி.வி.விக்னேஸ்வரனை தமிழரசுக் கட்சி தற்போது அணுகுகின்றது.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அரசியல் நகர்வில் ஏற்பட்ட இவ்வாறான சிக்கல்கள், அதிகமான உணர்ச்சி வசப்படுதல்களின் போக்கில் ஏற்பட்டது. செயற்பாட்டுகள் அதற்கான கள யதார்த்தம் பற்றிய உணர்திறன் பற்றி அவர் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. அவரோடு இருப்பவர்களும் அது தொடர்பில் அக்கறை கொள்வதாக தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலையில், பல்வேறு தரப்புக்களினால் விரிக்கப்பட்ட வலையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிந்து கொண்டே மாட்டி, தன்னுடைய இடத்தினை இழக்க ஆரம்பித்திருக்கின்றார் என்பதுதான் உண்மை.


# உங்கள் வசதிக்கு ஏற்ற, அதிபயன் தரும் ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும், உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு, வரிக் கழிவு பெற்ற சேமிப்பு, ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!

- கொடிய நோய்க்குரிய காப்புறுதி
- அடமானக்கடனுக்குரிய காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

- Disability Insurance
- Final Expense Insurance
- பிரயாணக் காப்புறுதி
- சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி

**Term Life Insurance**

| Age | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 18 | 15 | 19 | 15 | 21 | 17 | 28 | 22 | 43 | 31 | 67 | 48 |
| 500K | T20 | 36 | 25 | 37 | 27 | 40 | 30 | 56 | 40 | 88 | 60 | 148 | 97 |
| 1 Mill | T20 | 68 | 45 | 68 | 48 | 75 | 53 | 106 | 75 | 171 | 115 | 288 | 188 |
| **Permanent Life Insurance - Premium Never Change** | | | | | | | | | | | | | |
| 200K | WL | 81 | 71 | 98 | 89 | 121 | 105 | 150 | 131 | 196 | 166 | 233 | 200 |
| 500K | WL | 188 | 164 | 232 | 201 | 289 | 251 | 364 | 313 | 476 | 401 | 590 | 488 |
| 1 Mill | WL | 363 | 310 | 450 | 387 | 566 | 484 | 712 | 606 | 935 | 791 | 1129 | 965 |
| **Critical Illness Insurance- 100% Money Back** | | | | | | | | | | | | | |
| 50K | T75 | 44 | 42 | 56 | 51 | 70 | 65 | 90 | 85 | 120 | 113 | 177 | 148 |
| 100K | T75 | 76 | 72 | 96 | 88 | 123 | 112 | 157 | 145 | 212 | 205 | 321 | 265 |

முதலீட்டுத் திட்டங்கள்
- RRSP • RESP
- TFSA



RBC Insurance, Manulife, Industrial Alliance, La Capitale Financial Group, Assumption Life, BMO Insurance, Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வருடம் இகுருவியுடன்

# மீண்டும் ஒரு ஆண்டு எம்மிடமிருந்து விடைபெறுகின்றது.



இகுருவிக்காக மேனகா சத்தியமூர்த்தி

கார்டூன் : அஸ்வின்

2015ஆம் ஆண்டு விடைபெறும் நாட்கள் இவை. மீண்டும் ஒரு புதிய வருடத்தின் நாட்கள் எண்ணப்படுகின்றன. ஒரு ஆண்டுக்கு விடைகொடுத்து இன்னுமொரு ஆண்டின் எதிர்பார்ப்போடு வாழ்க்கைச் சக்கரம் நகர்கின்றது. பல்வேறு நிகழ்வுகள் மூலம் இந்த வருடம் தனது இருப்பை வரலாற்றில் பதித்துச் செல்கின்றது.

எம்மைக் கடந்து செல்லும் 2015ஆம் ஆண்டு கனடாவிலும் தாயகத்திலும் செய்திகளின் முதலிடம் பிடித்தவர்களை இணங்கண்டு இந்த மாதத்தின் முகப்பு பக்கத்தை அலங்கரித்துள்ளோம். கடந்த வந்த ஆண்டுகளில் இவர்களை இகுருவி சந்தித்து அவர்களின் கருத்துக்களை எமது வாசகர்களிடம் எடுத்து வந்திருப்பதில் பெருமை கொள்கின்றது. இது தொடரும் வகையில் இகுருவியின் நகர்வுகள் இடம்பெறும்

### கனடிய பிரதமர் ஜஸ்டின் ருடோ



இந்த வருடம் தற்போதைய கனடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோவை இகுருவி சந்தித்தபோது "மாற்றத்திற்கான நேரம் இதுவென கனடியர்கள் நம்புகின்றனர்" என நம்பிக்கை பொங்கும் வகையில் தெரிவித்திருந்தார். "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா" என்பதை போல் தந்தையின் அரசியல் ஆளுமைகளை தன்னக்தே கொண்ட ஜஸ்டின் ரூடோ நவம்பர் மாதம் 4ஆம் திகதி கனடாவின் 23ஆவது பிரதமராக பதவி ஏற்றுக்கொண்டார்.

கடந்த யூன் மாதம் ஜஸ்டின் ரூடோவைச் சந்தித்போது அவரது தலைமையிலான லிபரல் கட்சி கனடாவின் மூன்றாவது நிலை அரசியல் கட்சியாக நாடாளுமன்றத்தில் இருந்தது. 42ஆவது கனடிய பொதுத் தேர்தலை 36 ஆசனங்களுடன் எதிர்கொண்ட லிபரல் கட்சி கனடாவின் அண்மைய வரலாற்றில் நிகழ்ந்த மிக நீண்ட தேர்தல் பிரச்சாரத்தின் பின்னர் 184 ஆசனங்களை வெற்றிகொண்டது. இந்த வெற்றிக்கு ஜஸ்டின் ரூடோவின் மக்கள் மத்தியிலான அங்கீகாரம் பெரிதும் உதவியது.

41ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வரலாற்று ரீதியிலான தோல்வியை எதிர்கொண்ட லிபரல் கட்சியின் தலைமைப் பதவியை 2013ஆம் ஆண்டு வெற்றிபெற்ற ஜஸ்டின் ரூடோவிடம் கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்த நிலையில் தலைமைப் பதவியை வெற்றிபெற்ற இரண்டு வருடங்களில் சவால்கள் நிறைந்த ஒரு தேர்தலை எதிர்கொண்டு கட்சித் தலைவராக முதலாவது பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகியுள்ளார்.

லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற காலத்தில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மேற்கொண்ட பயணங்கள் மற்றும் சமூகத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்புக்களில் இருந்து "கனடியர்களின் தேவையும் எதிர்பார்ப்பும் என்ன என்பதை அறிந்து வைத்திருக்கின்றேன்" என தேர்தலை எதிர்கொள்ளும் தயார்படுத்தல் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் இகுருவியிடம் ஜஸ்டின் ரூடோ தெரிவித்த கருத்துக்களை இங்கு குறிப்பிடுவது அவசியம்.

2013ஆம் ஆண்டில் லிபரல் கட்சியின் தலைமைப் பதவியை ஜஸ்டின் ரூடோ வெற்றிகொண்ட பின்னர் இகுருவி அவரை பேட்டி கண்டிருந்ததுடன் கனடாவின் அடுத்த பிரதமர் இவரே என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருந்தது. தேர்தல் பிரச்சார காலத்தில் ரொறன்ரோவிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஜஸ்டின் ரூடோ கலந்துகொண்ட தேர்தல் பிரச்சாரங்களை இகுருவி பதிவு செய்திருந்தது. கனடாவின் 23ஆவது பிரதமராக ஜஸ்டின் ரூடோ பதவியேற்ற நிகழ்வையும் இகுருவி பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

### நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி



Scarborough-Rouge Park தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் சட்டத்தரணியான சத்தியசங்கரி ஆனந்தசங்கரி என்னும் கரி ஆனந்தசங்கரி. கனடாவின் வரலாற்றில் ஆளும் கட்சியொன்றின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை கரி ஆனந்தசங்கரியைச் சேரும். புதிதாக வரையப்பட்ட Scarborough-Rouge Park தொகுதியின் லிபரல் கட்சியின் வேட்பாளர் தேர்தலில் இருந்து கரி ஆனந்தரசங்கரி பெரும் சவாலை எதிர்கொண்டிருந்தார். இந்த வேட்பாளர் தேர்தலிலும் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறிக்கொள்ளும் தமிழர் அமைப்பின் மிகப்பெரும் எதிர்ப்பை வெற்றிகொண்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி.

தேசியம், தலைமை, மேலிடம், அமைப்பு என்ற சொற்பதங்களுக்குள் தம்மை மறைத்து இலாபம் ஈட்டியவர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய பின்னடைவாக கரி ஆனந்தசங்கரியின் தேர்தல் வெற்றியைக் கருதலாம். இது கரி ஆனந்தசங்கரியின் வெற்றியாக மாத்திரம் நோக்கப்படுவது தவறாகும்.

கரி ஆனந்தசங்கரியின் இந்த தேர்தல் வெற்றியின் பின்னால் ஒரு சமூகம் திரண்டது. இளைஞர்கள், சிறுவர், வர்த்தகர்கள், வயோதிபர் என ஒரு பெரும் கூட்டம் கரி ஆனந்தசங்கரியின் வெற்றியை உறுதிப்படுத்தியது. சுமார் 30 ஆயிரம் விரும்பு வாக்குக்களை இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற கரி ஆனந்தசங்கரிஎதிர்வரும்காலங்களில் வெற்றிபெறக்கூடிய தொகுதிகளில் தமிழ் வேட்பாளர்களை கனடாவின் பிரதான அரசியல் கட்சிகள் நிலை நிறுத்துவதற்கு ஒரு ஆரம்பத்தை வகுத்துள்ளார்.

கரி ஆனந்தசங்கரியின் லிபரல் கட்சி வேட்பாளர் நியமனத்தில் இருந்து அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற வரையிலும் அவரது ஒவ்வொரு நிகழ்வையும் இகுருவி ஒரு சமூக ஊடகமாக பதிவு செய்ததில் பெருமை கொள்கின்றது.

### வட. மாகாண முதல்வர் சி.வி.விக்கேஸ்வரன்



உயர் நீதிமன்ற நீதிபதியான சி.வி.விக்கேஸ்வரன் வட மாகாணத்தின் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் அரசியல் ரீதியாக அவர் மேற்கொள்ளும் நகர்வுகள் மூலம் தாயக மற்றும் புலம்பெயர் மக்கள் மத்தியில் நம்பிக்கைக்கு உரியவராக மாறியுள்ளார். தற்போது தமிழர்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீதான முதல்வர் விக்னேஸ்வரனின் விமர்சனத்தின் ஆரம்பப் புள்ளியில் இகுருவி இருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் இகுருவி யாழ்ப்பாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வர் சி.வி.விக்னேஸ்வரசை சந்தித்து பேட்டி கண்டிருந்தது. இந்தப் பேட்டியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் நடவடிக்கைகள் குறித்து தனது அதிருப்தியினை விக்னேஸ்வரன் வெளிப்படுத்தினார். தலைவர்கள் மக்களோடு மக்களாக இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு இருந்தால் மட்டுமே மக்களின் அல்லல்பாடுகளை புரிந்து கொண்டு அதற்கான தீர்வுகளை காண்பதற்கு அவர்களால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் கூறினார். மாறாக இந்தியாவில் தமது குடும்பத்தினரை வாழ வைத்து விட்டு தேர்தல் காலங்களில் மட்டும் மக்களை சந்திப்பதற்காக அவர்கள் வந்து போவது ஏற்புடையதல்ல என்று அவர் விமர்சித்திருந்தார். தேர்தல் வேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மற்றும் வேட்டபாளர்கள் தொடர்பான முதலமைச்சரின் இந்த கருத்து மிகப்பெரிய அதிர்வினை ஏற்படுத்தியிருந்தது. இதனை தொடர்ந்து இந்த வருடம் அமெரிக்காவில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பான பெட்னாவில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவிற்கு வருகை தந்த வடமாகாண முதல்வரை இகுருவி மீண்டும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

### இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி



உலகம் சுற்றும் வாலிபனாக விமர்சிக்கப்படும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கனடாவுக்கு கடந்த ஏப்ரல் மாதம் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டபோது அவருக்கு நட்சத்திர வரவேற்பு வழங்கப்பட்டது. கனடாவில் பிரதமர் மோடி பங்கேற்க நிகழ்வுகள் அனைத்திலும் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டனர். பிரதமர் நரேந்தர மோடியுடன் முன்னாள் கனடிய பிரதமர் ஹாப்பர் கனடாவின் பங்வேறு பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டிருந்தார். குறிப்பாக இந்தியப் பிரதமரின் விமானத்தில் கனடிய பிரதமரும் பயணம் மேற்கொண்டமை பெருமளவில் பேசப்பட்டது. பிரதமர் மோடிக்கு கனடாவில் கிடைத்த இந்த வரவேற்பை தனக்கு சாதமாக பயன்படுத்த முன்னாள் பிரதமர் ஸ்ரிபன் முயன்றதாக குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் எழுந்தன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி கனடாவிற்கு விஜயம் மேற்கொண்ட வேளை இகுருவி அவரை சந்தித்தது. பழமைவாதக் கட்சியின் ஒன்ராறியோ மாகாண தலைமைக்கான போட்டியில் ஈடுபட்டிருந்த பற்றிக் பிறவுன் அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்தில் இந்திய பிரதமர் கலந்து கொண்ட வேளை இந்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது.இந்திய பிரதமர் கலந்து கொண்ட இந்த நிகழ்வானது பற்றிக் பிரவுன் அவர்களின் வெற்றியினை உறுதிப்படுத்துவதில் மிக முக்கிய பங்கினை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஒன்ராரியோ மாகாண எதிர்க்கட்சித் தலைவர் பாற்றிக் பிறவுன்



தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் ஒரு அரசியல் தலைவராக பற்றிக் பிரவுன் விளங்குகின்றார். 2009ம் ஆண்டு இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் அந்த யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்பினருடனும் இணைந்து செயல்பட்டவர். இலங்கையில் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு நடைபெற்றுள்ளது என்பதை கனேடிய பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியவர். இலங்கைக்கு இவர் விஜயம் மேற்கொண்ட போது இலங்கைக்குள் நுழைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டவர்.இவ்வாறு தமிழர்களுக்கான குரலாக ஒலித்து வரும் அரசியல் தலைவரான பற்றிக் பிரவுன் அவர்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் பழமைவாதக் கட்சியின் தலைமைத்துவத்திற்கான போட்டியில் ஈடுபட்ட போது அவருக்கு இகுருவி முழுமையான ஆதரவை வழங்கியது. அவருக்கான ஆதரவை தமிழ் மக்களிடம் இருந்து திரட்டும் வகையில் பல்வேறு பரப்புரை நடவடிக்கைளையும் செய்திகளையும் இகுருவி தொடர்ந்து வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட போது அதற்கான ஆணிவேராக தமிழர்கள் இருந்தனர். பெருமளவில் தமிழர்கள் கட்சியின் உறுப்புரிமை பெற்று பாற்றிக் பிறவுன் தலைவராவதை உறுதிப்படுத்தினார்கள். இந்த பின்னணியில் கட்சியின் தலைமைப் பதவியை வெற்றிபெற்ற பாற்றிக் பிறவுன் இடைத் தேர்தலில் வெற்றிபெற்று மாகாணசபை உறுப்பினராகவும் இந்த வருடம் பதவியேற்றார். தை மாதம் ஒன்ராரியோ மாகாணத்தில் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்கப்பட்டதற்கு பாற்றிக் பிரவுனின் தலைமைத்துவம் அளப்பெரியது.

### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



தாயகத்தில் தமிழ் அரசியல் வாதிகளில் பெருமளவில் பேசப்படுபவர்களில் எம்.ஏ.சுமந்திரனும் ஒருவர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கடந்த பொதுத் தேர்தலில் பெருமளவு வாக்குக்களைப் பெற்று வெற்றிபெற்றவர் இவர். இவரது முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி குறித்து பெரும் சர்ச்சைகள் எழுந்திருந்தது. தேசியப் பட்டியல் மூலம் இவர் நாடாளுமன்ற சென்றது அந்தச் சர்ச்சையின் ஆரம்பப் புள்ளியாகும். இதனை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட எம்.ஏ.சுமந்திரன் மக்களின் பெருமளவு ஆதரவுடன் நாடாளுமன்ற உறுப்பினரானார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் தாயகத்திலும் புலத்திலும் விமர்சனத்திற்கு உள்ளாகும் ஒருவராக கடந்த வருடத்தில் மாறியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் ஊடகப் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் அவர்களை இகுருவி இந்த வருடத்தில் பல தடவைகள் சந்தித்துள்ளது

### இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன்



இலங்கையின் எதிர் கட்சி தலைவர் சம்பந்தனை தேர்தல் காலங்களில் நேரடியாக சந்தித்து உரையாடியது. ஆணித்தரமான நிலைப்பாடுகள் மற்றும் வழைந்து கொடுக்காத தன்மைகளால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு வென்று தரும் என்று நம்பிய தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விமர்சனங்களுக்கு அப்பால் வெற்றி பெற வைத்துதிருந்தர்கள் ஆனால் நல்லாட்சிக்கான அரசாங்கம் பதவிக்கு வநது பல மாதங்கள் கடந்து விட்ட போதிலும் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் என்ற மிக இலகுவான கோரிக்கையினை கூட இதுவரை நிறைவேற்றவில்லை என்ற ஆதங்கம் எல்லோரிடமும் தோன்றியுள்ளது. இது நீண்டகால அரசியல் பிரச்சினைகளுக்கான நிலையான தீர்வு என்பதை கானல் நீராக ஆக்கிவிட்டிருப்பதாகவும் பலர் கருதுகின்றார்கள்

### ஒன்ராரியோ மாகாணத்தின் முதல்வர் காத்திலீன் வின்



ஒன்ராரியோ மாகாணத்தின் 25ஆவது முதல்வர் பதவி வகிக்கும் காத்திலீன் வின் 2013ஆம் ஆண்டு லிபரல் கட்சியின் தலைமைப் பதவியை வெற்றிகொண்டவர். பல வருடங்கள் மாகாணசபை உறுப்பினராக இருந்த காத்திலீன் வின் ஒன்ராரியோ மாகாணத்தின் முதலாவது பெண் முதல்வராவார். ஒன்ராரியோ மாகாணத்தில் கடந்த வருடத்தில் தை மாதம் தமிழ் மரபுரிமை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டது. மாகாண கொன்சவேட்டிவ் கட்சியினால் இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டது. இந்த சட்டமூலத்திற்கு ஆளும் லிபரல் கட்சியின் ஆதரவானது அளப்பெரியது.

இந்த வருடம் கத்தலின் வின் அவர்களின் தலைமையிலான மாகாண அரசாங்கத்திற்கு பாடசாலை ஆசிரியர் சங்கங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளே செய்திகளாகியிருந்தன. இருந்து போதிலும் இந்த நெருக்கடிகளுக்கு உரிய தீர்வினை முன்வைத்து பாடசாலைகளை கல்வி செயல்பாடுகளை வழமை நிலைக் கொண்டு வந்தமை மூலம் தான் ஒரு சிறந்த தலைவர் என்பதை மாகண முதல்வர் மீண்டும் நிரூபித்திருகின்றார்.

மாகாண முதல்வராக பதவியேற்ற காலம் முதல் காத்திலீன் வின் கலந்துகொள்ளும் தமிழர் நிகழ்வுகள் அனைத்தையும் இகுருவி பதிவு செய்யத் தவறவில்லை.

### றொறன்ரோ நகரபிதா ஜோன் ரோரி



2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜோன் ரோரி. றொறன்ரோ நகரபிதாவாக பதவியேற்றவர். ஜோன் ரோரியின் இந்த வெற்றிக்கு தமிழர்கள் மத்தியில் முன்னெடுத்த பிரச்சாரமும் பிரதானமானது. இவர் நகரபிதா பதவிக்கான தனது பிரச்சாரத்தின்போது தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் யாழ்ப்பாணத்தை றொறன்ரோவின் சகோதர நகரமாக அறிவிப்பேன் என தமிழர்களின் வாக்குகளை குறிவைத்து உறுதிமொழிகளை வழங்கியிருந்தனர். புலம்பெயர் நாடொன்றில் வாக்காளர் பலத்தில் தமிழர்கள் கண்டுள்ள வெற்றியாக இங்கு குறிப்பிட வேண்டியது. இலங்கையின் நகரம் ஒன்றை றொறன்ரோவின் சகோதர நகரமான அறிவிப்பது ஒரு அடையாள நிகழ்வாக இருந்தாலும் தேர்தல் வெற்றியில் கனடியத் தமிழர்களின் வாக்குகளின் அவசியத்தை இந்த உறுதிமொழி உணர்த்தியிருந்தது.

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்த விருது வழங்கல் நிகழ்வில் கலந்து கொண்ட நகரபிதா றொரன்ரோவில் தமிழர்களுடைய வர்த்தக முயற்சிகளின் முன்னேற்றத்தை வெகுவாக பாராட்டினார். இவரது தேர்தல் பிரச்சார காலத்தில் பெருமளவில் பிரச்சார நடவடிக்கையை இகுருவி முன்னெடுத்திருந்தது.தொடர்ந்தும் றொறன்ரோ நகரபிதா ஜோன் ரோரி கலந்துகொள்ளும் நிகழ்வுகளை இகுருவி பதிவு செய்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SCARBOROUGH**
(KENNEDY & HWY 401)

Only with **10%** Deposit (5% + 5%) Move In 6 Months to a **BRAND NEW** Unit

**NORTH YORK**
(YORK MILLS & DVP)

**$1,250/Month** for 2 Years
2Years Rental Guarantee OR
$7,500 Cashback

**MISSISSAUGA**
(SQUARE ONE)

Only with **10%** Deposit (5% + 5%) Move In 6 Months to a **BRAND NEW** Unit Located in Square One Area





**FOR GREAT CONDO DEALS....** Please Contact

**416-879-2000**

Thurairajah **RAMESH**
Sales Representative

HOMELIFE HIGHER STANDARDS

416-917-9957 416-321-6969

**HOMELIFE GTA REALTY INC. BROKERAGE**



# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் எப்படி இருந்தால் என்ன?

**இஸ்லாமிக் ஸ்டேட் குழுவை எவ்வாறு அழைக்க வேண்டும் என்பதே கேள்வி.**



சிவமணி

மத்தியக் கிழக்கு நாடுகளில் வெறியாட்டம் நடத்திக்கொண்டிருக்கும் இஸ்லாமிக் ஸ்டேட், தீவிரவாதக் குழுவை எவ்வாறு அழைக்க வேண்டும்என்றசந்தேகம்உலகத்திற்கு வந்திருக்கிறது. தொன்மையான புவியியல் சொற்கூறுகளின் மொழிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்கள் பலவகை சுருக்கப் பெயர்களைத் தந்துகொண்டிருக்கின்றனர்.

இஸ்லாமிக் ஸ்டேட், தீவிரவாதக் குழுவின் பல்வேறு பெயர்களைப் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தை இங்கு காணலாம்:

## ஐஎஸ்ஐஸ் அல்லது ஐஎஸ்ஐஎல்?

ஈராக்கின் அல் கொய்தாவில் இருந்து வேர்விடத் துவங்குகியது இந்த அமைப்பு. 2006இல் தன்னை இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் என பிரகடனபடுத்திக் கொண்டாலும் உண்மையில் "ஐ.எஸ். ஐஸ்"பிரபலமாகவில்லை, ஏனெனில் குறிப்பிடத்தக்க எந்தவொரு பிரதேசத்தையும் அபகரிக்கவோ அல்லது பிடித்துக்கொள்ளவோ இவர்களால் முடியவில்லை. இந்தநிலையில் பக்கத்து நாடான சிரியாவிற்கு தங்களை விரிவுபடுத்திக்கொண்டபோது "ஐ.எஸ்.ஐஸ்" அமைப்பின் பரிமாணம் மாறியது. அது அங்கே நடந்துகொண்டிருந்த உள்நாட்டுப் போரையும் திவிரப்படுத்தியது. 2013இல் இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக்கின் தலைவர் அபு பக்கர் அல் பாக்தாதி, அதை இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் மற்றும் அல் ஷாம் என பெயர்மாற்றம் செய்தார். இதன்மூலம் இந்த தீவிரவாத குழுவை ஒரு நாடுகடந்த அமைப்பாகக் காட்டிக்கொண்டனர், அத்துடன், பெயர் சம்மந்தப்பட்ட குழப்பங்கள் துவங்கியதும் இங்கே தான். அல் ஷாம் என்பது, தற்போதுள்ள சிரியா, லெபனான், இஸ்ரேல், பாலஸ்தீனிய பிரதேசங்கள் மற்றும் ஜோர்டான் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு தெளிவற்ற பிரதேசத்தினைக் குறிக்கின்ற தொன்மையான பெயர். பொதுவாக இதை சிரியா என்றோ அல்லது லெவண்ட் என்னும் பிரதேசத்தை குறிப்பிடக்கூடிய ஒரு ஆங்கில வார்த்தைப் பிரயோ,கமும் உண்டு. இந்தக் குழுவின் பெயரை, இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் மற்றும் அல் ஷாம் (ஐஎஸ்ஐஎஸ்), இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் மற்றும் சிரியா (ஐஎஸ்ஐஎஸ்), அல்லது இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் மற்றும் லெவண்ட் (ஐஎஸ்ஐஎல்) என பல வகையில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## தாயேஷ்

உலக அளவில் இந்தக் குழுவிற்கு எதிரானவர்கள் இதனை "ஐஎஸ்ஐஎஸ்" என்றும் மத்தியக் கிழக்கில் இவ்வமைப்பிற்கு அரேபிய சுருக்கப் பெயராக 'தாயேஷ்' எனும் பெயரை வைத்துள்ளனர். இந்த வார்த்தைக்கு அரபிய மொழியில் எந்த அர்த்தமும் இல்லை ஆனால் ஐஎஸ்ஸை கேலிசெய்யும் தொனியிலும் அவமதிக்கும் வகையிலும் இருக்கிறது. இதன் அர்த்தம் 'நசுக்குபவர்கள்' என்பதாகும். பிரெஞ்சு அதிபர் பிராங்கோய்ஸ் ஹோலண்டே மற்றும் அமெரிக்காவின் தேசிய செயலர் ஜான் கெர்ரி போன்றோர், இந்த வார்த்தையை ஐஎஸ் குழுவிற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் உபயோகிப்பர். தன் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் தாயேஷ் எனும் வார்த்தையை உபயோகிக்க தடை விதித்துள்ளது ஐஎஸ். ஆனால் அரேபிய மொழி பேசுபவர்கள் இந்தக் குழுவை அவமதிக்க வேறு சில வழிகளை கண்டுபிடித்துள்ளனர்.

2013இல் அல் கொய்தாவில் இருந்து ஐஎஸ் பிரிந்தபின், அல் கொய்தா ஆதரவாளர்கள் இந்தக் குழுவை 'அல் பாக்தாதியின் குழு' என்றே குறிப்பிடுகிறது. அவனை ஒரு துரோகியாவே பார்க்கிறது அல் கொய்தா. ஐஎஸ் ஆட்சி செய்யும் இடங்களில் இருக்கும் சிரியர்கள் இதனை 'அல் தாஞ்ஜீம்' — அரேபிய மொழியில் 'அமைப்பு' என்றே அழைக்கிறது

## எங்களை கலிபாதே என்று அழையுங்கள்

2014இன் கோடைக் காலத்தில், வட மற்றும் மேற்கு ஈராக்கின் பல பகுதிகளை ஐஎஸ் கைப்பற்றியபோது, தன் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் கலிபாதேவை பிரகடனபபடுத்தி, பின்னர் தன் பெயரில் இருந்த ஈராக் மற்றும் அல் ஷாமை நீக்கிக்கொணஙடது. இன்று இந்தக் குழு தன்னை இஸ்லாமிக் ஸ்டேட் அல்லது வெறும் கலிபாதே என்று குறிப்பிட்டுக்கொள்கிறது. இது லிபியா, எகிப்து மற்றும் பல்வேறு இடத்திலிருக்கும் தன் இணைப்புகளுக்கும் பொருந்தும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்

# இனிய நத்தார்,
# புது வருட வாழ்த்துக்கள்!

*I Wishing You a*
*Very Merry Christmas*
*& a Very Happy Prosperous*
*New Year!*

# RAJ NADARAJAH

**Sales Representative**

**416.333.6115**

**nanohomes@gmail.com**

TOP PRODUCER 2013

TOP PRODUCER 2014



**HomeLife/Future**
**Realty Inc.,** Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
**Bus: (905) 201-9977** Fax: (905) 201-9229
* Independently Owned and Operated.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் பதவி பிரமாண நிகழ்வு





ஸ்காபரோ ரூச்பார்க் தொகுதியில் அமோக வெற்றியீட்டிய ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் பதவி பிரமாண நிகழ்வு ஒட்டவா கனடியப் பாராளுமன்றில் .Nov 12, 2015 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருமளவான தமிழ் மக்கள் கலந்து கொண்டது மாத்திரமல்லாது, கனடிய பிரதமரும் கலந்து தமிழ் மக்களை சந்தித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## கனடிய மனிதவுரிமை மையம் (CHRV) யின் விடுமுறை கால ஒன்றுகூடல்





ஒன்ராரியோ மாகாணத்தன் முற்போக்கு கொன்சவ்வேட்டிவ் கட்சியின் தலைவர் திரு. பற்றிக் பிறவுன், ரொறன்ரோ பொலிஸ் மா அதிபர் உற்பட பல பல்லின அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டு சிறபித்தார்கள் .கனடாவின் கதவுகள் தமிழர்களிற்காக மூடப்பட்டிருந்த சமயத்தில் கனடாவின் தேசிய மையத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியதற்கான காரணியே கனடிய மனிதவுரிமை மையமே என திரு.பற்றிக் பிறவுன் அவர்கள் தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் இருந்து கலந்து கொண்டதுடன், கனடிய மனிதவுரிமை மையம் போன்ற அமைப்புக்கள் பொதுமக்களிற்கும் பொலிசாருக்குமான தொடர்பில் எத்தகைய பெரிய பங்கை வகிக்கின்றன என்பதையும் தெரிவித்தார்

## நீதன் சான் அவர்களின் கல்விச் சபை தேர்தல் பிரச்சார அறிவிப்பு



ரொரென்ரோ பிராந்திய கல்விச் சபையின் ஸ்காபுறோ ரூஜ ரிவர் வட்டாரத்தின் கல்விச் சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படவே திரு நீதன் சண்முகராஜா தேர்தலில் போட்டியிடுகின்றார். ஜனவரி 25ம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த Nov 29, 2015 அன்று நடைபெற்ற தேர்தல் தொடர்பான சந்திப்பு மற்றும் அறிவிப்பு நிகழ்வு நடைபெற்றது

## யூனியன் கல்லூரியின் ஒன்றுகூடல்







தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் கனடியப் பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் இரவு விருந்தும் நிகழ்வுகளோடு Nov 15, 2015 அன்று நடைபெற்றது இதன் முழுமையான படத்தொகுப்பு இகுருவி இணையத்தில் பார்வையிடலாம்






Sri Lankan Accountants Association of Canada - 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NAVA LAW Official Launch







Nov 13 2015 அன்று குபேஷ் நவரட்ணம் அவர்களினால் Nava Law Professional Corporation நிறுவனம் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிறுவனம் டொரான்டோவின் மிகப் பெரிய சட்ட நிறுவனமான GA LAW மற்றும் ஹரி ஆனந்தசங்கரி சட்ட நிறுவனத்திலிருந்து தோற்றம் பெற்றதாகும். டொரொண்டோவில் வேகமாக வளர்ந்துவரும் இந்த சட்ட நிறுவனம், வீட்டு உரிமையாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு அறிவுப்பூர்வமான, மதிப்புக் கூட்டுதலான மற்றும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவான சட்ட ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

குபேஷ் நவரட்ணம் அவர்கள் ரியல் எஸ்டேட் சார்ந்த சட்டங்களில் மிகையான அனுபவம் கொண்டவர் . சிக்கலான, பல மில்லியன் மதிப்பு கொண்ட வீட்டு மற்றும் வணிகத்திற்கான ரியல் எஸ்டேட் ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தைகளை இவர் நடத்தியுள்ளார். நில வளர்ச்சித் திட்டங்களுக்காக இவர் முனிசிபல் மற்றும் மாகாண சபைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ரியல் எஸ்டேட்டிற்கான முதலீட்டு வாகனங்களாக பதிவு செய்யப்பட்டிருக்கும்

கனட நிதியை மறுசீரமைக்க நன்கு திட்டமிடப்பட்ட மாதிரிகளை இவர் உருவாக்கினார். ஒண்டாரியோ மாகாணத்தின் பொது காவலர் மற்றும் அறங்காவலர் அலுவலகத்தில் இவர் பணியாற்றியபோது, மனநிலை சரியில்லாத பெரியவர்களின் சார்பாக சிவில் வழக்கு மற்றும் எஸ்டேட் விஷயத்தில் இவர் கவனம் செலுத்தியது, இவரது அனுபவத்தை அடிகோடிட்டுக் காட்டுகிறது. ஹோம்ஸ் பத்திரிக்கையின் 'ஹூஸ் ஹூ ஆஃப் ரியல் எஸ்டேட்'டின் 2014 மற்றும் 2015ஆம் வருட பட்டியலில் இடம்பிடித்தார். அவருடைய வளரும் பயிற்சியின் கூடுதல் அம்சமாக, சமூக ஈடுபாட்டின் மிகப்பெரிய ஆதரவாளராக அவர் இருக்கிறார். அவர், தலைமை மற்றும் கண்டுபிடிப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார். யார்க் பகுதி சமபங்கு கவுன்சிலின் தலைவராக இருந்திருக்கிறார். உள்ளூரிலும் ஐநாவிலும், சர்வதேச சட்ட வாதிடும் வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

கூபெஸ், 2010ஆம் ஆண்டு டொரொன்டோ பல்கலைக்கழகம் வாயிலாக சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கான எல்எல்.எம் பட்டம், 2009ஆம் ஆண்டு மேற்கு ஒண்டாரியோ பல்கலைக்கழகத்தில் ஜெடி பட்டம், ஆகிய பட்டங்களைப் பெற்றார். 2011இல் ஒண்டாரியோ வழக்கறிஞர் கவுன்சிலில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். மேலும், 2004ஆம் ஆண்டு மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தில் கணிணிப் பொறியாளர் பட்டமும் பெற்றுள்ளார்.



Markham Toronto Cricket Leagueஇன் விருது விழா 2015

நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட இகுருவி .காம்







IMHO Canada 2015 Convention Gala - 2015 Nov 14, 2015 அன்று நடைபெற்றது

## கனடா அன்பு நெறி அமைப்பின் நிதி சேர் இராபோசன இரவு 2015





கனடாவில் இலாப நோக்கற்ற அமைப்பாக இயங்கிவரும் அன்புநெறி ஏழு வருடங்களைக் கடந்தும் தமது உதவித் திட்டத்தை பல்வேறு வகைகளிலும் முன்னெடுக்கின்றது. தாயக உறவுகளுக்கு சேகரிக்கப்படும் பணத்தை முழுமையாக எந்தவிதமான செலவுகளும் இன்றி நேரடியாக வழங்கும் தமது திட்டத்தை அன்புநெறி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.அதன் 2015 நிதி சேர் இராபோசன இரவு நிகழ்வின் புகை படத்தொகுப்பு Anpunery - 2015 Dec 04, 2015



Jananie's PALM ROOTS Fund Raising Photography Auction Event 2015 Nov 15, 2015 அன்று நடைபெற்றது நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட இகுருவி .காம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழின் காதலன்

## பேராசிரியர் நொபுருஹரசிமா

26-11-2015 அன்று இறைவனடி சேர்ந்தார்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றியதாகப் பெருமையாக அழைக்கப்படுவது நம் தமிழ் மொழியாகும். அந்தத் தமிழின் சிறப்பறிந்து, அதனது இனிமையறிந்து தமிழ் மேல் காதல் கொண்டு தமிழே தம் உயிராக வாழ்ந்தவர் எண்ணிலடங்கார். அதிலும் குறிப்பாக, பிறப்பினாலே தமிழராக அல்லாமல் வேறினத்தில் தோன்றி தமிழைக் கற்றுத் தமிழுக்குப் பெருஞ் சிறப்பளித்தவர்கள் பல அறிஞர்கள். ஜி.யு. போப், கால்டுவெல் வின்ஸ்லோ, வீரமாமுனிவர் என்று நீளும். அந்த வரிசையில் ஜப்பானியத் தமிழறிஞரும் தமிழ் மொழிப் பற்றாளருமான பேராசிரியர் நொபுரு ஹரசிமாவும் உள்ளடக்கம்.

1933 ஆம் ஆண்டு ஜப்பானில் பிறந்த நொபுரு ஹரசிமா ஒரு பல்துறை அறிஞர், ஆய்வாளர், பன்முகச் சிந்தனையாளர், வரலாற்றாளர், எழுத்தாளர், பைந்தமிழ்ப் பேராசிரியர் என்று பன்முகம் கொண்ட பண்பாளர். 1974 ஆம் ஆண்டு டோக்கியோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய வரலாற்றுத்துறைத் தலைவரான இவரது பார்வை, தென்னிந்திய வரலாறு மீது திரும்பியது. தமிழ் இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்றுத் தமிழார்வலராக உயர்ந்தார்.

தென்னகவரலாறு தொடர்பான இவரது ஆய்வுகளில், பிற்காலச் சோழராட்சிக் கணிப்பைப் பெற்றது. அக்காலத்திலேயே தமிழகத்திற்கும் பிற நாடுகளுக்குமிடையே வணிக ரீதியான உறவுகளும் கலாச்சார ரீதியான உறவுகளும் சிறப்பாக நிலவின என்று அவர் நிறுவினார். இதற்காக இவரே சோழர் காலக் கல்வெட்டுக்களை ஆய்வுக்குட்படுத்தினார்.

தமிழ் வளர்க்கும் அமைப்புக்களிலே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு பெருமதிப்புண்டு. தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ் என தமிழர்கள் வாழும் அத்தனை நாடுகளையும் பிரதிபலிக்கின்ற பெரும் அமைப்பு அது. தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தியும் தமிழ் விழாக்களை ஏற்பாடு செய்தும் பாரெங்கும் தமிழைப் பரவச் செய்வது அந்த அமைப்பு.

அவ்வாறான உயரிய சிறப்புடைய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக 1989 — 2010 வரையிலான 21 ஆண்டு காலம் இருந்து தமிழ் வளர்த்த பெருந்தகை நொபுரு ஹரசிமா. அன்னாரது சிறப்பான பங்களிப்போடு 1995 ஆம் ஆண்டு எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தமிழகத்திலுள்ள தஞ்சாவூரிலே சிறப்புற நடைபெற்றது.

அம்மாநாட்டில் ஈழத்துத் தமிழறிஞர் அமரர் கார்த்திகேசு சிவத்தம்பியின் வருகை மறுக்கப்பட்ட போது தமிழுக்காகப் போர்க்கொடி தூக்கினார்.

இதேபோல 2010 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த கலைஞர் மு. கருணாநிதி விரும்பிய போது அதற்கான கால அவகாசம் போதாது என்று அவர் அவர் வாதிட்டார். கருணாநிதி தனது அரசியல் இலாபத்திற்காகவே அவசரப்படுகின்றார் என்று சினந்தார். இந்த முரண்பாடு காரணமாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இதன் பின்னரே கருணாநிதி செம்மொழி மாநாட்டை நடத்தினார்.

ஜப்பானிய மொழியில் நொபுருஹரசிமா மாணவர்களுக்குத் தமிழ்க் கலாசாரம் தொடர்பான ஆவணப்படமொன்றை வெளியிட்டார். இப்படத்தைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று பல தமிழார்வலர்கள் விரும்புகின்றனர்.

2010 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருதைக் கொடுத்து அன்னாரின் தமிழ்ப் பணிக்குக் காணிக்கையாக்கியது பாரத தேசம்.

இப்படிப்பட்ட புகழும் தமிழ்ப்புலமையும் தமிழ் மீது காதலும் கொண்ட நொபுரு ஹரசிமா கடந்த 26 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். தமிழ் உலகிற்கு நிரப்பீடு செய்ய முடியாத அன்னாரது மறைவுக்கு தமிழக அரசோ இலங்கை தமிழ்க் கட்சிகளோ, தமிழ் அமைப்புக்களோ அஞ்சலியை இன்னும் செய்யாமல் இருப்பது நெஞ்சத்தைச் சுடுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RemaxShan.com

Merry Christmas

&

Happy New Year





Shan Thayaparan
Sales Representative
"Long Name, Amazing Results"

Dir: 416-567-7675

Email:info@shan123.com

RE/MAX VISION
REALTY INC., BROKERAGE*

*Independently Owned & Operated. Not inteded to solicit


BUS 416.321.2228
#1 - 2210 Markham Rd.
Scarborough, ON M1B 5V6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Tel: 416-298-8383 | Fax : 416-298-8303 | 3-2250 Markham Road, Toronto, ON. M1B 2W4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரியா தரும் பாடம்

மூர்த்தி

சிரியாவில் இருந்து வெளியேறுகிறார்கள் மக்கள். அவர்களை அகதிகள் என்றும் சொல்லலாம்.

கனடாவின் புதிய அரசும் சிரிய அகதிகளை ஏற்றுக் கொள்ளும் எனத் தெரிவித்திருக்கிறது. தேர்தலின்போது சிரிய அகதிகள் பிரச்சனை அதிக அளவில் விவாதிக்கப்பட்டமை நாம் அறிந்ததே. கனடாவின் பிரதான கட்சிகள் மூன்றும் அகதிகள் குறித்துக் கரிசனத்துடன் ஆதரவைச் சொல்லியிருந்தன.

ஆலன் குர்தி என்னும் சிரிய குழந்தை, துருக்கிய கடற்கரையில் கரை ஒதுங்கியபோது, உலகமே அதிர்ந்தது. அதன்பின்தான் சிரிய அகதிகள் பிரச்னை பற்றி உலகமே விவாதித்தது. உலகின் அச்சுறுத்தலான ஐஎஸ்ஐஎஸ் அமைப்பை ஒழித்து நீதியை வென்றெடுத்து, சமாதானத்தைத் தவழ விடவேண்டும் என்ற கருத்தினை உலகநாடுகள் கொண்டிருக்கும் நேரம் பார்த்து, பாரீஸ் தாக்குதல் நடந்தது. ரஸ்ய விமானம் துருக்கியின் ஆகாயப் படையால் வீழ்த்தப்பட்டது. எரிந்து கொண்டிருக்கும் தீக்கு எண்ணெய் வாரி இறைத்தாயிற்று. இப்போது பிரான்சும்ரஸ்யாவும்முழுமூச்சுடன் குண்டுகளை வீசுகின்றன. வான்வழிக் குண்டுவீச்சுக்களை தீவிரப்படுத்த போகின்றன. ஆதில கனடாவும் தொடர்ந்து ஈடுபடும். நியாயப்படுத்துவதற்குபலவலுவான காரணங்களை தாக்குதல்களில் ஈடுபடும் நாடுகள் அடுக்கிக் காட்டுகின்றன. போர் ஒன்று தீவிரமாகத் தொடங்கிவிட்டது போன்ற நிலைமை.

இந்தப் போரில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் இறக்கப் போகிறவர்கள் பொதுமக்கள்தாம். எத்தனை நவீனமான முறையில் குண்டுவீச்சு தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டிருந்தாலும் அதனால் மக்களுக்கும் பயங்கரவாதிகளுக்குமுள்ள வேறுபாட்டைக் கண்டறியமுடியாது. அதனை இயக்குபவர்களுக்கும் இதுபற்றி அக்கறையில்லை. பொதுமக்கள் உயிரிழப்பு அதிகரிக்கத் தொடங்கும்போது ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் இருப்புக்கு ஒருவித தார்மீக நியாயம் உருவாகிவிடும். அவர்களுடைய பலம் பெருகும். பாதிக்கப்பட்ட இடங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிடும். தான் இருக்கும் இடங்களில் தனக்கு தார்மீக வலுவை மேலும் மேலும் ஏற்படுத்திக் கொள்ளும்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்கிறார்கள். அது நடக்குமா? நீதி சமமற்ற முறையில் நிலவும் ஒரு சமூகத்தில், பயங்கரவாதம் நிகழாமல் இருந்தால்தான் ஆச்சரியப்பட முடியும். இல்லையா? ஒரு பயங்கரவாதத் தாக்குதலை ரசித்து வரவேற்கும் மனநிலை எவ்வளவு ஆபத்தானதோ, அவ்வளவு ஆபத்தானது என்ன ஆனாலும் சரி, பழிக்குப்பழி வாங்கவேண்டும்என்று போரைத் துடித்து வரவேற்பதும். பயங்கரவாதிகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் குண்டுபோட்டு அந்தநாடுகளை அழித்துவிட்டால் பயங்கரவாதமும் ஒழிந்துவிடும் என்றுநினைப்பது அறிவீனம் மட்டுமல்ல, அதுவே ஒரு பயங்கரவாதமும்கூட. இறையாண்மை கொண்ட ஒருநாடு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும்போது, அந் நாட்டையும் சேர்த்தேதான் நாம் கண்டிக்க வேண்டும்.

இலங்கையும் விடுதலைப் புலிகளும் இதற்கு உதாரணமாக இருந்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகளைத்தான் உலக நாடுகளால் தண்டிக்க முடிந்ததே தவிர இலங்கை அரசை ஒருவராலும் எதுவும் செய்யமுடிவதில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ் ஒழிய வேண்டும் என்பதற்காக அமெரிக்காவும், ஃபிரான்சும், ரஷ்யாவும் தற்போது மேற்கொண்டுவரும் அநீதியான போரை நாம் ஆதரிக்க வேண்டியதில்லை.

புல பயங்கரவாத அமைப்புகளுக்குப் போட்டியாக, அவர்களையே மிஞ்சும் அளவுக்கு சர்வதேச அளவில் அரச பயங்கரவாதம் இன்று ஒருபெரும் பிரச்னையாக எழுந்துள்ளது.

இது இனி சிரியாவின் பிரச்னை அல்ல, ஐரோப்பாவின் பிரச்னை.. அதையும் தாண்டி உலகின் பிரச்னையாகிக் கொண்டும் இருக்கிறது. அந்தப் பிரச்னை இப்போது இந்தப் போரால் பலமடங்கு பலம் பெற்றிருக்கிறது.

இந்த அகதிகளுக்கு இனி எந்த நாடும் இடம் கொடுக்கப் போவதில்லை. அவர்கள் உலகிடம் இருந்து அந்நியப்படப் போகிறார்கள். கடற்கரையில் மேலும் சடலங்கள் குவியப் போகின்றன. ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளில் கூட்டம் பெருக போகிறது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரியசிக்கலாகவும், சவாலாகவும் அகதிகள் இருக்கப்போகிறார்கள். தீர்க்கமுடியாத பெருந்துயராகவும்!

சிரியா போர் உலகைப் பல ஆண்டுகள் பின்நோக்கி இழுத்துச் செல்லப்போகிறது. இந்தப் போர், பலமடங்கு அதிக தீவிரத்துடன் அகதிகளை உருவாக்கப்போகிறது. சிரியாவில் இருந்து பலர் தெறித்து வெளியில் சிதறப்போகிறார்கள்.

ஒவ்வொரு போரும் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள பல ஆபத்தான சித்தாந்தங்களை உற்பத்தி செய்கிறது. இந்தப் போர் உற்பத்தி செய்திருப்பது இஸ்லாமோஃபோமியாவை. "பயங்கரவாதிகளைக் கடவுள் பார்த்துக் கொள்வார், ஆனால் அவர்களைக் கடவுளிடம் அனுப்பி வைக்கும் வேலையை நான் செய்வேன்' என்று ரஸ்ய அதிபர் புடின் சொன்னதாக ஒரு வாசகம் மிகுந்த முனைப்புடன், அலாதியாக ரசிக்கப்பட்டு இணையத்தில் பரவிக்கொண்டிருக்கிறது.

ஆதை அவர் உண்மையில் சொன்னாரா இல்லையா எனும் ஆராய்ச்சிக்குக்கூட போக வேண்டாம். இந்த வரியை எடுத்துச் சொல்லி, இங்குள்ள தாலிபன்களை என்ன செய்யப் போகிறோம் என்று இங்கிருந்தே அறைகூவல் விடுபவர்களைக் கண்டு அஞ்சாமல் இருக்கமுடியுமா? ரஷ்யாவைப் பிடிக்காதவர்கள்கூட புடினை இப்போது ஆஹா ஓஹோ என்று புகழ்வதை எப்படிப் புரிந்துகொள்வது?

இப்படியொரு வலிமையான தலைவர் நமக்கு இல்லையே என்று ஆதங்கப்படுபவர்களை என்னசெய்வது? பண்டையரோமில், கிளாடியேட்டர்களை மோதவிட்டு, அவர்கள் கொல்லப்படுவதை பார்த்து ஆர்ப்பரித்த கூட்டம்தான் நினைவுக்கு வருகிறது.

பிரெஞ்சுமக்கள் பலியானதும் பராக் ஒபாமாவின் இதயம் வெடித்துவிட்டது. பெய்ரூத் மக்கள் கொல்லப்பட்டபோது அவர் ஏன் அமைதிகாத்தார். ஊடகங்கள் ஏன் அமைதி காத்தன? நாம் ஏன் அதை விவாதமின்றி கடந்து சென்றோம்?

ஈராக்கிலும் சிரியாவிலும் தினம் தினம் பல பாரீஸ் தாக்குதல்கள் நடைபெற்றுவந்தபோதும் அவற்றை வசதியாக நாம் மறந்துவிடுவதுஏன்? இது வெறுமனே புறக்கணிப்பு அல்ல. அலட்சிய மனோபாவம் அல்ல. இது ஓர் அரசியல் உணர்வு.

இந்த உணர்வு ஏன் நம்மிடமும், நம்மைச் சுற்றியும் பலம் பெற்றுள்ளது என்பதை நாம் உடனடியாக ஆராயவேண்டும். இந்த உணர்வுக்கும் (அல்லது உணர்வற்ற நிலைக்கும்) பெருகிக்கொண்டிருக்கும் பயங்கரவாதத்துக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது என்பது என் நம்பிக்கை. இந்த இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது.

தற்போது சிரியா போரை ஆதரிப்பவர்கள் யார், அதன் மூலம் ஆதாயம் அடைய போகிறவர்கள் யார்? ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு அடுத்தபடியாக ஆயுதவியாபாரிகள்.

"நாங்கள் தவறாகத்தான் ஈராக்கைத் தாக்கினோம்" என்று முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் டோனிபிளேர் பேட்டி கொடுக்கிறார். அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

ஜார்ஜ் புஷ் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? எப்படி அவர்களால் வெறுமனே ஸாரி சொல்லிவிட்டு நகர்ந்துவிட முடிகிறது? எப்படி வேறு சிலரால் ஒரு ஸாரி கூட சொல்லமுடியாமல் பதவியில் நீடிக்கமுடிகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மார்க் ஸக்கர்பர்க்கின் மிகப்பெரிய நன்கொடையைப் பார்த்து நாம் ஆச்சரியப்பட வேண்டுமா?

**இகுருவிக்காக அரவிந்தன்**

ஃபேஸ்புக்கின் ஸக்கர்பர்க்கிற்கு மனித்நேயத்தை மிகவும் பிடிக்கும். ஆனால் அதுவோ, எப்போதும்போல், அவரும் அவரது மனைவியும் ஆதரவளிக்க தேர்ந்தெடுக்கும் திட்டங்களின் விவரத்தில் மட்டுமே இருக்கும்.

$45 பில்லியன் அமெரிக்க டாலர்களை நன்கொடையாக வழங்கினர் ஃபேஸ்புக்கின் நிறுவனர் மார்க் ஸக்கர்பர்க் மற்றும் அவரது மனைவி ப்ரிசில்லா சான். இதை ஒரு உயிரோட்டம் நிறைந்த நிகழ்ச்சியாக வெளிப்படுத்தினர். தங்களது புதிய குழந்தையான மேக்ஸிற்கு 'திறந்த மடலாக' ஒரு கடிதத்தை எழுதியிருக்கின்றனர். ஒரு புது பெற்றோர் தமது குழந்தையை 'நாம் தற்போதிருக்கும் உலகத்தை விட முன்னேறிய உலகத்தில் வளரவைக்க வேண்டுமென நினைக்கக் கூடாதா?'

ஸக்கர்பர்க் மற்றும் சானின் இந்த மிகப்பெரிய நன்கொடை உலகத்தின் மொத்த வருடாந்திர வெளிநாட்டு உதவியின் மூன்றில் ஒருபங்காகும். இது உலகளவில் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக கட்டிடங்கள் போன்றவற்றுள் வெளிப்படையான மற்றும் மறைமுகமான முறையில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கே இது பயன்படும். மேலும், சிலிக்கான் பள்ளத்தாக்கின் தொழில்நுட்ப தொழிலதிபர்கள் எங்கள் பிரச்சனையைத் தீர்க்கும் வல்லுனர்கள் என நினைத்து பெருமைபட்டுக்கொள்வதால், அவர்கள் உலகைக் காக்க வந்த நாயகர்கள் என்பது அர்த்தமன்று.

தங்களது திறந்த மடலில், 'எங்கள் வாழ்நாளில்' என ஸக்கர்பர்க் மற்றும் சான் உறுதிமொழி எடுத்திருந்தது, இன்றைய மதிப்பில் ஃபேஸ்புக்கின் 99 சதவிகித பங்கான $45 பில்லியன் அமெரிக்க டாலர்களை லிமிட்டட் லையாபிலிட்டி கூட்டாண்மையான சான் ஸக்கர்பர்க் இனிஷியேட்டிவிற்கு வழங்குவதே ஆகும். இந்த இனிஷியேட்டிவ் மூலம், நிறுவனங்களில் முதலீடு செய்யவோ அல்லது தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையோ வழங்கி 'மனித ஆற்றலை வளர்த்தல் மற்றும் சுகாதாரம், கல்வி, அறிவியல் ஆய்வு மற்றும் ஆற்றல்' போன்றவற்றை ஊக்குவிக்கலாம்.

இந்த உறுதிமொழி, அரசுகளால் செய்ய விருப்பமில்லாத அல்லது சமாளிக்க முடியாத பிரச்சனைகளை சரிசெய்ய தங்களுடைய பெரும் சொத்திலிருந்து குறிப்பிட்ட அளவு பண உதவி செய்யும் பணக்காரர்களின் புதிய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகும். இந்த அனுகுமுறை, 2000இல் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை தொடங்கப்பட்ட பின்னரே பிரபலமடைந்தது. அந்த அறக்கட்டளை சுகாதாரம் மற்றும் வறுமை போன்ற உலகளாவியப் பிரச்சனைகளை கவனிக்க உறுதியளித்தது. அதன் பிறகு, மைக்ரோசாப்டின் இணை நிறுவனர் மற்றும் முதலீட்டு குருவான வார்ரன் பப்பட், மற்ற கோடீஸ்வரர்களை மனிதநேயத்திற்காக தங்களது சொத்திலிருந்து ஒரு பெரிய பங்கை வழங்க உறுதிமொழி கையொப்பமிட ஊக்குவித்தார். தற்போது வரை, 137 தனிநபர்கள் (நிறைய அமெரிக்கர்கள்) இந்த உறுதிமொழியில் கையொப்பமிட்டுள்ளனர். 2010இல் ஸ்க்கர்பர்க்கும் கையொப்பமிட்டார். ஆனால் கனடாவிலோ 90 பணக்காரர்களில் இருவர் மட்டுமே கையொப்பமிட்டுள்ளனர்.

ஸக்கர்பர்க் மற்றும் சானின் இந்த உறுதிமொழியின் முக்கிய அம்சம், ஃபேஸ்புக் பங்கினை லிமிட்டட் லையாபிலிட்டி கூட்டாண்மை மூலம் அதிகரிப்பதே ஆகும். இதை ஃபினான்ஸியல் டைம்ஸ் 'அவர் உறுதிமொழி எடுத்தவிதம் அவர் அளித்த பணத்தின் அளவைப் போல் குறிப்பிடத்தக்கதாக இருந்தது' எனக் குறிப்பிட்டிருந்தது. ஏனெனில், அது மறைமுகமாக ஸக்கர்பர்க் மற்றும் சான் அவர்கள் வழக்கமான நன்கொடை கொடுக்கும் விதத்திலிருந்து மாறுபட்ட மற்ற விஷயங்களில் தங்களது கவனம் இருக்கும் என்பதைக் காட்டுவதுபோல் இருக்கிறது. இதில் வருவாய் மூதலீடுகள் மற்றும் அரசியல் செயல்பாடு ஆகியவையும் அடங்கும். 'விவாதங்களை வடிவமைக்க நாம் கொள்கை மற்றும் வாதங்களில் ஈடுபடவேண்டும். நிறைய நிறுவனங்கள் இதைச் செய்ய விருப்பமில்லாமல் உள்ளன, ஆனால் இயக்கங்கள் நிலைத்து நிற்க முன்னேற்றம் ஆதரவளிக்கப்பட வேண்டும்' என ஸக்கர்பர்க் தனது ஃபேஸ்புக் பக்கத்தில் எழுதியுள்ளார்.

இங்கு கேள்வி என்னவெனில், ஸக்கர்பர்க் மற்றும் சானின் இந்த திட்டம் அவர்கள் முன்னேற்றம் அடையவேண்டும் என நினைக்கும் மக்களுடன் பகிரப்படுமா என்பது தான். ஜெர்மன் கப்பல் நிறுவன அதிபரான பீட்டர் க்ராமர், 2010இல் டெர் ஸ்பீகெல் பத்திரிக்கைக்கு பேட்டி கொடுக்கையில், கடினமான சமூகப் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும் என்கிற சூழ்நிலையில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை மிஞ்சும் ஒரு நிர்வாண முயற்சி இது. "பெரும்பணக்காரர்கள் தங்களது பணத்தை எவ்வாறு உபயோகிக்க வேண்டுமென முடிவு செய்ய வேண்டும்," எனக்கூறினார் அவர். "இது ஜனநாயக முறை அரசாங்கத்திற்கு எதிரானது. பொதுநலத்திற்காக பணக்காரர்கள் தங்களுக்கு விருப்பமானதை செய்கிறார்கள், ஆனால் அது மிகவும் தனிப்பட்ட விஷயமாகி விடுகிறது."

தனியார் அறக்கட்டளைகள் இதை உண்மை என நிரூபித்துள்ளது. நிறைய அறக்கட்டளைகள் குறிப்பிட்ட புற்றுநோய் ஆய்வு போன்ற முக்கிய பிரச்சனைகளுக்கு குறைந்த அளவிலான பணத்தையே ஒதுக்கியுள்ளன. ஆனால் அதற்கு மாறாக, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸைப் போல ஸக்கர்பர்க் மற்றும் சான், அரசு கண்கானித்துக் கொண்டிருக்கும் மிகக் கடுமையான பிரச்சனைகளுக்கு உதவ முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவே, எந்தெந்த பணக்கார கொடைவள்ளல்கள் பொதுக் கொள்கை மீது கருணை காட்டுவார்கள் என்கிற கேள்வியை எழுப்புகிறது.

ஸக்கர்பர்க் விஷயத்தில், அவருடைய மனிதநேய பட்டியலில் தொழில்நுட்பம் நிச்சயம் மிகப்பெரிய பங்கு வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. "உன் தலைமுறையின் மிகப்பெரிய வாய்ப்புகள், அனைவரும் அனுக எளிதான இணையத்திலிருந்து கிடைக்கும்," என அவரும் அவரது மனைவியும் தங்களுடைய குழந்தைக்கு எழுதிய மடலில் எழுதியிருந்தனர். 1.5 பில்லியன் பயனாளிகளைக் கொண்ட உலகின் மிகப்பெரிய சமூக வலைதளத்தை உருவாக்கியவரிடம் இருந்து இந்த வார்த்தைகள் வருவது ஏன் என்று புரிந்துகொள்ளக் கூடியதே. இணையம் ஒரு இரக்கமுள்ள சக்தி என அனைவரும் ஏற்றுக்கொள்ளமாட்டர்கள், ஏனெனில் அதில் ஆதிக்கம் செலுத்துவது ஃபேஸ்புக் உட்பட சில அமெரிக்க கார்ப்பரேட் நிறுவனங்களே.

சில வருடங்களுக்கு முன் நியூயார்க் நகரின் சார்ட்டர் பள்ளிகளுக்கு $100 மில்லியன் டாலர்கள் நன்கொடை வழங்கப்பட்ட விஷயத்தில் பிரச்சனை ஏற்பட்டதை நாம் மறந்துவிடக் கூடாது. தி ஓபரா வின்ஃபெரே ஷோவில் நியூயார்க் மேயர் கோரி பூக்கர் மற்றும் நியூ ஜெர்சி கவர்னர் கிறிஸ் கிறிஸ்டி ஆகியோர் உடனிருக்கையில் இந்த பரிசை ஒரு பகட்டான தோற்றத்துடன் வெளியிட்டார் ஸக்கர்பர்க். இந்த மூவரும், ஒரு வெற்றிகரமான தொழில்நுட்ப நிறுவனத்தை தொடங்குவது போல் இல்லாமல், அமெரிக்க கல்வி முறையையே மாற்றியமைக்க கூடிய ஒரு தைரியமான புதிய திட்டத்திற்கான உறுதிமொழியை எடுத்தனர். ஆனால் இந்த திட்டம் செயலிழந்துவிட்டது.

ஸக்கர்பர்க் முதன்முறையாக மனிதநேயத்திற்காக செலவு செய்ததைக் கண்டு எதிர்காலத்தினரும் அவ்வாறே செய்வர் எனக் கூறிவிட முடியாது. மேலும் தாங்கள் குறிப்பிட்ட விஷயத்தில் பணத்தைக் கொட்டும் இந்த தம்பதியினர் மீது தவறு கண்டுபிடிப்பது கடினம். அவர்கள் தங்களுடைய பணத்தை சொகுசு கப்பல்கள் மற்றும் அதிவேக கார்கள் மீது எளிதாகச் செலவு செய்யலாம். மனிதநேயம், வழக்கம்போல, திட்டங்களின் விவரங்களில் மட்டுமே இருக்கும் என கூறுகிறார் கார்லீடன் பல்கலைக்கழகத்தில் உள்ள பொதுக் கொள்கை மற்றும் நிர்வாக பள்ளியின் பேராசிரியர் சூசன் பிலிப்ஸ். அந்த பணம் எவ்வாறு விநியோகிக்கப்படும்? யாருக்கு விநியோகிக்கப்படும்? எவ்வித திட்டங்களுக்கு? "இது வாழும்போதே வழங்குவது மட்டும்தான், நன்கொடை அல்ல," என ஸக்கர்பர்க் மற்றும் சானின் மனிதநேய திட்டத்தைப் பற்றி கூறுகிறார். "அவ்வகையில் அது நேர்மறையானது, மற்றும் பொதுவாக சுவிஸ் பேங்க் அக்கவுண்டில் இருக்க வேண்டியது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**AIEAP** American Institute of English for Academic Preparation

# ALL GRADES

## Make the Right Choice for Your Child's Future Success

Our talented instructors, who have been trained at the best universities in North America, will help develop your child's academic writing and reading skills which boost his or her self-reliance with learning. Indeed, educators suggest that students who develop their academic English skills during their early years, will get good grades in school/college/university, and will adapt quickly in high demanding workplaces.

**Address**
**2929 Lawrence Avenue East. Suite # 210 (2nd Floor)**
**Scarborough, ON**

## Call Today:(647) 783-9262

Flexible hours (**Afterschool or Weekends**) and Affordable

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Century/21 Innovative Realty Inc புதிய கிளை திறப்பு விழா






Sameem Mohamed அவர்களின் தலைமையில் இயங்கும் சிentury/21 Innovative Realty Inc இன் இரண்டாவது வர்த்தக கிளை கடந்த Nov 20.2015 அன்று 350 Burnhamthorpe Rd Suite 127, Mississauga வில் வெகுசிறப்பாக நடைபெற்றது . இவ்நிகழ்வில் Century/21 Innovative வீடு விற்பனை முகவர்களும் , அவர்களது நண்பர்களும் கலந்து கொண்டார்கள் நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட இகுருவி .காம்

## டொரோண்டோ தமிழீழ தேசிய நினைவெழுச்சி நாள்.







## தமிழீழ தேசியத் தலைவர் 61 வது அகவை





தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேபிரபாகரன் அவர்களது 61 வது அகவை காணும் நாளான 26112015 இன்று டொராண்டோவில் தலைவரின் பிறந்த நாளின் எழுச்சி நிகழ்வு பெருந்திரளான மக்களுடன் நடைபெற்றது படத்தில் எழுச்சிப் பாடலுக்கான நடனமும் , மங்கள விளக்கேற்று நிகழ்வும்





Dr Padma Subrahmanyam அவர்களுடனான சந்திப்பு Nov 28, 2015 அன்று நடைபெற்றது



கதிரொளி வானொலி Kathiroli Gala Night

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saiesan

Money Transfer



## உங்கள் உறவினர்களுக்கு பணம் அனுப்பவேண்டுமா?

சாயிசன் பணப்பரிமாற்று சேவை ஐப்பசி 24ல் இருந்து.

எங்கும் இல்லாதவாறு உங்கள் பணத்திற்குரிய கூடுதலான பெறுமதி வழங்கப்படும். அத்தோடு உறவினர்களோடு பேசுவதற்கான

**தொலைபேசி அட்டை இலவசம்.**

5$ FREE Phone Card
Lycamobile

ARE YOU LOOKING FOR A QUICK AND SECURE WAY TO SEND MONEY?
SAIESAN MONEY TRANSFER SERVICES WILL BE A PROPER CHOICE FOR YOU.

**Provided:-**

- Best Rates in GTA
- 1 Hour Service
- SMS Notification
- Deposit to your Bank Account
- Buy & Sell all Foreign Currency
- Transfer Money to Anywhere
- Online Secure Service
- Door to Door Services
- No Service Charge for
  - Charity
  - Temples
  - Senior Homes

416-613-1888 416-613-5777

6055 Steeles Ave E, Unit C-117, Scarborough, ON, M1X 0A7

www.saiesan.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் எதிர்வரும் ஆண்டுகளில் வீடு விற்பனை நிலைமை

செல்வா செல்வதுரை
ஹோம்லைப் காலக்ஸி ரியல் எஸ்டேட் லிமிடெட்




சென்ற ஆண்டுகளில் குறிப்பாக கடந்த 18 ஆண்டுகளாக கனடாவின் வரலாறு காணாத விலை உயர்வை சந்தித்த வீட்டு விலை தொடர்ந்தும் இதே விலை அதிகரிப்பை சந்திக்க வாய்ப்பில்லை என CMHC எனப்படும் நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது. அதற்கு பல காரணங்களை முன் வைத்துள்ள நிலையில், இனிவரும இரண்டு வருடங்களுக்கு விலை உயர்வையோ அல்லது வீடு விற்பனையின் எண்ணிக்கையிலோ முன்பு போல அதிக உயர்வை காண இயலாது என கருதப்படுகிறது.

C.M.H.C. (Canadian Mortgage Housing Corporation) இன் எதிர்வுப்படி (கணக்கின்படி) சராசரி வீட்டுவிலை 2016 ஆம் ஆண்டில் $ 420,000க்கும் $ 466,000 க்கும் இடையில் இருக்கும் எனவும் 2017 ஆம் ஆண்டில் $ 424,000 க்கும் $ 475,000க்கும் இடையில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு விற்பனையாகும் வீடுகளின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டிலும் விட குறைவாகவே காணப்படும். ஆனாலும் இது வீட்டுச்சந்தையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாது. கடந்த மூன்று ஆண்டுகளாக வரலாறு காணாத எண்ணிக்கையில் வீடு விற்பனையாகி இருக்கிறது. ஆகையினால், நாம் இதை ஒப்பீட்டு ரீதியாக தான் பார்க்க வேண்டும்.

புதிய வீடு கட்டுமானம் கடந்த 2015 ஆம் ஆண்டில் இரண்டாம் கால் அதிக அளவு கட்டப்பட்டமையால் அதிகளவு வீடுகள் இன்னமும் விற்பனையாகமலேயே இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் விற்பனையாகாமல் இருக்கு வீடுகளின் எண்ணிக்கையை ஒப்பிடுவதற்கு ஒவ்வொரு 10,000 பேர் சனத்தொகையை வைத்தே அளவிடுவார்கள். உதாரணமாக 2015 ஆம் ஆண்டு ஒவ்வொரு 10,000 பேருக்கும் சராசரியாக 4.4 யூனிட்ஸ் (Units) விற்பனையாகாமல் இருந்தது எனவும், இந்த ஆண்டு அதிகமாகி 5.1 யூனிட்ஸ் ஆக காணப்படுகிறது. இந்த இருப்பு அதிகரிப்பு சில மாதங்களுக்கு தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. இருந்தும் கட்டிடம் கட்டுபவர்கள் இதை மனதில் வைத்து கட்டிடம் கட்டுவதை குறைத்துக் கொள்வார்கள்.

Alberta, Saskatch and Newfound Land மாகாணங்களில் வீடு விற்பனை 2016 ஆம் ஆண்டில் மிகவும் மந்தமாகவே இருக்கும். ஆனாலும் 2017 ஆம் ஆண்டில் அது மீண்டும் சூடு பிடிக்க ஆரம்பித்து விடுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. எண்ணெயின் விலை (Oil rate) விலை 2017 ஆம் ஆண்டிற்கு பின்பு அதிகரிக்கலாம் என எதிர்பார்த்தே இந்த ஆய்வு எதிர்வு கூறுகிறது.

ஒன்றாரியோ மாகாணத்திலும் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலும் மாத்திரம் 2016 ஆம் ஆண்டும் 2017 ஆம் ஆண்டும் ஒரு திடகாத்திரமான பொருளாதார நிலைமை இருப்பதால் பொதுவாக வீட்டு விலைகளிலோ அல்லது விற்பனையாகும் எண்ணிக்கையிலோ அதிக மாற்றம் ஏற்படாது. ஆனால் விலை உயர்ந்த வீடுகளுக்கான விலைகளிலோ அல்லது எண்ணிக்கையிலோ சற்று வீழ்ச்சியே காணப்படும். சராசரியாக $ 400,000க்கும் $800,000க்கும் இடைப்பட்ட வீடுகளுக்கு அதிகம் கொள்வனவு திறன் நுகர்வோரிடையே காணப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. முதல் தடவை (First Time Home Byers) வீடு வாங்குபவர்களிடையே வீடு கொள்வனவு திறன் இல்லாமையால் அல்லது போதாமையால் இவர்கள் தொடர்மாடி கட்டிடங்களை நோக்கி நுகர்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக இளம் வயதினர்களிடையே அதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். அத்துடன் (Baby Boomerg) தான் வயதானவர்கள் கூட இப்படி தொடர்மாடிக் கட்டிடங்களுக்கான தேவை, டொரன்டோ, வான்கூவர் மாதிரியான நகரங்களில் வாய்ப்புகள் அதிகம் காணப்படுகிறது.

JUST LISTED BY MOHAN
Residential Properties



Markham / Denison.


Gorgeous 3 Bedrooms House W/to Bottom Upgrades.
Very Bright & Spacious Home, Harwood Floor, New Oak Stircase.
Close To School, High Demand Area.



Mohan PANCHALINGAM
Sales Representative
Dir: 647.321.7575
E: mohan_panch@hotmail.com

RE/MAX COMMUNITY
Realty Inc, Brokerage
Bus: 416.287.2222
Fax: 416.282.4488
1265 Morningside Ave., # 203
Toronto ON M1B 3V9
Each Office Independently Owned and Operated

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களின் அருகில் ஒரு பாலி

**ஆர் எஸ்**

அனிருத் மற்றும் சிம்பு ஆகியோர் பாடியதாக வெளியாகியிருக்கும் பீப் பாடல் தொடர்பில் சமூகவலைத் தளங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கருத்து பகிர்வுகளும் எதிர் வினைகளும் மெய் சிலிர்க்க வைக்கின்றன.

பெண்களை கொச்சைப்படுத்தும் மொழிப் பயன்பாடு அல்லது பெண்களை கீழானவர்களாக சித்தரிக்கும் கருத்துவெளிப்பாடு என்பது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது என்பதில் மாற்றுக் கருத்து எதுவும் இருக்கமுடியாது.

ஆனால் வெறுமனே வார்தை வெளிப்பாட்டிற்காகவும் அதனை பிரபலமானவர்கள் பயனபடுத்தி விட்டார்கள் என்பதற்காகவும் குத்தி முறியும் நம்பில் பலர் எங்கள் வீடுகளுக்கு அருகில் அல்லது எங்கள் குடும்பத்தில் பாலியல் துன்புறுத்தல்களை எதிர் கொள்ளும் குழந்தைகள் மற்றும்; பெண்கள் குறித்து ஏன் இத்தனை அக்கறை கொள்வதில்லை என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

கனடாவில் வாழும் வயதானவர் களில் 32 சதவீதமானவர் கள் சிறுவர் துஸ்பிரயோகங்களை எதிர் கொண்டவர்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சிறுவர்களாக இருக்கும் போது பாலியல் துன்புறுத்தல்களையும் வன்முறைகளையும் எதிர் கொள்பவர் கள் உளவியல் தாக்கங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவீன வளர்சியினை சந்தித்துள்ள நாடுகளில் சிறுவர் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதாக அமெரிக்காவை தளமாக கொண்டுள்ள சிறுவர் உரிமைகளுக்கான அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பின் தகவல்களின் அடிப்படையில் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான சம்பவங்களில் 5 வீதமானவை மட்டுமே காவல்துறையில் முறையிடப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. குழந்தைகளில் 10 இல் ஒருகுழந்தை 18 வயதிற்கு இடையில் பாலியல் அத்து மீறல்களை சந்திப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 60 வீதமானவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து எவரிடமும் முறையிடுவதில்லை.

இதேவேளை 90 வீதமான குழந்தைகள் மீதான பாலியல் அத்துமீறல்கள் அந்த குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமானவர்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதனாலேயே அவர்கள் குறித்து முறையிட முடியாதநிலை அந்த குழந்தைகளுக்கு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அயலவர்கள் குடும்ப நண்பர்கள் அல்லது உறவினர்களே குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குவதாகவும் குறிப்பிடப் படுகின்றது.

குறிப்பாக குழந்தைகள் ஒன்று கூடும் இடங்களான பாடசாலைகள், மதநிறுவனங்கள், சமூக மையங்கள் போன்றவற்றில் இந்த பாலியல் துன்புறுத்தல்கள் அதிகளவில் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. 60 சதவீதமான குழந்தைகள் அவர்களின் குடும்பம் மிகமிக நம்பிக்கை கொண்டுள்ளவர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பாலியல் துன்புறத்தல்களுக்கு உள்ளாகும் 7 குழந்தைகளில் ஒரு குழந்தை இளம் வயதுடைய ஒருவரால்; பாலியல் துன்புறுத்தல்களை எதிர் கொள்வதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

குறிப்பாக 12 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களால் இவ்வாறான பாலியல் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த பாலியல் துன்புறுத்தல்களை மேற் கொள்பவர்கள் குறித்த பொதுவமான அம்சங்கள் அல்லது குணாதிசயங்களை அடையாளப் படுத்த முடியாதிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒவ்வொருவரும் வெவ்வேறு மனநிலைகளையும் பின்புலங்களை யும் வாழ்கை முறைகளையும் கொண்டிருப்பதாகவும் இவர்களுக்கிடையிலான பொதுவான இயல்புகளைகாண முடியாதிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

குழந்தைகள் தம்மீது பாலியல் துன்புறத்தல் மேற்கொள்ளப் படுகின்றது என்பது உணர முடியாதவர்களாக வளர்க்கப் படுகின்றார்கள் என்பதே மிகப் பெரிய கவலையாக இருக்கின்றது.

துரதிஸ்டவசமாக தமிழ் பெற்றோர் இந்த விடயம் குறித்து மிக தூரமாக விலகியிருக்கின்றார்கள் என தமிழ் சமூகசெயற்பாட்டளார் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் பண்பாடு அல்லது குடும்ப

## குற்றம்சாட்டியவரின் குரல் !!



தனது பூப்புனித நீராட்டுவிழாவிற்கான படப்பிடிப்பின்போது தன்னைப் புகைப்படம் எடுத்த புகைப்படப்பிடிப்பாளரால் தான் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாக ஒரு தமிழ் பெண் காவல் துறையில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

அதனை தொடர்ந்து அவர் தனது சமூகவலைத் தளத்திலும் தன் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் அத்துமீறல் குறித்து அவர் பதிவொன்றையும் வெளியிட்டிருந்தார்.

2000ம் ஆண்டில் இடம்பெற்ற இந்த அத்துமீறல் குறித்து 15 வருடங்களின் பின்னர் முறையிடப்பட்டுள்ளது ஏன் என்ற கேள்வி பலர் மத்தியில் எழுகின்றது அதில் உள்ள நியாயமும் தவிரக்க முடியாததுதான்.

ஆனால் ஒருபெண் தனது அடையாளத்தை வெளிப்படுத்தியவாறு தன் மீது "ஒருவர்" பாலியல் அத்துமீறலை மேற்கொண்டார் என்று வெளிப்படையாக அறிவிக்கின்ற நிலைமாற்றத்தின் அடையாளம் என்பதைநாம் கண்டுகொள்ள தவறிவிடுகின்றோம்.

இவருடைய குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்பதைகாவல்துறையும் நீதித் துறையும் கண்டறியட்டும்.

ஆனால் தன் மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு அத்துமீறலை வெளிப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட ஒருவர் எடுத்துக் கொண்ட கால எல்லையினை கேள்விக்குட்டுபடுத்துவதைவிட இது போன்ற சம்பவங்கில் இருந்து நாம் கற்றுக் கொள் வேண்டிய பாடங்கள் எவை என்பதையே நாம் ஆராயவேண்டும். பதின்ம வயதுகளில் தன்மீது மேற்கொள்ளப்படும் பாலியல் அத்துமீறலை புரிந்துகொள்ளக் கூடியவர்களாக நாம் எமது குழந்தைகளை வளர்கின்றோமா? தன் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் அத்துமீறலை முறையிடக் கூடிய அல்லது அதுகுறித்து உரையாடக் கூடிய தொடர்பால் வெளியினை எமது குடும்பங்களில் நாம் கொண்டிருக்கின்றோமா ?

அவ்வாறு முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டால் அந்தப் பாதிப்பினை ஏற்படுத்தியவர் எமது நெருக்கிய குடும்ப உறவினர் அல்லது நண்டர் என்றாலும் அவரை கேள்விக்கு உட்படுத்த அல்லது எச்சரிப்பதற்கானஉறுதியாக மனநிலை எங்களிடம் இருக்கின்றதா ?

குழந்தைகள் மீதான அத்துமீறல்களை சட்டத்தின் மூன் கொண்டுசென்று பாதிப்பினை ஏற்படுத்தியவருக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்கக் கூடிய பொறுப்புடமை எங்களிம் உள்ளதா ?

இந்த கேள்விகளுக்கான பதில்களை தெரிந்து கொள்வதன் ஊடாகவே நாம் "காலம் கடந்த" குற்றச்சாட்டை ஆராயவும் அதுகுறித்து முடிவிற்கு வரவும் முடியும்.

## குற்றமற்றவரின்

1981 மற்றும் 1982ம் ஆண்டுகளில் 8 பெண்கள் மீது ப
குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவர் நீதிமன்றத்தால் குற்
குற்றமிழைக்கவில்லை என்று அவர் மேற்கொண்ட மேல்மு
பின்னரே நிறைவடைந்தது. ஆம் அவர் குற்றமற்றவர் என தீர்ப
2010ம் அவர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றங்களில் இருந்

தற்போது 67 வதாகும் Ivan Henry என்பவர் குற்றமற்றவர்
நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் அவர் 26 வ
களித்திருக்கின்றார். தான் செய்யாத குற்றத்திற்காக தவறான மு
வழங்கி தனது வாழ்கையினை பாழாக்கிய நீதிமன்றம் தனக்கு
என்று அவர் வழங்கு தாக்கல் செய்திருந்தார். அவருடைய மே
கொண்ட பிரிட்டிஸ் கொலம்பியா மேன் முறையீட்டு நீதிமன்
ஈட்டுத் தொகையினை வழங்கவேண்டும் என்றும் அறிவுறுத்
நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைவாக அவருக்கான நட்டஈட்டுத் தெ
வழங்கியிருப்பதாகவும் எனினும் எவ்வளவு தொகை வழங்கப்பட்
என்றும் Ivan Henry யின் சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.

கனேடிய வரலாற்றில் தவறாக தண்டிக்கப்பட்டு அதிக கா
ஒருவதாக Ivan Henry வரலாற்றில் பதிவாகியிருக்கின்றார். ஆனா
வரலாற்று பதிவும் நகர சபையனால் வழங்கப்படுகின்ற நட்டஈடும்
மறந்துவிட முடியாது.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலை அல்லது குழந்தையை குற்றவாளியாக்கிப் பார்க்கும் நிலையும் எங்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றது.

ஒரு குழந்தை மீதுபாலியல் அத்துமீறலை ஒருவர் மேற்கொண்டால் அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக பாதிக்கப்பட்ட குழந்தையையே தவறிழைத்திருப்பதான கோணத்தில் அணுகும் போக்கு எமது பெற்றோர்களிடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் எமது சமூகத்தில் பலர் இன்னமும் "நல்லவர்களாகவும்" "வல்லவர்களாகவும்" வாழமுடிகின்றது.

இளம் வயதில் குழந்தைகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதால் அவர்கள் மிகக் கடுமையான உளவியல் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இது அந்த குழந்தையின் எதிர்காலத்தையே மோசமானதாக மாற்றிவிடுகின்றது. அவர்களுடைய ஆளுமை

# பாலியல் குற்றவாளி?

அமைப்பு என்பன இந்த விடயங்கள் குறித்த திறந்த உரையாடலை குழந்தைகளுடன் மேற்கொள்ள முடியாத இடைவெளியினை எமது பெற்றோர்களிடத்தில் ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால் குழந்தைகள் தம்மீது மேற்கொள்ளப்படும் பாலியல் துன்புறுத்தல்களை அல்லது அத்துமீறல்களை பெற்றோரிடம் தெரிவிக்கவோ முறையிடவோ முடியாதநிலைஏற்படுகின்றது.

அதனைதாண்டி மேற்கொள்ளப் படும் முறைப்பாடுகளையும் பெற்றோர் கண்டுகொள்ளாத அபிவிருத்தி கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பலவிடயங்களையும் இது பாதிக்கின்றது.

குழந்தைகளுக்கு பாலியல் அத்துமீறல்கள் குறித்த தெளிவினை சிறுவயதிலே ஏற்படுத்தவேண்டியது பெற்றோரின் கடமை.

ஒருவருடைய தொடுகையின் அர்த்தம் என்னஎன்பதை அந்த குழந்தை புரிந்துகொள்ளவேண்டும்.

குழந்தைகள் மீதானபாலியல் துன்புறுத்தல்கள் பல வடிவங்களில் பலவழிகளில் நடைபெறுகின்றது.

முறையற்றவிதத்தில் குழந்தைகளைதளுவுதல் ((Fondling) முதல் இருபால் உறவு (Intercourse) மற்றும் ஒருபால் உறவில் (Sodomy); ஈடுபடுவதற்கு தூண்டுதல் பாலியல் தொழிலில ஈடுபடுத்தல் மற்றும் அவர்களை பயன்படுத்தி ஆபாசப் படங்களை உருவாக்குவது வரை குழந்தைகள் பாலியல் வன்முறைகள் பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளபடுகின்றன.

இதேவேளை குழந்தைகளுக்கு வேண்டிய உணர்வுபூர்வமான ஆதரவை அல்லது உளவளஆற்றுப் படுத்தல்களைபெற்றோர் வழங்கத் தவறுவது கூட ஒருவகையில் குழந்தைகள் மீதான வன்முறையாகவே கருதப்படுகின்றது. இந்தவிடயங்களில் குழந்தைகளின் எதிர்பாரப்புகளைபெற்றோர் உரியவகையில் பூர்த்திசெய்வது மிகவும் இன்றியமையாதது என உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

பெற்றோர் அல்லது தகுதியான காவலரகளிடம் இருந்து உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சந்தர்பங்களில் குழந்தைகள் தவறான திசைகளை தேர்ந்தெடுப்பதற்கும் அதுவாய்பினை ஏற்படுத்திவிடுகின்றது.

இங்குள்ள நேரநெருக்கடி ஒன்றுக்கு பலவான வேலைகள் மற்றும் வார இறுதிநாள் ஒன்று கூடல்கள் மற்றும் நிகழ்சிகள் நேரமற்றவர்களாக எங்களைமாற்றி விட்டுள்ளன.

ஆனால் எமது குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்காகவே ஓடிஓடி உழைப்பதாக கூறிக் கொள்ளும் பெற்றோர்கள் அந்தகுழந்தைகளின் அடிப்படை உணர்வுசார் (Emotional Needs) தேவைகளை பூர்த்திசெய்யத் தவறுவதன் மூலம் நிகழ்காலத்தை இருண்டு போகச் செய்வதோடு அவர்களது எதிர்காலத்தையும் இல்லாமல் செய்வதாகவே அமைந்துவிடும்.

எனவே குழந்தைகளின் எதிர்காலம் நீங்கள் விரும்பும் வகையில் இருக்க வேண்டுமானால் அவர்களோடு மனம் விட்டு பேசுங்கள் அவர்களின் ஆள்மன விருப்பங்களை கேட்டறியுங்கள் அவர்கள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுப்பது மட்டுமே சிறந்த பெற்றாறாக ( Best Parenting) இருக்காதுஅவர்களின் கதைகளை கேட்பதும் அவர்களுக்கான ஆதரமாக (Moral Support) நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதைஅவர்கள் நம்பும் வகையில் செயல்படுவதுமே இப்பொழுது மிக அவசியமானது.

## குற்றம்சாட்ப்பட்டவரின் கதை!!

கனேடிய ஊடகங்களில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வந்த செய்தி ஒன்று தமிழ் மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

2000ம் ஆண்டில் தனது பூப்புனித நீராட்டுவிழாவிற்கான படப்பிடிப்பின் போது குறித்த புகைப்படப் பிடிப்பாளர் தன்மீது பாலியல் துன்புறுத்தலை மேற்கொண்டதாக பெண் ஒருவர் மேற்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் ரொரன்ரோ காவல்துறைநயின் 42வது பிரிவில் சரணடைந்துள்ளார்.

இவர் மீது 6 குற்றச்சாட்டுகள் பதிவாகியிருக்கின்றன. அதேசமயம் இவரால் மேலும் பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ள காவல் துறையினர் அவ்வாறானவர்கள் தம்மை தொடர்பு கொள்ளுமாறும் கோரியிருந்தனர்.

இதற்கு முன்னரும் தமிழர்கள் தொடர்பான செய்திகள் இது போன்று பிரசுரமாகியிருக்கின்ற போதிலும் அதில் இடம் பெற்றுள்ள நபர் அதிகம் பிரபலமற்றவராக அல்லது பலருக்கும் தெரிந்த ஒருவராக இல்லாமல் இருந்தமையால் அந்த செய்திகளை நாம் சாதாரணமாக கடந்திருக்கின்றோம்.

இப்போது வெளியாகியிருக்கும் செய்தியில் இடம் பெற்றுள்ளவரை பலர் அறிந்திருக்கின்றார்கள் "அவர்" இங்குள்ள பலருக்கும் நெருக்கமானவராக இருக்கின்ற ஒருவர்.



அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டும் அது சுமத்தப்பட்டுள்ள கால இடைவெளியும் பல்வேறு விதமான வாதப் பிரதிவாதங்களை எம் மத்தியில் தோற்றுவித்துள்ளன.

இது போன்ற விடயங்களை ஊடகங்கள் கையாளும் முறை குறித்தும் கேள்விகள் எழுகின்றன.

ஆனால் காவல்துறையால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களை அறிவித்தல்களை மக்கள் மத்தியில் பகிரவேண்டியது ஊடகங் களின் கடமையாகின்றது.

காரணம் குற்றஞ்சாட்டப்பட்டவரால் மேலும் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் அவர்கள் டிதனை எப்படி முறையிடுவது என்ற தயக்கத்தில் அதனை வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம். இது போன்ற செய்தியிடல்கள் அவர்களை வெளியில் கொண்டுவரும் இதனால் உண்மையில் குறித்த நபர் குற்றமிழைத்திருந்தால் அவரை தண்டனைக்கு உட்படுத்த அது உதவியாக அமையும்.

மறுபுறம் இதுபோன்ற அத்துமீறல்களில் ஈடுபடுகின்ற ஏனையவர்கள் தமக்கும் இது போன்றநிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக அதனை கைவிடுவதற்கும் அது தூண்டுகோலாக அமையும்.

ஒருவர் நீதிமன்றதால் குற்றவாளியாக இனம் காணப் படுவதற்கு முன்னரே எவ்வாறு அவர் குறித்த தவாறன பார்வையினை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும் என்ற கேள்வியில் நியாயம் இல்லாமலும் இல்லை.

அதே சமயம் இவ்வாறான செய்தி அறிக்கையிடல்கள் குற்றஞ் சாட்ப்பட்டவரின் ஒட்டு மொத்தகுடும்பத்தையும் சீரழித்து விடும் அபாயமும் காணப்படுகின்றது.

அவர்களை தெரிந்தவர்கள் மற்றும் அறிந்தவர்கள் அவர்களிடம் இருந்து அந்நியப்படுத்தப் படுவதோடு அந்த நபரின் குடும்பம் தனித்து விடப்படுகின்ற நிலையும் கவனிக்கப்பட வேண்டியது.

ஒருவர் இழைத்த குற்றத்திற்காக அவரின் குடும்பம் முழுவதும் தண்டிக்கப்படுவது நியாயமானதா என்ற கேள்வியும் எழுகின்றது.

எந்த ஒரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் ஒன்று உண்டு என்பதே அதற்கான பதிலாக இருக்கும்.

ஆதிகரித்த பலம், ஆளுமை, சூழ்நிலைகளின் சாதகத்தை பயன்படுத்தி பலவீனமான தரப்பின் மீதுமேற்கொள்ளப்படும் அத்து மீறல்களின் வெளிப்பாடு மிகமோசமான எதிர்வினையாகவே அமைந்துவிடும் என்பதே அதன் பொருளாகும்!

அதேசமயம் குற்றம் நிரூபிக்கப் படும்வரை சட்டத்தின் முன் அனைவரும் நிரபராதிகளே (All innocent until proven guilty) என்பதையும் நாம் அனைவரும் மீளவும் நினைவில் கொள்ளவேண்டியதும் அவசியமானது

## ...ற்றமற்றவரின் கதை!!



...8 பெண்கள் மீது பாலியல் வன்முறைகளை மேற்கொண்டதாக ...திமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். தான் ...ற்கொண், மேல்முறையீட்டின் விசாரணை 27 வருடங்களின் ...றமற்றவர் என தீர்பளித்த நீதிமன்றம் அவரை ... குற்றங்களில் இருந்தும் விடுதலை செய்தது.

...ன்பவர் குற்றமற்றவர் என்று மேன்முறையீட்டு ...னால் அவர் 26 வருடங்களை சிறையில் ...ந்திற்காக தவறான முறையில் தண்டனையை ... நீதிமன்றம் தனக்கு நட்டஈடு வழங்கவேண்டும் ...தார். அவருடைய கோரிக்கையினை ஏற்றுக் ... முறையீட்டு நீதிமன்றம் அவருக்கான நட்ட ... என்றும் அறிவுறுத்தியது. மேன்முறையீட்டு ...க்கான நட்டஈட்டுத் தொகையினை கனேடிய மத்திய அரசாங்கம் ... தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்த முடியாது ...ிவித்திருந்தார்.

...க்கப்பட்டு அதிக காலத்தை சிறையில் கழித்த மூன்றுபேரில் ...யிருக்கின்றார். ஆனால் அவர் இழந்த வாழ்க்கையின் வசந்தத்தை ...கப்படுகின்ற நட்டஈடும் மீளப் பெற்றுத் தராது என்பதையும் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சிமாற்றம்

# நிலக்கபளீகரத்தை இல்லாதொழிக்குமா?

**கலாநிதி சர்வேந்திரா**



புலம்பெயர் தமிழர் அமைப்பின் தலைவர் ஒருவருடன் அண்மையில் உரையாடும் போது அவர் ஒரு தகவலைக் கூறினார். இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டமை குறித்து அனைத்துலக மட்டத்திலான சட்ட நடவடிக்கைகள் குறித்து தாங்கள் ஆராயத் தொடங்கியதாகவும் ஆட்சிமாற்றம் காரணமாக கபளீகரம் செய்யப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேசி முயற்சிகளை மேற்கொள்ளும் காரணத்தால் தமது எண்ணத்தை சற்று ஒத்தி வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். புதிய இலங்கை அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதிகளில் நிலக்கபளீகரத்தைக் கைவிடும் என்ற நம்பிக்கை அவரிடம் இருக்கவில்லை.

புதிய அரசாங்கம் தமிழ் மக்களிடம் இருந்து கபளீகரம் செய்யப்பட்ட காணிகளை மீள வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கிறது. மிகக் குறைந்த அளவிலான காணிகளே மீள வழங்கப்பட்டுள்ளன. விரைவில் 6000க்கும் மேற்பட்ட காணிகள் மீள வழங்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகின்றன. புதிய அரசாங்கம் தமிழ் மக்களின் நிலங்களைக் கபளீகரம் செய்யும் முயற்சியைக் கைவிடுமா?

இந்த விடயத்தில் சிங்களம் மிகத் தெளிவான செயற்திட்டத்துடன் செயற்பட்டு வருகிறது. இது உண்மையில் ஒரு அரசாங்கத்தின் திட்டம் அல்ல. அரசின் திட்டம். அரசின் கொள்கை (state policy). இதனால் எந்த சிங்கள அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிலக்கபளீகரம் தொடரவே தான் செய்யும். செய்யப்படும் முறையிலும் வேகத்திலும் வேறுபாடுகள் இருக்கக்கூடும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் ஆபத்தினை நன்கு உள்வாங்கிக் கொள்ள வழிசெய்யும் வகையில் இலங்கை அரசின் நிலக்கபளீகரத் திட்டநிரல் தொடர்பான சில விடயங்களைக் முதலில் குறித்துக்கொள்வோம்.

1. சிங்களத் தேசியவாதத்தைப் பொறுத்தவரை இலங்கைத்தீவு சிங்கள தேசத்துக்குரியது. ஏனையோர் அனைவரும் வந்தேறுகுடிகள். இவர்கள் வாடகைக் குடியிருப்பாளர்கள் போன்றவர்கள். இதன் காரணமாக வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்கள் என்பதனை சிறிலங்கா அரசு ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை.

2. இந்தியாவின் அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கைத்தீவின் வடகிழக்குப் பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பூமி என இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் நடைமுறையில் நிலம் தொடர்பான எந்த அதிகாரமும் தமிழர் கைகளுக்குக் கிடைக்க சிறிலங்கா அரசு அனுமதித்ததில்லை. அனுமதிக்கப்போவதுமில்லை.

3. வடக்கு கிழக்கை தமிழர்களும் முஸ்லிம்களும் உரிமை கோருவதனை இல்லாதொழிக்க வடக்கு கிழக்கில் உள்ள நிலங்களைக் கபளீகரம் செய்தும், சிங்களவர்களைக் குடியேற்றம் செய்தும் சிங்களப் பகுதிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களுடன் இணைத்தும் இப்பிரதேசங்களின் மக்கள் குடிசனப் பரம்பலை மாற்றியமைத் தல் நிலக் கபளீகரக் கொள்கையின் பெறுபேறாக திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் தமிழர்களோ முஸ்லிம்களோ பெரும்பான்மையினர் இல்லாத நிலையினை காலப்போக்கில் உருவாக்கும் திட்டம் இதில் முக்கிய ஒரு பகுதி. கிழக்கிலிருந்து ஆரம்பித்து வன்னியூடாக வடக்கு நோக்கி நகர்தல் என்பதே நிலக்கபளீகரத்தின் திட்ட நடைமுறையாக உள்ளது.

4. ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்களத்தின் நிலக்கபளீகரப் போர்த்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதத்தினை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் ஆயுதம் தாங்கிய போரை வென்ற பின்னர் நில ஆக்கிரமிப்பினை மிகவும் வேகமாகவும் இலகுவாகவும் செய்யக்கூடிய வாய்ப்பு சிறிலங்கா அரசுக்கு கிடைத்திருக்கிறது.

5. இலங்கை அரசின் நிலக் கபளீகரத் திட்டம் இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தம்மை ஒரு தேசமாக அடையாளப்படுத்தும் நிலையினை, தகைமையினை இல்லா தொழிப்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதனால் தமிழர் தாயகம் ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பாக அமையாது அவற்றைத் துண்டாடுதல் சிங்களத் திட்டத்தில் முக்கியம் பெறுகிறது.

6. சிங்களத்தின் நிலக்கபளீகரத் திட்டம், நிலவடிவமைப்பு (Landscape) ஆக்கிரமிப்பினையும் முக்கிய பகுதியாகக் கொண்டுள்ளது. நிலவடிவமைப்பு நிலத்துக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்புகளிலேயே பொதுவாக உருவாகிறது. இதனை இன்னொரு வகையில் கூறுவதாயின் இயற்கைக்கும் (nature) பண்பாட்டுக்கும் (culture) உள்ள உறவுகளும் தொடர்புகளும் முரண்களும் நிலவமைப்பில் பிரதிபலிக்கும். குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களின் பண்பாட்டு அம்சங்கள் நிலவடிவமைப்பில் வெளிப்படும். உதாரணமாக கட்டிடங்கள்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோவில்கள், சாலைகள், பூங்காக்கள் போன்றவை அமைக்கப்படும்போது இவற்றின் வடிவம், பயன்படுத்தப் படும் நிறங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் இப்பகுதியில் வாழும் மக்களின் பண்பாட்டுடன் இணைந்த வகையில் அமைந்திருக் கும். இவை ஒரு நிலப்பரப்பின் வடிவமைப்பின் தன்மையினைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றும். தமிழர் தாயகப் பகுதிகளில் புதிது புதிதாக அமைக்கப்படும் புத்தர் சிலைகளும் கோவில்களும் தமிழர் தாயகத்தின் நிலவடிவமைப்பினை மாற்றியமைத்துக் கொண்டிருக் கின்றன. புதிதாக அமைக்கப்படும் கட்டிடங்களும் சிங்களக் கட்டிடக் கலையின் வெளிப்பாட்டை கூடுதலாகக் கொண்டவையாகவே அமையப் போகிறது. இதனால் தமிழர் தாயகத்தின் நில வடிவமைப்பு சிங்களப் பிரதேசங்களின் நிலவடிவமைப்பை ஒத்ததாக மாற்றமடையும் நிலை காலப்போக்கில் உருவாகும் ஆபத்தும் கூடவே காத்திருக்கிறது.

7. தமிழர் நிலத்திலும் நில வடிவமைப்பிலும் சிறிலங்கா அரசு ஏற்படுத்திவரும் மாற்றங் களை பின்னாளில் மீண்டும் மாற்றியமைப்பது என்பது இலகுவான காரியம் அல்ல. எதிர்காலத்தில் தமிழர் கையில் முழுமையான அதிகாரம் வரும் காலம் உருவாகும்போது கூட மீண்டும் மாற்றியமைக்க முடியாத அளவுக்கு மக்களோடும் (சிங்கள) மதத்தோடும் (பௌத்த) இணைந்த வகையிலேயே இம்மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பின்னாளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாயின் குடியமர்த்தப் பட்ட சிங்களவர்களோடும் பௌத்த மத நிறுவனங்களோடும் மோத வேண்டிய நிலையே தமிழர் தரப்புக்கு ஏற்படும். அனைத்துலக விழுமியங்களை மதிக்கும் ஒரு நாகரீகமான மக்கள் கூட்டத்தால் இதனைச் செய்யமுடியாது.




8. இலங்கையின் நிலக் கபளீகரமும் தமிழ் இனக் கபளீகரத்தின் ஒரு முக்கிய பகுதியாகத்தான் வடிவமைக்கப் பட்டுள்ளது. தமிழினத்தை இலங்கைத்தீவில் உதிரிகளாக்கும் இனக்கபளீகரத் திட்டத்தின் பாற்பட்டுத்தான் நிலக்கபளீகரம் நடைபெறுகிறது. இந்த வகையில் இது இனஅழிப்பின் (genocide) பகுதியாகத்தான் கருதப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சிறிலங்காவின் நிலக்கபளீகரத் திட்டத்தின் சில அம்சங்களையும் தமிழர் தேசத்திற்கு ஏற்படும், ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் குறித்துக் காட்டுகின்றன. இந் நிலக்கபளீகரத் திட்டத்தை சிறிலங்கா பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி மேற்கொண்டு வருகிறது. இவற்றில் மூன்று திட்டங்கள் முக்கியம் பெறுகின்றன.

முதலாவது, அரச காணிகளைப் பயன்படுத்தல். இலங்கைத்தீவில் மிகப்பெரும் நிலவுடைமையாளர் அரசே. இதனால் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள அரச காணிகளை அரசு தனது திட்டத்துக்கு ஏற்ப பயன்படுத்துவதற்குத் தடையாக சட்ட நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. இதனால் அரச காணிகளை மிக இலகுவாகத் தமது திட்டத்துக்குப் பயன்படுத்தும் நிலையில் சிங்களம் உள்ளது. பயன்படுத்தியும் வருகிறது. இராணுவக் குடும்பங்களின் குடியேற்றங்கள், விவசாய மற்றும் மீன்பிடிச் சிங்களக் குடியேற்றங்களுக்கு கூடுதலாகப் பயன்படுத்தப்படுவது அரச உடைமைக் காணிகளே.

இரண்டாவது, தனியார் காணிகளைக் கபளீகரம் செய்தல். தனியார் காணிகளையும், மக்கள் குடியிருந்துவந்த நிலப்பகுதிகளையும் இராணுவத் தேவைக்காகவும், மேம்பாட்டுத் திட்டம் என்ற போர்வையிலும் கபளீகரம் செய்யும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த நிலக்கபளீகர முயற்சிக்கு ஏற்ற முறையில் சட்டத்தையும் நிர்வாக இயந்திரத்தினையும் கையாளும் ஒரு பொறிமுறையை அரசு தோற்றுவித்துள்ளது.

மூன்றாவது, தமிழர் பிரதேசங்களில் உள்ள தமிழர்களின் தனியார் காணிகளை சிங்கள முதலாளிகளும் சிங்கள மக்களும் பணம் கொடுத்து வாங்கி அவற்றை சிங்கள உடமையாக்கும் திட்டம். இத்திட்டம் பாலஸ்தீனர்களின் கைகளில் இருந்த நிலங்களை யூதர்கள் தம்வசப்படுத்திக் கொண்ட முறையில் இருந்து சிங்களத்தின் அக்கறையினைப் பெற்றிருக்கிறது. எல்லையோரக் கிராமங்களில் உள்ள தமிழர் காணிகளும் தமிழர் தாயகத்தில் கேத்திர மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் உள்ள காணிகளும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் குறிவைக்கப்படுகின்றன.

இப் பின்னணியில் இன்று நம் முன்னால் உள்ள முக்கியமான கேள்வி இதுதான். சிங்களத்தின் இந்த நிலக்கபளீகரத்தை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்தப் போகிறோம்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுக்கள் நிலக்கபளீகரத்தைத் தடுத்து நிறுத்தப்போதுமானவையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் அச்சத்தை ஏற்படுத்திய ரஷ்ய விமானம் மீதான துருக்கியின் தாக்குதல்

அ. ஜான்லி



சிரியாவில் இடம் பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் சர்வதேச அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இருபிரிவுகளாக தாக்குதலில் ஈடுபடும் இருவல்லரசு நாடுகள் தங்கள் அணிகளில் உலகநாடுகளை உள்ளிடும் நடவடிக்கைகளால் நிம்மதியற்ற தேசங்கள் வேகமாக உருவாகி வருகின்றன. ரஷ்ய ஆதரவு நாடுகள் அமெரிக்க ஆதரவு நாடுகள் என பிளவுபட்ட துருவங்களாக மத்திய கிழக்கின் நிலை உருவாகியுள்ளது. 3ஆம் உலகப் போரின் ஒத்திகை நடவடிக்கைகள் போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கியுள்ள இச் சூழ்நிலை மேலும் வலுப்பெறும் வீதத்தில் ரஷ்யா போர்விமான அமெரிக்காத் தயாரிப்பு ஏவுகணை மூலம் துருக்கிய பாதுகாப்பு பிரிவினரால் அழிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஆதரவு நாட்கள் துருக்கி அயல்நாடுகளின் போர் நடவடிக்கைகளில் தன்னை கடுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாத நிலையில் ஓரளவு அமைதியான நாடாகவே இருந்து வந்தது. இந்நிலையில் அமெரிக்காவின் எதிரிநாடாகிய ரஷ்யாவின் விமானம் மீதான தாக்குதலால் நேரடியாக ரஷ்யப் பகையாளியாக தன்னை மாற்றியுள்ளது. அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் துருக்கி என்ற அழகியநாடு பலிக்கடா ஆகியுள்ளது.

கடந்த 1961 வரை எகிப்தின் ஒரு பகுதியாகவே சிரியா இருந்து வந்தது. 1961 செப். 28 இல் தனிநாடாக சுதந்திரம் பெற்றதிலிருந்து ஒரு கட்சி ஒரு ஆட்சி முறையே பின்பற்றப்படுகின்றது. 1970 முதல் குடும்ப ஆட்சி முறையே சிரியாவில் நடைமுறையிலிருந்தது. இந்நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் தன் தந்தைக்கு பின் ஆட்சி பீடமேறினார். இதன் பின்னராக ஜனநாயகத்துக்காக போராடிய குழுக்கள் சிறைப்பிடிக்கப்பட்டன. இதையடுத்து சுதந்திரத்தை விரும்பிய சில போராட்டக் குழுக்கள் உருவான நிலையில் இதனை அமெரிக்கா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியது. சிரியாவில் ஷியா முஸ்லிம்களுக்கும் சன்னி முஸ்லிம்களுக்கும் இடையே நீண்ட காலமாக பனிப்போர் நடக்கிறது. இங்கு சிறுபான்மையாக உள்ள ஷியா பிரிவைச் சேர்ந்த பஷார் அல் — ஆஷாத் ஜனாதிபதியாக இருப்பது பெரும்பான்மையாக உள்ள சன்னி பிரிவினருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. சன்னி பிரிவினருக்கு ஆதரவாக ஐ.எஸ். உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகள் போரிடவே 2011 இல் சிரிய யுத்தம் ஆரம்பமாகியது. இதில் சிரிய ஜனாதிபதியை ஆட்சியிலிருந்து நீக்க போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது. மறுபக்கத்தில் ஜனாதிபதி அசாத்திற்கு ஆதரவாக ரஷ்யா உள்ளது. இவரது ஆட்சிக்கு ஆபத்து நேருமானால் சிரியா முழுவதும் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்பதும் ரஷ்யாவின் நியாயமான வாதமாகும். இந்நிலையில் சிரியாவில் உள்ள ஐ.எஸ், அமைப்பை ஒழிக்கும் தாக்குதலணி நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவை இணைத்துக கொள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நிபந்தனை ஒன்றை அளித்துள்ளார். சிரியா ஜனாதிபதியை பாதுகாக்கும் நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கி ஐ.எஸ், தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் மட்டும் ரஷ்யா பங்கேற்கும் என இணங்கும் பட்சத்தில் 65 நாடுகள் இணைந்துள்ள கூட்டுப்படைக்கு ரஷ்யாவை வரவேற்போம் என தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளை பிடித்து ஐ.எஸ்.ஐ.எஸ், பயங்கரவாத அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ரஷ்யா மற்றும் அமெரிக்க கூட்டுப்படையினர் இவ்வமைப்பு மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், அதிகமான அளவில் விமானத்தாக்குதல்களே இடம் பெறுகின்றன. ரஷ்யா ஐ.எஸ். அமைப்புகளின் இலக்குகள் மீது மட்டுமல்லாமல் சிரியா கிளர்ச்சியாளர்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்கிறது. அமெரிக்காவின் தாக்குதலின் வேகம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்றாலும ரஷ்யாவின் விமானத்தாக்குதல்கள் துல்லியம் மிக்கதாக உள்ளமையால் ஐ.எஸ். மற்றும் சிரிய கிளர்ச்சியாளர்கள் கடும் சேதங்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையில் அமெரிக்காவின் ஆதரவுடன் செயற்படும் சிரிய கிளர்ச்சியாளர்கள் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் அமெரிக்காவுக்கு கடும் நெருக்கடியை கொடுத்திருக்கிறது. தன் ஆதரவு சார்ந்த அரசாங்கத்தை ஆட்சி பீடமேற்றும் கனவை அமெரிக்காவினால் நெருங்க முடியாமல் போகுமளவுக்கு ரஷ்யாவின் கை சிரியாவில் ஓங்கியுள்ளமை அமெரிக்காவின் ஏகாதிபத்திய நாட்டாண்மைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட மோசமான சமிக்ஞையாகும. அந்த வகையில் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவுக்குள்ளது. தாக்குதலில் ஈடுபடும் இருநாட்டு விமானங்களும் சற்றுத் தடுமாறினாலும் 30 வினாடிகளுக்கு குறைவான நேரத்தில் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளும் நிலை கூட எதிர் நோக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக பல்வேறு நிலைகளில் அமெரிக்கா ரஷ்யா இராணுவ உரசல்கள் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே காணப்பட்டன.

இந்நிலையில் தான் துருக்கி சிரியா நாட்டு எல்லையில் ரஷ்ய நாட்டு இராணுவப் போர் விமானம் துருக்கிய பாதுகாப்புப் பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. சுகோய் எஸ்யூ 24 ரக போர் விமானத்தை துருக்கியின் எப். 16 ரக போர் விமானம் ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தியுள்ளது. தீப்பற்றியபடி எல்லையோர கிராமம் ஒன்றில் வீழ்ந்துள்ளது. இக்கிராமம் அல்—கைதா ஆதரவு கிளர்ச்சிப்படைகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதியாகும. இந்நிலையில் விமானத்திலிருந்த இரு விமானிகளும் பாராசூட் மூலமாக தப்ப முயன்ற வேளையில் தரையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவிமானி உயிரிழந்தார். அவரின் உடலை கைப்பற்றிய நஸ்ரா முன்னணி எனும் இயக்கத்தினர் அவரின் உடலைச் சுற்றி கோஷமிடும் வீடியோப் பதிவை வெளியிட்டிருந்தனர். மேலும் மற்றைய விமானியை இவர்கள் சிறைப்பிடித்துள்ளதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

இத்தாக்குதலானது உலக மட்டத்தில் பேரதர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் ரஷ்யாவின் பொறுமைக்கு பெரும் சவாலாகவும் அமைந்துளளது. சம்பவம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறுகையில் சிரியாவில் வேரூன்றியுள்ள தீவிரவாதத்தை அழிக்க ரஷ்யா தீவிரமாக போரிட்டு வரும் நிலையில் போர் விமானம் மீதான இத்தாக்குதல் ரஷ்யாவின் முதுகில் குத்தியதற்கு சமமானது எனவும் இதுபோன்ற குற்றங்களை சகித்துக கொள்ள முடியவில்லை எனவும் இந்த சம்பவம் ரஷ்ய — துருக்கி உறவில் வருந்தத்தக்க பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் கூறியுள்ளார். இச் சம்பவத்தின் பின்னர் கருத்துக் கூறியுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, துருக்கிக்கு தங்கள் ஆதரவு என்றும் கிடைக்கும் என்றும் ஒரு நாட்டின் இறையாண்மைக்கு ஏனைய நாடுகள் மதிப்பளிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். இது குறித்து நேட்டோ பொதுச் பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டால்டன் பெர்க் துருக்கி வான் எல்லைக்குள் ரஷ்ய விமானம் சென்றமைக்கு ஆதாரம் இருப்பதாக தெரிவித்துள்ளார். மேலும், முன்னரே நேட்டோ நாடுகளின் எல்லைப்பகுதியில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து எச்சரிக்கை விடுத்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ள அவர், சிரியாவில் ரஷ்யா நடத்திவரும் தாக்குதல்கள் பெரும்பாலும் ஐ.எஸ்,ஸுக்கு எதிராக நடத்தப்படுபவை இல்லை எனவும் ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் எந்த நாட்டிற்கும் தங்கள் ஆதரவு உண்டு என்றும் ஸ்டெல்டென்பர்க் குறிப்பிட்டுள்ளார். மேலும் ரஷ்ய விமானம் வீழ்த்தப்பட்ட விவகாரத்தில் துருக்கிக்கே தங்கள் ஆதரவு என்றும் இருக்கும் என நெட்டோ பொதுச் செயலாளர் உறுதி தெரிவித்துள்ளார். கடந்த 1949 இல் தொடங்கப்பட்ட நேட்டோ அமைப்பில் 28 நாடுகள் உறுப்பினராக உள்ள நிலையில் சிரியாவின் அரசாங்கத்துக்கெதிரான கிளர்ச்சியாளர்களுக்கு நேட்டோ நாடுகள் ஆதரவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனிடையே 69 போர் விமானங்கள் அதிநவீன ராடர் கருவிகள் ஏவுகணைத் தடுப்பு சாதனங்களை சிரியாவில் நிலைகொள்ளச் செய்துள்ள ரஷ்யா மீது ஏற்கனவே பல தடவைகள் போர் விமான அத்துமீறல்கள் தொடர்பாக குற்றச்சாட்டுகளை துருக்கி முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் ரஷ்யாவின் ஆளில்லா விமானத்தை துருக்கி இராணுவம் சுட்டு வீழ்த்தியிருந்தது. இவ்வாறான நிலைமைகளின் பின்னரே துருக்கியின் இந்த துணிகர தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதனிடையே துருக்கி நாட்டு மக்களிடையே தொலைக்காட்சி மூலமாக உரையாற்றிய துருக்கிய ஜனாதிபதி துருக்கி மக்கள் வாழும் பாயிர்பு காக் பகுதியில் ஐ.எஸ், தீவிரவாதிகள் இருப்பதாகக் கூறிக் கொண்டு யாரும் தங்களை முட்டாள [illegible] தேவையில்லை. அஜாக்கிரதையான நடவடிக்கைகள் எத்தகைய பின்விளைவை ஏற்படுத்தும் என்பது நேற்றைய சம்பவத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. எங்கள் நாட்டின் எல்லைப் பாதுகாப்பும் இறையாண்மையும் மீறப்படும் வேளையில் நாங்கள் அமைதியாக இருக்க வேண்டும் என யாருமே எதிர்பார்க்க கூடாது. எங்கள் நாட்டு பாதுகாப்பு மற்றும் எங்கள் சகோதர நாடுகளின் உரிமைகளை பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த சம்பவத்தை பெரிதுபடுத்தும் எண்ணம் எங்களுக்கு கிடையாது. பதற்றத்தையும் பிரச்சினையையும் உருவாக்க துருக்கி ஒரு போதும் விரும்பியது கிடையாது. அமைதி மற்றும் பரஸ்பர பேச்சுவார்த்தை போன்றவற்றில் மட்டுமே நம்பிக்கை கொண்டுள்ளது.'இனியும் அவ்வாறே இருக்கும்' என தெரிவித்தார். இந்நிலையில் ரஷ்யர்கள் யாரும் துருக்கிக்கு சுற்றுப்பயணம் செல்ல வேண்டாம் என ரஷ்யா அறிவுறுத்தியுள்ளது. துருக்கி மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டுமென்றும் துருக்கிக்கான அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் ரஷ்யாவிற்குள் கோரிக்கைகள் எழுந்து வருகின்றன. மொஸ்கோவில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் துருக்கி தூதரகத்தின் மீது கற்கள் மற்றும் முட்டைகளால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதும் ரஷ்யா துருக்கி நாடுகளின் பிளவுக்கு சான்றாக உள்ளன.

3 ஆம் உலகப் போருக்கான நாடிணைப்பு போட்டியில் தன்னை [illegible]வமாக அமெரிக்க ஆதரவு நாடென ரஷ்ய விமான தாக்குதல் மூலம் உலகுக்கு அறிவித்துள்ள துருக்கி, இன்றும் இனிவரும் காலங்களிலும் சர்வதேச ஊடகங்களில் பல தலைப்புச் செய்திகளுக்கு சொந்தமாக்கக் கூடும். அந்த வகையில் துருக்கி சம்பந்தப்பட்ட விடயங்களை தேடியறிந்து சேமிக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. நீக்க முடியாத பேசுபொருளாக மாறியுள்ள துருக்கியின் முக்கிய வரலாறுகள் இனிமேலும் உலகளவில் தவிர்க்க முடியாததாகி விடும்.



முதலாம் உலக யுத்தத்தில் தோல்வியைத் தழுவிய அன்றைய ஒட்டோமான் சாம்ராஜ்ஜியத்தை ஆண்ட சக்கரவர்த்தி பதவியில் இருந்து நீக்கப்பட்ட அரசியல் உள்நோக்கம் கொண்ட கெமல் அட்டடுர்க் என்ற இராணுவ அதிகாரி துருக்கியின் ஆட்சியை கைப்பற்றிய பிறகு அது நவீனமடைய தொடங்கியது. கல்வி மூலமாக புதிய கலாசாரம் உத்வேகம் கண்ட துருக்கியில் பழைமைவாதங்கள் இல்லாதொழிப்பு ஒருபுறமிக்க மறுபக்கமாக சிறுபான்மை இனங்கள் அடக்கப்பட்டு துருக்கி மொழித் திணிப்பும் இடம்பெற்றது. அவ்வாறே தென்கிழக்கு மலைப்பிரதேசங்களில் வாழும் குர்து மொழி பேசும் மக்களின் இன அடையாளமும் புறக்கணிக்கப்பட்டது. இந்நிலையில் இன்னும் மாற்றப்பட முடியாத ஒன்றாக உள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவம் இன்றுவரை துருக்கிக்கு எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது.

சிறுபான்மையினரான குர்து மற்றும் ஆர்மீனியர் மீதான ஜனநாயக மீறல்கள் இதற்கு கடும் விளைவாக உள்ளன. மேலும் சிரியாவில் இடம்பெறும் படுகொலைகளுக்கு துருக்கியின் பங்கும் இன்றியமையாததாக உள்ளது. 8 — 15 வயதுள்ள சிறுவர்களுக்கு பயிற்சியளித்து சிரியாவின் அலெப்போ நகருக்கு அருகில் உள்ள கிராமங்களில் பயங்கரவாதக் குற்றங்களில் ஈடுபட வைக்கும் துருக்கிய அரசு ஐ.எஸ். அமைப்பினருக்கான நிதி உதவிகளையும் வழங்குவதில் பின்னிற்பதில்லை. மேற்கத்தேய நாடுகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயங்கரவாத அமைப்பினரையும் பயன்படுத்திக் கொள்ள தயங்குவதில்லை. இதனையே துருக்கி அரசும் செய்து வந்துள்ளது. இவ்வாறாக மத்திய கிழக்கின் அமைதிச் சீரழிவில் நேரடிப் பங்காளியான துருக்கி அதன் விளைவுகளை ஓரளவாக உணர்ந்த நிலையில் இனிவரும் காலங்களில் மிக மோசமாக உணரவேண்டி வரும். அமெரிக்க ரஷ்ய பலப்பரீட்சைக் களமாக துருக்கி மாறும் நிலையை வெகு விரைவாக எதிர்பார்க்கலாம். நாடுகளின் உள்நாட்டு நெருக்கடிகளுக்கு தீர்வை வெளிநாடுகளிடம் வேண்டி நிற்கும் நிலை மாற்றப்படாவிட்டால் குறித்த நாடுகள் மத்திய கிழக்கின் நிலையை சகல கண்டங்களும் அனுபவிக்கும் நிலைமை உருவாவதை தவிர்க்க முடியாமல் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இகுருவி

மற்றும்

# தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

இணைந்து வழங்கும்

## தனித் தமிழ் பெயர்களுக்கு 1000 வெள்ளிகள் பரிசு

தனித்தமிழ் பெயர்களுக்கு ஆயிரம் வெள்ளிப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பெற்றோர்களிடம் இருந்து அதற்கான விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன.

2013 — 2015 ஆம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்கள் மட்டும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். அதற்கான விண்ணப்பங்கள் யாவும் 2013 தைத் திங்கள் (சனவரி) 10 ஆம் நாளுக்கு முன் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் தகுதிபெறும் போது குடவோலை மூலம் பரிசு பெறுபவர் தேர்ந்தெடுக்கப் படுவர். விழா நாளன்று நேரில் கலந்து கொள்பவர் மட்டும் பரிசுக்கு உரித்துடையவர் ஆவர். கழகத்தின் முடிவே இறுதியானது.

நடைபெற இருக்கும் தமிழ்ப் புத்தாண்டு 2047, தைப் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்த நாள் விழாவில் (சனவரி 14, 2013 மாலை 6.30 மணி) பரிசு வழங்கப்படும்.

---

### விண்ணப்பப் படிவம்

(1) குழந்தையின் பெயர் ____________________

(2) பிறந்த நாள் ____________________

(3) பிறந்த இடம் ____________________

(4) தாயாரின் பெயர் ____________________

(5) தந்தையாரின் பெயர் ____________________

(6) முகவரி ____________________

____________________

(7) தொ.பே. இல. ____________________

குழந்தையின் பெயரை உறுதிப் படுத்தும் பிறப்புச் சான்றிதழ் (படி) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் தரப்பட்டுள்ள தரவுகள் முற்றிலும் உண்மையானவை என இத்தால் உறுதிப் படுத்துகிறோம்.

தாயார் கையெழுத்து ____________________

தந்தையார் கையெழுத்து. ____________________


அனுப்ப வேண்டிய முகவரி:

**தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்**

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" —பாரதியார்

TCWA, 56 Littles Road, Scarborough, ON, M1B 5C5









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெறிக்க விடலாமா?

**சிவமணி**





சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜீத், ஸ்ருதி ஹாஸன், லக்ஷ்மி மேனன் உள்ளிட்டோர் நடித்து அண்மையில் வெளிவந்த திரைப்படம் வேதாளம். தெறிக்கவிடலாமா? என்னும் பஞ் வாசகத்துடன் வசூலைத் தெறிக்க விட்டுக்கொண்டிருந்த பொழுது சென்னையில் தூறலுடன் தொடங்கிய மழை சில நாட்களாக தமிழ் நாட்டின் பலபகுதிகளிலும் தன்னைத் தெறிக்க விட்டிருந்தது. விளைவு பாதிப்புக்குள்ளான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தெறித்தோடிய வண்ணமுள்ளார்கள் (கட்டுரையை எழுதிக்கொண்டிருந்த பொழுது).

"தெறி" என்னும் வார்த்தைப் பிரயோகம் ஈழத்தமிழர்களுக்கு நன்கு பரீட்சயமான ஒன்று. அனேகமாக பிரிவை குறிக்கும் ஒருபதமாகவே இது காலம் காலமாக இருக்கின்றது. உதாரணமாக "அவருக்கும் இவருக்கும் தெறிச்சுட்டுதாம்" என்பதை நாங்கள் எமது அன்றாட வாழ்க்கையில் கேள்விப்படுவதுண்டு. மறுபுறம் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் ஊடகம் மொழியாகும். உலகில் பல்வேறு மொழிகள் இருக்கின்றன. இவற்றில் இலக்கண வரம்பு கொண்டு, இலக்கிய அழகிய ஆக்கங்களை கொண்டு, பேச்சு, எழுத்து வழக்குகள் சிறப்பாகக் கொண்டு விளங்கும் சொற்ப மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழை உயர் வழக்கில் எழுத்துருவில் உபயோகிப்பது கற்றார் மரபாயினும் பேச்சு வழக்கு இடத்துக்கிடம் மாறுபட்டுக்காணப்படுகிறது. "ஒரூரின் பேச்சு இன்னோர் ஊருக்கு ஏச்சாக இருக்கும்" அளவுக்கு பிரதேசச் செல்வாக்கு பேச்சு மொழியில் காணப்படுகிறது. இந்த அடிப்படையில் சம்மாந்துறைக் காரர்கள் "தெறி" யை பின்வருமாறு அர்த்தப்படுத்துகிறார்கள்.


தெறிகாய் பருவம்: சொற்கேளாப் பருவம்

தெறிப்பான்: அடங்காதவன்

அதேபோல் நான் வாழ்ந்த வட—மாகாணத்தில் கூட்டமாக திரிந்த மாடுகளில் ஒன்று காணாமல் போனாலோ அல்லது கோழிக் கூட்டத்தில் இருந்து ஒரு கோழி தவறிவிட்டால் "தெறிகெட்டுப்போச்சு" என்னும் பதம் பாவிக்கப்படுவதுண்டு.

ஆனால் சினிமாவில் வந்த "தெறிக்க விடலாமா?" ஒரு வகை ஆளுமை அல்லது வீரத்தை குறிப்பதாகவே இருக்கிறது.

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோருக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை கட்சிக்குள் பேசித் தீர்க்காமல், ஊடகங்கள் வாயிலாக பகிரங்கப்படுத்துவது ஆரோக்கியமான தமிழ் அரசியல் கட்சியின் அரசியல்வாதிகள் என்னும் நிலைப்பாட்டிற்கு பொருத்தமானதல்ல. அண்மையில் அவுஸ்திரேலியா சென்றிருந்த சுமந்திரன், வடக்கு முதல்வர் கட்சி நடைமுறைகளை மீறி நடந்ததாகவும், அதனால் அவரை கட்சியிலிருந்து நீக்குமாறு கட்சித் தலைவரிடம் கோரியுள்ளதாகவும் அங்குள்ள ஊடகமொன்றிடம் தெரிவித்தார். இதனையடுத்து இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அண்மைய நாட்களாக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டு வருகின்றது. இப்படியாக கட்சிசார்ந்த அங்கத்தவர்கள் பேசவேண்டிய விடங்களை ஊடகங்களில் தெறிக்க விடலாமா? இப்பிரச்சினையை சுமூகமாக தீர்த்துக்கொள்ளும் வகையில் கட்சிக்குள் பேச்சுவார்த்தை நடத்துவதுதான் நல்ல அரசியல்வாதிகள் என்ற நம்பிக்கையை இவர்களுக்கு மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். இலங்கை அரசியல் சூழலில் நீண்டகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தமிழ் மக்களது உரிமைகள், அபிலாஷைகள், நீதி ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதில் மேற்கொள்ளப்படவேண்டிய நகர்வுகள் குறித்து செயற்பட்டு வரவேண்டியஇருவரும்இவ்வாறான பிரச்சினைகள் குறித்து பகிரங்கமாக விவாதிப்பது பொருத்தமானதல்ல வென்றே நினைக்கத் தோன்றுகிறது. கட்சிக்குள் இருப்பவர்களை இப்படி தெறிக்க விடலாமா? என ஏனைய கட்சி



உறுப்பினர்களை கேட்க தோன்றுகிறது. இல்லை எல்லோரும் சேர்ந்து தெறிக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறார்களா என்ற சந்தேகத்தையும் உருவாக்குகிறது.

தமிழகம் எமது தொப்புள் கொடி உறவு என உலகம் எல்லாம் தெறிக்கவிட்ட உலகத்தமிழர்கள் நாங்கள். இன்று தமிழக தொப்புள் கொடிகள் எல்லாம் கொட்டிய மழையின் அச்சத்தில் நிலைகுலைந்திருக்கிறது. மத்திய அரசின் நிவாரணம் வரும், மானில அரசின் நிவாரணம் வரும் என்ற அரைகுறை நம்பிக்கையுடன் காத்திருக்கிறது தமிழக உறவுகள். ஆனால் ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகளோ அல்லது ஈழத்தமிழர்களை பிரதிநித்துவம் செய்கிறோம் என்னும் உலகத் தமிழ் அமைப்புகளோ அல்லது தமிழக சினிமாவில் ஆதிக்கம் செலுத்தும் ஈழத்தமிழ் நிறுவனங்ள் ஒன்றும் உதவிகளோடு வருகிறோம் என எந்த "பஞ்"சையும் இதுவரை தெறிக்க விடவில்லை. இந்தவகைநிலைப்பாடு எங்களை ஒரு சுயநலவாதக் கும்பலாக இனம்காட்டி எங்களை தமிழகம் தெறிக்கவிட்டுவிடுமா? இல்லை ஈழத்தமிழர்கள் பாசத்தால் ஒன்றுபட்டவர்கள் உங்களுக்கு உதவி வழங்க வருகிறோம் என அறைகூவி தெறிக்க விடலாமா?.

அடுத்த மாதம் புதிய வருடம் ஒன்று புலரவிருக்கிறது. ஒரு புதிய ஆண்டுஒருபுதியவெற்றுபக்கம்அதை கனவுகளாலும் நம்பிக்கைகளாலும் நிறைத்திடுவோம். அரசியல் அடிதடிகள், அனியாயத்துக்கு அரசியல் செய்தல், புலம்பெயர் தேசத்து அமைப்புகளில் பதவியில் அமர்வதற்காகபோட்டுக்கொடுத்தல் என குண்டு சட்டியின் குதிரைகளாக இல்லாமல், உலக வெப்பமயமாதல், சர்வதேச பயங்கரவாதத்தின் உக்கிரம். பொருளாதாரம், வேலைவாய்ப்பு போன்ற பாரிய அச்சுறுத்தல்களை நாம் எங்களை அறியாமலே எதிர்கொண்ட வண்ணம் உள்ளோம். இவ்வாறான சவால்களுக்கு எவ்வகையான பரிகாரம் செய்யலாம் என்பதில் எங்கள் சக்கதியை ஒன்று திரட்டி தெறிக்க விடலாமா?

அதற்கிடையில் வரவிருக்கும் நத்தார் விடுமுறையை பயன்படுத்தி தெறிக்கவிடலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிவிழா - 2015





திருமறைக் கலா மன்றம் கனடா அமைப்பினரின் "ஒளிவிழா 2015" Dec 06,2015. நிகழ்வுகளோடு ekuruvi Dec 05, 2015.







Remax Community Realty Awards Gala Night 2015 இதன் முழுமையான படத்தொகுப்பு இகுருவி இணையத்தில் பார்வையிடலாம்








## ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை உருவாக்கப்படவிருக்கிறது.

ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை உருவாக்கப்படடவிருக்கிறது. இதன் காரணமாக அங்கு தமிழ் நிரந்தரமாகக் கற்பிக்கப்படும். தகுதி வாய்ந்த ஒரு பேராசிரியர் நியமிக்கப்படுவார். அடுத்து அடுத்து வரும் தலைமுறைகள் தமிழைத் தடங்கலின்றிக் கற்க முடியும் பென்சில்வேனியா மாகாணத்தில் இதய மருத்துவத்தில் சிறப்புற்று விளங்கும் மருத்துவரான டாக்டர் ஜானகிராமன், அவரது நண்பரும் மருத்துவருமான டாக்டர் திருஞான சம்பந்தம், ஹவாய் தீவில் வசித்து வரும் மொழிபெயர்ப்பாளர் வைதேகி ஹெர்பர்ட், கனடாவில் வசிக்கும் எழுத்தாளர் அ. முத்துலிங்கம், அமெரிக்காவில் வாழும் புள்ளியியல் துறைவல்லுநரான முனைவர் சங்கரபாண்டி ஆகியோர் இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்பவர்களில் முன்மையானவர்கள்.

வைத்திய கலாநிதிகளான ஜானகிராமனும் திருஞானசம்பந்தமும் ஒரு மில்லியன் டொலர்களை அன்பளித்துள்ளனர்.மீதி ஐந்து மில்லியன் டொலர்களை உலகத் தமிழ்ப் பற்றாளர்களிடம் திரட்டி விடலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் கனடியத் தமிழ்ப் பற்றாளர்களுடன் ஓர் கலந்துரையாடல் நிகழ்வு Dec 06, 2015நடைபெற்றது இதில் பாராள மன்ற உறுப்பினர் திரு ஹரி ஆன்நதசங்கரி, முன்னால் பாராள மன்ற உறுப்பினர் உற்பட பலர் கலந்து சிறபித்தார்கள். நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட இகுருவி .காம்



## வன்னியின் போர்கால நாவல் , வன்னியின் வரலாறும் பண்பாடும் என்ற இரு நூல்களின் வெளியீடு விழா

கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் ஆதரவுடன் முன்னாள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் திரு.கதிர் பாலசுந்தரம் அவர்களின் "வன்னியின் போர்கால நாவல்" என்ற நூலும். நோர்வே சுந்தரலிங்கத்தின் வன்னியின்" வரலாறும் பண்பாடும்" என்ற இரு நூல்களின் வெளியீடு விழா. Nov 20, 2015 அன்று டொராண்டோவில் நடைபெற்றது. இதன் முழுமையான படத்தொகுப்பு இகுருவி இணையத்தில் பார்வையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Century 21 Innovative Realty Inc Brokerage Award 2015

வெற்றியாளர்களுக்கான விருது விழா 2015



Sun flower Furniture Christmas Party. நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட இகுருவி இணையத்தில் பார்வையிடலாம்







HOMELIFE/ GTA REALTY INC HOLIDAY PARTY & AWARD PRESENTATION

நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட இகுருவி இணையத்தில் பார்வையிடலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, திருவள்ளுவர் பிறந்த நாள்

# தமிழர்களின் முப்பெரும் விழாக்கள்!

நக்கீரன்
தலைவர், தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்



**பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ரொறன்ரோவில் பொங்கல் விழா மிக அருமையாகவே கொண்டாடப்பட்டது. இன்று பொங்கல் விழா பரவலாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சில அமைப்புக்கள் தை மாதப் பிறப்புக்கு காத்திராமல் பொங்கல் கொண்டாடி விடுகின்றன.**

ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் தீபாவளிக் கொண்டாட்டத்துக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு பொங்கலுக்குக் கொடுக்கப்படவில்லை. செய்தித்தாள்கள், கிழமை, மாத சஞ்சிகைள் தீபாவளி மலர் வெளியிடுவதை மட்டும் வழக்கமாகக் கொண்டிருந்தன. பொங்கல் மலர் வெளியிடுவதில்லை. ஆனால் திராவிட தேசியத்தின் வளர்ச்சி காரணமாக இன்று பொங்கல் விழா தமிழர்களின் தனிப் பெரும் விழாவாக பரிணமித்துள்ளது.

இன்று உலகளாவிய அளவில் பொங்கல் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்கு முக்கிய காரணம் இன்று தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் மீதுள்ள பற்றும் தமிழின உணர்வும் தமிழ்மக்களிடம் மேலோங்கிக் காணப்படுவதே.

தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் 2002 ஆண்டு தொடக்கம் (2013,2014 நீங்கலாக) பொங்கல் விழாவோடு தை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் — திருவள்ளுவர் பிறந்த நாள் — எனச் சேர்த்து முப்பெரும் விழாவாகக் கொண்டாடி வருகிறது.

தூய தமிழ்ப் பெயர்களுக்கு பொற்கிழி அளித்தல் பொங்கல் கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சமாகும். குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தூய தமிழ்ப் பெயருக்கு 1,000 வெள்ளிகள் முதற்பரிசாக அளிக்கப்படுகிறது. இரண்டாவது பரிசு, ஆறுதல் பரிசு ஆகியவும் அளிக்கப்படுகின்றன. தமிழ்ப் பெயர்கள் தமிழாக இருந்தால் மட்டும் போதாது. அதில் சொற்சுவை, பொருட்சுவை, ஓசைநயம இனிமையும் இருக்கிறதா எனப் பார்த்தே பரிசுக்குரியவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இந்தப் பரிசுத் திட்டத்தின் பயனாக பெற்றோர்களிடம் தங்கள் பிள்ளைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர்கள் வைக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஓரளவாவது பிறந்துள்ளது. தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் பண்பாட்டு கையேடு என்ற சிறு நூலை வெளியிட்டுள்ளது. அதில் ஆண், பெண் குழந்தைகளுக்குரிய தூய தமிழ்ப் பெயர்ப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு கனடாத் தமிழ்க் கல்லூரியில் படித்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் நடத்தும் இளங்கலை (தமிழ்) படிப்பில் பட்டம் பெற்ற 25 பட்டதாரிகளுக்கு சான்றிதழும் பொற்பலகையும் கொடுத்து மதிப்பளிக்கப்பட்டது. அதே வண்ணம் பல்கலைக் கழக நுழைவுக்குத் தமிழில் திறமை சித்தி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. தமிழர்களின் புத்தாண்டு தையா? சித்திரையா? என்ற சொற்போர் தொடர்ந்து நடைபெறுகிறது.

1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மறைமலை அடிகளார் தலைமையில் கூடிய தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் மூன்று முக்கிய முடிவுகளை அப்போது எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டைப் பின்பற்றுவது.

2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.

3. திருவள்ளுவர் காலம் கிமு 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31 அய்க் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு வரும்)

1971 இல் தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையை 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் அரசிதழிலும் 1981 முதல் அரசின் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 1969 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று தமிழ்நாடு அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப்பித்தது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும்.

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்பதால் தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவிக்கும் சட்டத்தை தமிழக அரசு கடந்த 1.2.2008 அன்று சட்டப்பேரவையில் ஒரு மனதாக நிறைவேற்றியது. அது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டிருந்தது.

பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ்நாட்டு மக்கள் இனி தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி வண்ண வண்ணக் கோலங்கள் இட்டு, வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட மழலையர், மாணவர், மங்கையர், மகிழ்ச்சியில் தோய்ந்து, புத்தாடை புனைந்து, தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும் ஆடியும் சமத்துவ உணர்வு பரப்பியும் தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர் என எதிர்பார்த்தனர். ஆனால் மே 2011 இல் ஆட்சிக்கு வந்த செல்வி ஜெயலலிதாமுன்னைய அரசின் சட்டத்தை திருத்தி சித்திரை முதல்நாளை புத்தாண்டு என அறிவித்துவிட்டது.

சித்திரை புத்தாண்டு குறித்து மறைந்த பண்டிதர் க.பொ. இரத்தினம் அவர்கள் கீழ் வருமாறு கூறியிருந்தார்.

"சித்திரை வருடப்பிறப்பு" என்பது சாலிவாகனன் என்ற வடநாட்டு அரசனால் பின்னாளில் நிலைநாட்டப்பட்டது. இந்த அரசனுக்கு முன்னர் பல்லாயிரம் ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டுப் பெருமகன் ஒருவனுடன் இணைந்த தொடர் ஆண்டை நிலை நாட்ட முயலாதது பெரும் விந்தையாக உள்ளதுஞ். ஞ்ஞ்- (சித்திரை வருடப்பிறப்பை) வரவேற்று, (அதன் மூலம் ) தமிழினத்தின் பழமையையும், பண்பையும், சிறப்பையும், செல்வாக்கையும் (இன்றைய தமிழர்கள்) சிதைத்து வந்துள்ளமை பெரும் வெட்கத்திற்கு இடமானதாகவும் இருக்கின்றது. தமிழ் மக்களிடையே நிகழ்ந்த மானக்கேடான, நகைப்புக்கிடமான செயல் இது ஒன்று மட்டும்தானா? ஞீ தமிழ் மக்களின் கோவில்களிலே இன்று தமிழ் மொழியும், தமிழ் இசையும் ஒதுக்கப்பட்டுள்ளன."

சித்திரை முதல் நாளைப் புத்தாண்டாக தொடர்ந்து கொண்டாடி வரலாம். ஆனால் அது தமிழ்ப் புத்தாண்டு ஆக கொண்டாடக் கூடாது. இந்துப் புத்தாண்டு (Hindu New Year) என அதனைக் கொண்டாடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படித்தான் அது கொண்டாடப்படுகிறது.

சித்திரை முதல் நாள் (April 14) வேனில் காலத்தின் தொடக்க நாள் அதுவே புத்தாண்டின் தொடக்க நாள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் வேனில் காலம் புவியின் அச்சு பின்னோக்கி நகர்வதால் (Precession of Equinoxes) மார்ச்சு 20 அல்லது 21 இல் தொடங்கி விடுகிறது. இது பஞ்சாங்கம் கணிப்போருக்குத் தெரிவதில்லை. அல்லது தெரிந்தும் கணக்கில் எடுப்பதில்லை. பருவ காலங்கள் புவிக்கும் ஞாயிறுக்கும் இடையில் உள்ள தொடர்பை வைத்தே நிருணயிக்கப்படுகிறது. பருவ காலங்களுக்கும் கோள்கள் அல்லது நட்சத்திரங்களுக்கும் தொடர்பு இல்லை.

சித்திரை முதல்நாள் ஞாயிறு மீன இராசியில் இருந்து விலகி மேட இராசி, அசுவனி நட்சத்திரத்துக்குள் நுழைகிறது. எனவே வானியல் அடிப்படையில் அதுவே புத்தாண்டு பிறக்கும் நாள் என்று சொல்லப்படுவது சரியே.

சித்திரைப் புத்தாண்டுக்கு வானியல் அடிப்படை இருப்பது போலவே தைப் புத்தாண்டுக்கும் வானியல் அடிப்படை இருக்கிறது. தை முதல்நாள் ஞாயிறு தனது தென்திசைப் பயணத்தை (தட்சணாயம்) முடித்துக்கொண்டு வடதிசைப் பயணத்தை (உத்தராயாணம்) மேற்கொள்கிறது. அதாவது ஞாயிறு தனு இராசியை விட்டு விலகி மகர இராசியில் நுழைகிறது. எனவே தை முதல் நாளுக்கும் வானியல் அடிப்படை உண்டு என்பது தெளிவாகும்.

பொங்கல் தமிழர்க்கே உரித்தான தனித்துவமான விழாவாகும். தமிழ் மக்கள் சித்திரைப் புத்தாண்டு, தீபாவளி போன்ற பண்டிகைகளைக் கொண்டாடினாலும் பொங்கல் விழாவே சமயம் சாராத பகுத்தறிவுக்கு ஒத்த இனிய விழாவாக விளங்குகிறது. கழனி திருத்தி, எருவிட்டு, வரம்பு கட்டி, உழுது, விதைவிதைத்து நெல்மணிக் கதிர்களை அறுவடைசெய்ய உதவியாக இருந்த ஞாயிறுக்கு நன்றி தெரிவிக்கும் நாளாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். அந்த விழாவும் உழவர்களுக்கு எல்லாவிதத்திலும் உறுதுணையாக இருக்கும் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் கொண்டாடப்படும். மாடு என்ற சொல்லுக்கு செல்வம் என்ற பொருளும் உண்டு.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வேறுபட்ட சூழலில் வாழ்ந்தாலும் அவர்களது வண்ணமயமான பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்தும் பொங்கல் போன்ற இனிய விழாக்களைத் தவறாது கொண்டாட வேண்டும். அதன் மூலம் தமிழ் மொழி, கலை, பண்பாடு மற்றும் பாரம்பரியங்களை தமிழர்கள் பேணிக் காப்பாற்ற முடியும். இப்படியான விழாக்களை தமிழர்கள் கொண்டாட மறந்தால், அவற்றை அவர்கள் கைவிட்டால் எங்கள் மொழி, கலை, பண்பாடு காலப் போக்கில் அழிந்து போகும் ஆபத்து இருக்கிறது. முன்னைய காலத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கள் மொழி, கலை, பண்பாட்டை இழந்து தமிழர் என்ற அடையாளத்தையே தொலைத்து இருக்கிறார்கள். அது எங்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

உலகின் தொன்மையான ஆறு செம்மொழிகளில் தமிழும் ஒன்று. ஏனையவை இலத்தீன், சீனம், கிரேக்கம், ஹீப்புரூ மற்றும் சமற்கிருதம் ஆகும். தமிழின் சிறப்பினை, அதன் இலக்கிய வளத்தை, உலக அறிஞர்கள் போற்றிப் பேசுகின்றனர். ஆனால் தமிழர்களுக்குத் தமிழ்மொழியின் அருமை பெருமை, சீர் சிறப்புத் தெரியாது இருக்கிறது.

தமிழுக்குத் தொடர்பே இல்லாத உருசிய நாடு தமிழைக் கொண்டாடுகிறது. அங்கிருக்கும் அதிபர் மாளிகையான கிரெம்ளின் மாளிகையின் பெயரை அவர்கள் அழகு தமிழில் எழுதியுள்ளார்கள். முதலாவதாக அவர்கள் தாய்மொழியான உருசியத்திலும் இரண்டாவதாக அண்டைநாட்டு மொழியான சீனத்திலும் மூன்றாவதாக உலகத் தொடர்புமொழி என்ற நோக்கில் ஆங்கிலத்திலும் நான்காவதாக தமிழிலும் எழுதியிருக்கிறார்கள்.

தமிழைவிட எத்தனையோ உலகமொழிகள் பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்றன. ஆனால் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு தமிழ்மொழியில் அதிபர் மாளிகையின் பெயரை எழுதியதற்கு உருசியர்கள் கூறும் காரணத்தை தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

“உலகில் ஆறு மொழிகள்தான் மிகவும் தொன்மையானவை. அவை கிரேக்கம், லத்தீன், எபிரேயம், சீனம், தமிழ், சமற்கிருதம். இந்த ஆறு மொழிகளில் இரண்டு மொழிகள் இன்று வழக்கில் இல்லை. உலகில் உள்ள முக்கிய மொழிகளான 642 மொழிகளிலும் சரியான, தகுதியான மொழியாக “தமிழ் மொழி” தென்பட்டது. அந்த மொழியைச் சிறப்பிக்கவே “கிரெம்ளின் மாளிகை” என தமிழில் எழுதினோம்“ என்று உருசியர்கள் கூறுகிறார்கள்.

வெளிநாட்டினருக்குத் தமிழின் அருமை பெருமை தெரிந்திருக்கிறது. தமிழர்களுக்குத்தான் தெரியவில்லை. தமிழில் எழுதுங்கள், தமிழில் பேசுங்கள், தமிழில் வழிபாடு செய்யுங்கள், பிள்ளைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர் வையுங்கள் என்பதற்கு ஒரு போரட்டமே நடத்த வேண்டியுள்ளது!

தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ்க் கலை பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது. தமிழ் எங்கள் உயிர்! தமிழ்க் கலை எங்கள் மூச்சு! தமிழ்ப் பண்பாடு எங்கள் வாழ்வு! திருக்குறள் எங்கள் வழிகாட்டி! என்பன அதன் முழக்கமாகும்.

இந்தக் குறிக்கோள்களை அடைய வேண்டும் என்றால் தமிழ்மொழி எமது வீட்டு மொழியாக இருக்க வேண்டும். வீட்டில் தமிழைத் தவிர வேறுமொழியில் பேசுவதில்லை என நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவின் புகழ்பெற்ற நேரு குடும்பம் வீட்டில் இந்தியில் மட்டும் உரையாடியது. பிறகும்



குழந்தைகளுக்கு பைந்தமிழில் பெயரிட வேண்டும். திருமணங்கள் திருக்குறள் ஓதி செந்தமிழில் நடைபெற வேண்டும். திருக்கோயில் வழிபாடு வண்டமிழில் இருக்க வேண்டும்.

உங்கள் உறவுகளை தமிழில் அழையுங்கள். அப்பா, அம்மா என்ற அழகு தமிழ் இருக்க டடி, மமி எங்களுக்குத் தேவையில்லை. அங்கிள், ஆன்ரி வேண்டாம். மாமா, மாமி என வண்ணத் தமிழில் கூப்பிடுங்கள். திருநாவுக்கரசர் இறைவனை ‘அப்பன்நீ, அம்மைநீ, அய்யனும்நீ, அன்புடைய மாமனும் மாமியும்நீ’ என்று பாடியிருப்பதை கவனியுங்கள்.

தமிழ்மக்கள் தங்கள் திருக்கோயில் வழிப்பாட்டைச் சொற்றமிழில் செய்ய வேண்டும். கடவுளுக்கு மொழிச் சிக்கல் இல்லை. அவருக்கு எல்லா மொழியும் தெரியும். முக்கியமாகத் தமிழ்மொழி தெரியும். சிவனார் ‘அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் நம்மை மண்மேல் சொற்றமிழ் பாடுக’ என்று சுந்தரரைப் பணித்ததாக சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடியிருக்கிறார். சுந்தரர் ‘இறைவன் தமிழை ஒத்தவன்’ என்றும் நாவுக்கரசர் ‘பண்ணின் இன்மொழி கேட்கும் பரமன்’ என்றும் ‘தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்’ என்றும் சேக்கிழார் ‘ஞாலமளந்த மேன்மை தெய்வத் தமிழ்’ என்றும் இறைவனை தமிழாகவே போற்றியிருக்கிறார்கள்.

வள்ளலார் ‘எந்தையுனைப் பாடி மகிழ்ந்து இன்புறவே வைத்தருளிச் செந்தமிழை வளர்க்கின்றாய்!’ என்றுபாடி “அருச்சனை பாட்டேயாகும்” என்ற சேக்கிழார் முழக்கத்தை மேலும் கூர்மைப்படுத்தி இருக்கிறார்.

தமிழ்மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முத்தமிழில் அழகும் இனிமையும் சொற்சுவையும் பொருட்சுவையும் ஓசைநயமும் நிறைந்த தனித் தமிழ்ப் பெயர்களை சூட்ட வேண்டும். இப்படிச் செய்வது தமிழ்மக்கள் அன்னைத் தமிழுக்குச் செய்யக்கூடிய குறைந்தளவு தொண்டாகும். தமிழ்க் குழந்தைகளின் பெயர் பெரும்பாலும் வடமொழியாய் இருப்பதற்கு சோதிடம், சாதகம், நாள், நட்சத்திரம், எண் கணியம் போன்ற மூடநம்பிக்கைகளை நம்புவது காரணமாகும்.

தமிழனைத் தமிழன் என அடையாளங்காட்ட முடியாத பெயர்களை குழந்தைகளுக்குச் சூட்டுவது தமிழுக்கு பெற்றோர்கள் தெரிந்தே செய்யும் மிகப்பிரிய இரண்டகமாகும். அழகானதென [illegible] சூடிக்கொள்ளும் [illegible]ப் பெயர்களின் இழிபொருள் பெற்றோர்களுக்குத் தெரிவதில்லை. அஸ்வின், அஸ்வினி, ஆசா, கோசா, யூரேனியா, நிரோஜன், நிரோஜினி, நிஷாந்தன், கஜீஜன், லவீசன், அபிஷா, ஷர்மிளா, ஷர்மினி, ஷாமியா, ஷாமியன், ஷாலினி, டில்ஷன், டில்ஷி எனப் பொருள் இல்லாத அல்லது முறைகேடான பெயர்களை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வைக்கிறார்கள். நிரோஜன் என்றால் ரோசமற்றவன் எனப் பொருள். நிரோஜினி என்றால் ரோசமற்றவள் என்று பொருள். அஸ்வினி என்றால் குதிரை என்று பொருள். மேலும் அபர்ணா, தூஷிகா (தூசிகா), வாசுகி, மகிஷன் (மகிசன்), சுந்தரலிங்கம் ஆகிய வடமொழிப்பெயர்கள் முறையே ஆடையற்றவள், பீளை (கண்மலம்), வந்துருகர், எருமை, அழகிய ஆண்குறி என்னும் பொருள்படுவதாகும்.

பெற்றோர்களுக்குத் தமிழ் எது வடமொழி எது என்ற குழப்பம் இருக்கிறது. இதனைத் தீர்ப்பதற்கு ஒரு இலகுவான வழி இருக்கிறது. பெயர்களில் ஜ,ஸ,ஷ,ஹ, ஸ்ரீ போன்ற கிரந்த எழுத்துக்கள் இருந்தால் அவை வடமொழிப் பெயர்களாகவே இருக்கும். மேலும் தமிழில் சொற்களுக்கு முன்வராத ட, ர, ல, ங, ண, ழ, ள, ற, ன எழுத்தில் தொடங்கும் பெயர்கள் தமிழ்ச் சொற்களாக இருக்க முடியாது.

தமிழ்மொழி வெறும் மொழி மட்டுமல்ல. அஃது ஓர் பழம் பெரும் இனத்தின் பல்லாயிரம் ஆண்டுப் பட்டறிவுப் பெட்டகம். கருவூலம். மூவாத் தமிழில் அழகும் இனிமையும் பொருளும் நிறைந்த பெயர்கள் ஏராளமாகவும் தாராளமாகவும் இருக்கின்றன. அரசி, அருளரசி, அன்பரசி, தமிழரசி, கலையரசி, கலைமகள், திருமகள், நிலமகள், நாமகள், பூமகள், வள்ளி, கோதை, நிலா, அரசன், மாறன், அழகன், முருகன், கண்ணன் எனச் சின்னக் குழந்தைகளுக்கு நல்ல நல்ல வண்ணப் பெயர்கள் இருக்கின்றன.

எங்கள் மொழியையும் பண்பாட்டையும் கட்டிக் காத்து அடுத்ததலைமுறைக்குக்கையளிக்கும் பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உண்டு. தமிழில் என்ன இருக்கிறது? தமிழ் சோறு போடுமா? என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். சோற்றுத் தமிழர்கள் சோற்று மொழியைத் தேடிக்கொள்ளட்டும். சோறு போடும் மொழியை மட்டும் கற்றவன் நன்றாகச் சோறு உண்ணலாம். ஆனால் அவன் யார்? அவன் அடையாளம் என்ன? அவன் பண்பாடு எது? மரபு யாது?

பிறக்கப் போகும் இந்தத் தைப் புத்தாண்டில் எமது தாயக உறவுகளின் இன்னல்கள், துன்பங்கள் துயரங்கள், அல்லல்கள், அவலங்கள், அனர்த்தங்கள் தொலைந்து அவர்களது வாழ்வில் இன்பம் பொங்கும் என்று எதிர்பார்க்கிறோம். அவர்களைப் பீடித்த பீடுகள் அனைத்தும் மறைந்தொழியும் என நம்புகிறோம்.


இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எமது தாயகக் கனவு கைகூடும். அப்போது அங்கு வாழும் எம் உறவுகள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பார்கள். அந்த நம்பிக்கையோடு திருவள்ளுவராண்டு 2047 இல் காலடி எடுத்து வைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய சிறப்புக் கற்கைநெறி

## IB Programme பற்றிய ஓர் அறிமுகம். (2)

பேராசிரியர் இ. பாலசுந்தரம்



"மாணவர் சுறுசுறுப்பாகவும் மற்றவர்மீது இரக்கவுணர்வு உள்ளவர்களாகவும், வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பவர்களாகவும் மற்றவர்களின் வேறுபாடுகளை நன்கறிந்து, அவற்றுக்கேற்ப நடந்து கொள்பவர்களாவும் அவர்களை உருவாக்குவதே" இக்கல்வித் திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும். தொடக்கத்தில் தனியார் பாடசாலைகளுடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் உலகின் பல நாடுகளிலுள்ள அரசுப் பாடசாலைகளுடன் இணைந்து இந்நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. தற்போது 147 நாடுகளின் 3918 பாடசாலைகளில் பயிலும் 1,230,000 மாணவர்; ஐ.பி. கல்வித்திட்டத்தில் பயல்கின்றனர் என்பது வியப்பைத் தருகின்றது. இந்நிறுவனத்துடன் இணைந்த அனைத்து நாடுகளும் பிராந்திய அடிப்படையில் மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளன. அவை (1) ஐரோப்பிய — ஆபிரிக்க நாடுகள், (2) அமெரிக்கக் கண்ட நாடுகள், (3) ஆசிய நாடுகள் என்ற அடிப்படையில் நிர்வாகக் கட்டமைப்புடன் இயங்குகின்றன.

இச் சிறப்புக் கல்வித்திட்டத்தில் பின்வரும் நான்கு பயில்நெறிகள் வழங்கப்படுகின்றன:

1. பாலர்வயதுடையோருக்கான திட்டம் (Primary Year's Programme) (3-12 வயதுடையோருக்குரியது. 1994 இல் தொடங்கப்பட்டது)
2. நடுத்தர வயதினருக்கான திட்டம் (Middle Year's Programme) (11-16 வயதுடையோருக்குரியது. 1994 இல் தொடங்கப்பட்டது)
3. டிப்ளோமா திட்டம் (Diploma Programme) (16-19 வயதுடையோருக்குரியது. 1968இல் தொடங்கப்பட்டது)
4. தொழில் சார்ந்தசான்றிதழ். (Certitificate) (16-19 வயதுடையோருக்குரியது. 2012இல் தொடங்கப்பட்டது)

இச் சிறப்புக் கல்வித் திட்டத்தின் நன்மைகளையும் விதிமுறைகளையும் பெற்றோரும் மாணவரும் விளங்கிக்கொள்வது மிகஅவசியமானது. தம் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலையில் தத்தம் வகுப்புப் பாடங்;களில் அதிஉயர் திறன்களும், உயர்மதிப்புப் புள்ளிகளும் பெறும் மாணவர் ஆசிரியரின் வழிகாட்டலில் இக்கல்வி நெறியைப் பயில்வதற்கு விண்ணப்பிக்க வழிகாட்டப்படுவர். கனடாவில் பயிலும் மாணவரும் பெற்றோரும் Gifted Program பற்றி அறிந்திருப்பார்கள். அக்கல்விநெறியைவிடச் சற்றுக் கூடுதலான பாடநெறிகளைக் கொண்டது IB Program என்பதையும், மிகக் கூடுதலான கற்றல் பழுவவைக் கொடுப்பது என்பதையும் மாணவர் கருத்திற்கொள்ள வேண்டும். 9ஆம் தரத்தில் பிரஞ்சுமொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மதிப்புயர்ந்த தரத்தில் IB Program தொடங்குகிறது. 11ஆம் தரத்தில் இரண்டு தேர்வுகள் எழுத வேண்டியிருக்கும். 12 ஆம் தரத்தில் நான்கு விசேட தேர்வுகள் எழுத வேண்டும். இப்பாடநெறியிலும் High Level Courses, Standard Level Courses என இரு தரங்களுமுள்ளன.

அனைத்து நாட்டுப் பாடசாலைகளிலும் ஒரே பாடநெறிகளே கற்பிக்கப்படுகின்றன என்பதும், அனைத்து மாணவர்களும் ஒரே தேர்வுகளையே செய்கின்றனர் என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கவை. இக்கல்விநெறியைத் தேர்ந்தெடுத்து பயின்ற மாணவர் சிலர் அதனைத் தொடர முடியாது மீண்டும் வழமையான கல்வித் திட்டத்தில் (Regular Program) சேர்ந்து படிப்பைத் தொடர்கின்றனர் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். எனவே திறமையும் துணிவும் ஆர்வமும் உள்ள மாணவர் உறுதியான நம்பிக்கையுடன் இப்பாட நெறியைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதால் பல்வேறு நன்மைகள் பெற வாய்ப்புண்டு.

கனேடிய கல்விமுறையில் மாணவர்களின் திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளும் வகையிலான பல்வேறு சிறப்புக் கல்வித் திட்டங்கள் பாலர்பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை செயற்படுத்தப்பட்டுள்ளன. ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள கல்விச்சபைகளின் அங்கீகாரத்துடன் தொடர்கல்வி கற்கைநெறிகளுடன் சிறப்புக் கற்கைநெறிகளும் பல உயர்பாடசாலைகளில் வழங்கப் படுகின்றன. அவற்றுள் Gifted Program, Integrated Technology, I B Program, Top Program முதலான பதினைந்து விசேட கற்கைநெறிகள் போதிக்கப்படுகின்றன. வகுப்பில் அதிஉயர் திறமையுள்ள மாணவர்களுக்கு இச்சிறப்புக் கற்கைநெறியைப் பயிலும் வாய்ப்புக் கிடைக்கிறது. வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி பெற்றோரின் ஒப்புதலுடன் அம்மாணவர்கள் பாடசாலை Support Team ஆல் மதிப்பீடு செய்யப்பட்டு, சிறப்புக் கல்வி கற்பிக்கப்படும் பாடசாலைக்கு அனுப்பப்படுவர். மூன்றாம் தரத்திலிருந்து இச்சிறப்புக் கற்கைநெறியைத் தொடர்ச்சியாகக் கற்கும் வாய்ப்பு தகுதி வாய்ந்த மாணவர்களுக்குக் கிடைக்கின்றது. அண்மைக் காலமாகவே IB Program ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள பாடசாலைகளிற் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

இச்சிறப்புக் கற்கைநெறி, ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச் சபையினால் இலவசமாகவே கற்பிக்கப்படுகிறது. சில பாடசாலைச் சபைகள் 11ஆம் 12ஆம தரங்களுக்கு ஆண்டுக்க 1500 டொலர் கட்டணம் அறவிடுகின்றன. இச்சிறப்புக் கற்கைநெறியைத் தேர்ந்தெடுக்க விரும்பும் மாணவர்கள் தாம் கற்கவேண்டிய கல்விக்கான முழுப் பொறுப்பினையும் தாமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். முக்கியமாக, ஆங்கிலத்திலும் பிரஞ்சுமொழியிலும் நன்கு ஆளுமைத் திறன் பெற்றிருத்தல் அவசியமாகிறது. அனைத்துப் பாடங்களிலும் சராசரி 80 வீதத்திற்கு மேலான புள்ளிகளைப் பெறும் ஆற்றல் உடையவராக இருக்கவேண்டும். டிப்ளோமா பெற்றவர்கள் தமது பல்கலைக்கழகப் படிப்பை பிற நாடுகளில் மேற்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். படிப்பில் மட்டுமன்றி விளையாட்டு, கலைகள், சமூக சேவை என்பவற்றிலும் மிக்க ஈடுபாடு உடையோராகவும் இருத்தல் அவசியமானது. ஆக்கத்திறனை அடிப்படையாகக் கொண்ட 150 மணித்தியாலங்கள் சமூகசேவையிலும், தலைமைத்துவம், சமூகப் பொறுப்புணர்ச்சி என்பற்றையும் செயலிற் காட்டுவதோடு, தமது கல்வியை உலக நோக்குடையதாக அமைத்துக் கொள்ளுதலும் அவசியமாகிறது. இத்தகைய ஆற்றல்களும் திறன்களும் கொண்ட மாணவர் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடையவராவர்.

இ[illegible] கல்விநெறியில் பெற்றோருக்கும் பங்களிப்புண்டு. இக்கல்வி முறையானது பாடசாலையில் மட்டுமன்றி பாடசாலைக்கு வெளியேயும் இடம்பெறுவதாகும். தம் பிள்ளை பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியே சமூகத்திலும் மற்றும் பொதுநிறுவனங்களிலும் இக்கற்கை நெறியை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் தம் பிள்ளைக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டியுள்ளது. வீட்டிலே தாயும் தந்தையும் வேலைப்பழு என்ற பெருஞ் சுமையையும் கும்பப் பொறுப்பையும் தாங்கிக் கொண்டிருந்தால் பிள்ளையின் படிப்புக்கு நேரம் ஒதுக்குவதில் பெரிதும் கஷ்டப்பட வேண்டியநிலை ஏற்படலாம். பிள்ளையின் கற்றலுக்கும், அறிவு விருத்திக்கும் முன்னுரிமை அளித்து அதற்கேற்பத் தமது நாளாந்த நேர அட்டவணையை பெற்றோர் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இக்கற்கைநெறிக்குரிய அனைத்துத் தேர்வுகளும் வெளிநிலைத் தேர்வுகளாகவே நடத்தப்படும். இத்தேர்வுகளை உலகளாவிய நிலையில் நடத்தி, மதிப்பிடும் நிலையம் இங்கிலாந்திலுள்ள கார்டிவ் (Cardiff) நகரில் அமைந்துள்ளது. வினாத்தாள்கள் தயாரிப்பு, மதிப்பீடு என்பன அங்கேயே நடைபெறுகின்றன. இத்தேர்வுகளுக்குரிய சான்றிதழ்கள், தேர்வின் இறுதியில் பெறப்படும் டிப்ளோமா அனைத்தும் ஜெனிவாவில் உள்ள தலைமை அலுவகத்தினாலேயே வழங்கப்படுகின்றன. இக்கற்கை நெறியானது மிக உயர்வான கல்வித் தரத்தையும், சமூக சேவைகளையும், மிகத் தரமானமுறையில் கட்டுரை எழுதுதல், அனைத்துலக அடிப்படையிலான பாடத்திட்டம் என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாமூர்த்தி எழுதும்

# 'இகுருவி ஐயாவும் நானும்'

'கரி ஆனந்தசங்கரி பகவத்கீதையில கைவைச்சு சத்தியப்பிரமாணம் செய்ததைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டு வந்தார் இகுருவி ஐயா.

'ஏன் ஐயா கேக்கிறியள்...? கிருஸ்ண பரமாத்மா கோவிச்சிட்டாரே...?" என்றேன் கிண்டலாக.

'அட போடா... கடவுள் ஒருத்தரையும் கோவிக்க மாட்டார். கோவிச்சது எங்கட ஆக்கள்... பகவத்கீதைக்குப் பதிலா திருக்குறளில கைவைச்சுத்தான் சத்தியப்பிரமாணம் செய்திருக்கவேணுமாம்.. அல்லது தொல்காப்பியத்திலயாவது கைவைச்சுச் செய்திருக்கவேணுமாம்.. அப்பதான் சத்தியப்பிரமாணம் தமிழ் மக்களுக்குப் பொருத்தமா இருக்கும் எண்டு சிலர் கவலைப்படுகினம்.."

'அதுக்குள்ள கவலைப்படத் துவங்கீட்டாங்களே..?" என்று சொல்லிச் சிரித்தேன். 'யார் ஐயா அவை? சத்தியப்பிரமாணம் எண்டுறதே ஒரு சம்பிரதாய நிகழ்ச்சி எண்டது தெரியாத அந்தச் சிங்கனுகள்...?" என்றேன் அசிரத்தையாக.

'கரிக்குசும்மா எண்டாலும் அலுப்புக் குடுக்குறதுக்குத்தான் இப்பிடிக் கதையளை ஆக்கள் துவக்கிவிடுகினம் போல கிடக்கு.." என்றார் இகுருவி ஐயா.

'சரியாச் சொன்னியள் ஐயா.. பாருங்கோ.. எதிர்காலத்தில தமிழ்

'கரி ஒரு புது எம்பிதான்... ஆனா பழுத்த அரசியல்வாதிக்கான கெட்டிக்காறத்தனம் அவரிட்டை நிறைய இருக்கு. உலகத் தமிழ் மக்களின் ஒரு நம்மிக்கை நட்சத்திரம் " என்றார் இகுருவி ஐயா.

'ஓம்.. ஓம்... கரியையும் நாங்க புத்திபூர்வமா ஸப்போர்ட் பண்ண வேணும். அப்பதான ;அவரும் ஒரு தமிழ் எம்பியா இன்னும் உயரங்களைத் தொடலாம்.. அதால தமிழ் சமூகமும் பலனடையலாம். அதால லூசுத்தனமான ஆக்களுக்கெல்லாம் கரி அட்ரென்சன் தாறதை விட்டுட்டு ஒரு எம்பியா தன்ரை அரச காரியங்களில கவனம் செலுத்துவார் எண்டே நம்புறன். அதாவது திருக்குறள், தொல்காப்பியம் எண்டெல்லாம் தமிழ் ஆக்களை பிளீஸ் பண்ணிறதை விட்டுட்டு, அரச மட்டத்தில தன்னை கரி முதலில வலுப்படுத்தவேணும்... இண்டைய காலகட்டத்தில என்னைக் கேட்டியளெண்டா புருசனை நம்பி அரசனைக் கைவிட்டுடக் கூடாது எண்டுதான் கரிக்கு நான் சொல்லுவன்.."

'டேய்.. உப்பிடி பழமொழியளை மாத்திச் சொன்னியெண்டா அதைக் கேட்டுட்டு எங்கட தமிழ்ப் பண்பாட்டை ஈகுருவிக்காறர் கேலி

கொண்டால— வருத்தம் என்கின்ற உணர்ச்சி குறைந்து — வாழ்வில் மனம் விசாலமுறும்." என்றேன். இவனென்ன பிரசங்கம் செய்கிறான் என்பதுபோல இகுருவி ஐயா என்னைக் கேவலமாகப் பார்த்தார். பிறகு கதையை மாற்றுவதுபோல 'அதைவிடுடாப்பா.. ஸ்காபரோவில ஒரு தமிழ் ஸ்ரூடியோ போட்டோக்கிராபர் தன்னட்டைப ;படம் எடுக்க வந்த சின்னப் பெண்ணோட சேட்டை விட்டு பொலிஸில மாட்டீட்டாரடாப்பா.. தெரியுமே..??" என்றார் இகுருவி ஐயா.

'தெரியும்.. தெரியும்., அந்த பிள்ளை தனக்கு நடந்ததை ஓப்பினா தன்ரை பேஸ்புக்கில எழுதியிருக்குது.. வயதில் குறைந்திருந்தாலும் அந்தப் பிள்ளையின் தன்னம்பிக்கையும், தைரியமும் பாராட்டப்பட வேண்டியதுதான்... அதுவும் தனக்கு அப்படி நடந்தது எண்டதை பொலிசுக்கும் சொல்லி, மற்றவைக்கும் சொல்லி ஒரு எல்லாரையும் பதற வைச்சிட்டாள்



புருசனை நம்பி அரசனைக் கைவிடாதே!

தீர்மானிக்கப்பட வேணும்.. சரியும் பிழையும் ரலலேடிவ் ரேர்ம்ஸ்..." என்றேன் நான். இகுருவி ஐயா என்னையே பார்த்தபடி எதுவும் பேசாமல் நின்றார்.

'சரி பிழை எண்டேக்கை மாவீரர் தின விளம்பரம் ஒண்டு ஞாபகம் வருகுது... அதைப் பாத்தனியே? அதெல்லாம் சரியே.." என்று என்னைக் கேட்டார் இகுருவி ஐயா.

'எதைக் கேக்கிறியள்? மாவீரர் நாளுக்காக அன்லிமிடட் இன்ரநெற் சேவிஸ் ஒண்டு விசேட விலைச் சலுகை தருகிறதா வெளிவந்த விளம்பரத்தை சொல்லுறியளே? என்று கேட்டேன். ஆம் என்றார் இகுருவி ஐயா.

'அந்த விளம்பரத்தில என்ன தவறு ஐயா? அந்த விளம்பரம் மாவீரர்களை அவமதிச்சிட்டுது எண்டு பேஸ்புக்கில கனபேர் எழுதிக்கொண்டு இருக்கினம்.. அதில என்ன மாவீரருக்கு என்ன அவமானம் இருக்கு எண்டுதான் எனக்கு விளங்கேல்ல..." என்றேன் நான் வேண்டுமென்றே.

'விசர்க்கதை கதையாதை.. வியாபார ஸ்தலம் ஒண்டு மாவீரர் தியாகங்களை வைச்சு தன்ரை வியாபாரத்தை பெருக்கப் பாக்குது.. மாவீரர் தியாகங்கள் தனியாரிடம் மூலதனமாக்கப் படுகின்றன.. அது பிழையடாப்பா.." என்றார் இகுருவி ஐயா.

'கொஞ்சம் பொறுங்கோ ஐயா. அப்படிப் பார்த்தால் கன பிஸ்னஸ்கள் அந்த லிஸ்டிலை வரும்.. யோசிச்சுப் பாருங்கோ ஐயா. மாவீரர் தினத்தை செய்யுறதுக்காக வியாபார ஸ்தலங்களும் காசு குடுக்கிறவை — அப்பிடி வியாபார ஸ்தலங்கள் குடுத்த காசிலைதான் மாவீரர் தினச் செலவுகள் செய்யப்படுகின்றன.. இப்ப யோசிச்சுப் பாருங்கோ... தாங்கள் குடுத்த காசை அந்த வியாபார ஸ்தலங்கள் எப்படியாவது வேறு வழியால திருப்பி எடுக்கும்தானே.. அதுவும் வியாபாரம்தானே.. தாங்கள் விற்கிற பொருட்களில அல்லது சேவைகளில இருந்துதானே அந்தக் காசை அவை திருப்பி எடுக்கிறவை என..?" என்றேன். இகுருவி ஐயா என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

'இப்ப பாருங்கோ...லண்டனில மாவீரர் தினத்துக்காகச் சேர்த்த காசை காசுசேர்;த்த அமைப்பு எப்பிடி செலவு செய்தது எண்ட கேள்வி பிரச்சினையானது உங்களுக்கும் தெரியும்.. அதைப் பலரும் பேஸ்புக்கில விவாதிக்கவும்

மக்களுக்குச்செய்யிறதுக்கெண்டு கன வேலையள் கரி ஆனந்தசங்கரிக்காகக் காத்துக்கொண்டு இருக்கு... அதை அவர் செய்ய வேணும். அதுக்கு இப்ப இருந்தே அவரோட தமிழ் மக்கள் ஒண்டா நிண்டுவேர்க் பண்ணுறதுக்கு முயற்சிக்கவேணும்.. அதைவிட்டுட்டு..." என்ற நான ;'எப்பவும் சின்னத்தனமான இஸ்யூக்களை ஆராவது தூக்கிப்பிடிச்சு காழ்ப்போட விமர்சிச்சா அவையைத் துப்பரவாக் கவனிக்காம விட்டுவிடவேணும்... அந்த மாதிரி ஆக்கள் சும்மா தவளைமாதிரி கத்திப்போட்டு பேசாமக் கிடப்பினம்.." என முடித்தேன்.

செய்யிறம் எண்டும் ஆராவது தங்கட பேஸ்புக்கில எழுதிவிட்டுவிடுவினம்.. கவனம்.." என்று மிரட்டுவதுபோல பகிடி விட்டார் இகுருவி ஐயா.

'ஹாஹாஹா... அரசியை நம்பி பெண்டாட்டியை கைவிடக்கூடாது எண்டு மாத்திச் சொன்னா மட்டும் ஒருவேளை ஏற்றுக் கொள்ளுவினமாக்கும்.." என அவரை கலாய்த்த நான் 'இகுருவில வாற ஏதாவது ஒரு கட்டுரையைக் கண்டு யாராவது வருத்தப்படுகிறீர்களா? ரொம்ப நல்லது.. அதற்காகவும்தான் அந்த கட்டுரை எழுதப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அந்த வருத்தத்தின் ஊடே வாழ்வின் போக்கைப் [illegible] புரிந்து

அந்தப் பிள்ளை.." என்றேன்.

'ம்..." என்று இழுத்த நான், 'நூற்றுக்கு நூறு எண்ட தலைப்பில வந்த ஒரு பழைய தமிழ்படத்தை பாத்தனிங்களே..?" என்று கேட்டேன். இல்லை என்பதுபோல தலை அசைத்தார் இகுருவி ஐயா.

'நாங்கள் கைது செய்யப்பட்டவரின்ரை வாக்குமூலத்தையும் கவனத்தில எடுக்க வேணும் ஐயா.. எப்பவுமே ஒருத்தர்மேல புகார் வந்தவுடனை குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி எண்டு நாங்க தீர்மானிக்கக்கூடாது.. நீதிமன்ற விசாரணை முடிஞ்ச பிறகுதான் ஆர் குற்றவாளி எண்டது எங்களால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யினம். யாரோ ஒருத்தர் வீடியோவிலயும் கோபமா பேசியிருந்தவர்... குடுக்கிற காசை ஆர் எப்படிச்செலவுசெய்யினம்எண்டது ஆருக்கும் தெரியாது எண்டது ஒரு குற்றச்சாட்டு. அதோட ஒப்பிட்டுப் பாக்கேக்கை இந்த விளம்பரம் வித்தியாசமானதெல்லே..? அதாவது இந்த வியாபார நிலையம் அமைப்புக்களின்ரை கையில காசைக் குடுக்காம விலைக்குறைப்பை செய்து இலாபத்தை மக்களோடை பங்கிடுகிற மாதிரியெல்லே எனக்கு இது தெரியுது.."

'டேய்.. டேய்..இப்ப என்ன சொல்லவாறாய்?"

'ஐயா... ஒரு வியாபார நிறுவனம் தன்னுடைய வாடிக்கையாளருக்காக ஒரு சலுகையை தான் நம்புற புனித மாவீரர் நாள் கொண்டாட்டக் காலத்தில அறிவிச்சா அதில என்ன பிழை? மக்களுக்கு தன்னால முடிஞ்ச ஒரு சலுகை செய்திருக்குது அந்த வியாபாரம்... இந்த மாவீரர் வார சலுகையால நல்ல பலன் கிட்டினா அதில ஒரு பங்கை அமைப்புக்கு அந்த நிறுவனம் கொடுத்தாலும் கொடுக்கும்தானே... அதில உங்களுக்கு என்ன கூச்சம்.."

'போடா... நீ என்னவோ சொல்லுறாய்.. இது தொடர்ந்தா எல்லாத்தையும் வியாபாரமாக்கிப் போடுவம்..." என்று ஆட்சேபித்தார் இகுருவி ஐயா.

'எக்ஸாட்லி... மாவீரர் தினத்துக்கு ஒரு பத்திரிகை விசேட பதிப்பு விட்டால் அதில வியாபாரம் இல்லையா? ரிவி விசேட நிகழ்ச்சி செய்தால் அதில வியாபாரம் இல்லையா? ரேடியோ விசேட நிகழ்ச்சி செய்தால் அதில வியாபாரம் இல்லையா? இருக்குத்தானே... அப்பிடித்தான் இதுவும்.. எல்லாத்தையும் வியாபாரம்போலச் சொல்லலாம்.. பிறகென்ன இந்த ஒரு இன்ரர்நெற் வியாபாரத்தை மட்டும் நாங்க நக்கல் அடிக்கிறது.?"

'என்னவோ... எனக்கு அதில உடன்பாடு இல்லை.." என்றார் இகுருவி ஐயா.

'உடன்பாடு இல்லாட்டா அந்த வியாபாரத்தை ஸப்போர்ட் பண்ணாதையுங்கோ.. உடன்பாடு இல்லாத விசயத்தில நாங்க ஈடுபடாம விடுகிறதுதான் அந்த விசயத்துக்கு நாங்க காட்டுற மிகப்பெரிய எதிர்ப்பு... இப்ப பாருங்கோ... தமிழ் நாட்டில இருக்கிற நடிகர் சங்கம் தாங்கள் இனிமேல் ஈழப்பிரச்சினையில தலையிட மாட்டம் எண்டு சொல்லிப்போட்டினம். அவைக்கு இப்ப இதில உடன்பாடு இல்லை.."

'அவை எங்கட பிரச்சனையை எடுக்கிறதும் வேண்டாம் எண்டுறதும் அவயின்ரை சுதந்திரம். ஆனா.." என இழுத்தார் இகுருவி ஐயா.

'உங்களை மாதிரித்தான் நானும் நினைக்கிறன். இப்ப நடிகர் சங்கத் தலைவரா இருக்கிற நடிகர் நாஸர் ஈழத் தமிழ் மக்கள்மேல நிறைய அன்பு வச்சுக்கிற ஆள். என் நண்பர் அவர். எனக்கு பல வருடங்காகவே அவரை நல்லாத் தெரியும்.. தானாகவே வலியச் சென்று பல ஈழத்தமிழ் ஆதரவு நிகழ்வுகள் வெற்றியடைய உதவிகள் செய்தவர். எங்கட பிரச்சினை குறித்து நடுநிலையான அதே சமயம் கடும் ஆதரவு நிலைப்பாடு வைச்சிருக்கிறவர். அவற்ரை தலைமையில இப்பிடி ஒரு முடிவு வருகுது — அவரும் அதை மௌனமாக ஏற்றுக் கொள்கிறார் எண்டா அதற்கு பின்னால ஒரு சீரியஸான காரணம் இருக்கும் எண்டுதான் நான் நினைக்கிறன்."

'சிலவேளை ராதாரவி—சரத்குமார் ஆக்கள் ஈழத்தமிழர் ஆதரவு எண்டு அதிகமாக் கதைக்கிறதால நாஸர்—விசால் குழு வேணுமெண்டே அதைக் குறைக்கினமோவும் தெரியாது.." என்றார் இகுருவி ஐயா.

'இருக்கலாம்.. இருக்கலாம்.. அது அவையின்ரை உள்வீட்டு அரசியலா இருக்கலாம்" என்ற நான் 'ஐயா.. நடிகர் சங்கம் அப்பிடி சொன்னதுக்கு ஒரு வகையில நாங்களும் காரணம்தான்.." என்றேன்.

'நாங்க என்ன காரணம்?"

'பின்னை என்ன ஐயா..? நடிகர்கள் எங்களுக்காக உண்ணாவிரதம் இருந்தா நாங்களே அதைக் கிண்டல் பண்ணுறனாங்கதானே.. ஏதோ எங்கட பிரச்சனையை வைச்சு அவை பிழைக்கிற மாதிரியும், புலம் பெயர்ந்த ஆக்களின்ரை காசுக்காகத்தான் அவை எங்கள ஆதரிக்கிற மாதிரியும்தானே நாங்க அதை இன்ரப்பிரிட் பண்ணுறனாங்கள்.. இல்லை எண்டுறியளே? பேஸ்புக் போராளியள் ஒரு படி மேல போய் அவை தாற ஆதரவை உலகளாவிய நிலையில தெரியிறமாதிரித் திட்டித் தீர்ப்பினம்.... சினிமா உலகில மணிவண்ணன், சத்தியராஜ், ஆர்.சுந்தர்ராஜன், கௌதமன், செல்வமணி எண்டு ஒரு கொஞ்சப்பேர்தான் எங்கடை ஆக்களைப் பொறுத்தவரை இன உணர்வாளர்கள்! மற்றவை — அவை என்னதான் உதவி செய்தாலும் — ஈழப்பிரச்சினையைப் பொறுத்தவரை அவையை ஒருவித நக்கல் பார்வையோடதானே நாங்க பாக்கிறனாங்கள்." என்றேன் நான்.

'அது வேற..." என மறுத்தார் இகுருவி ஐயா.

'என்ன வேற?? தமிழகத்தில நடக்கிற ஈழத்தமிழர் ஆதரவு கூட்டங்களுக்கு சமூகமளிக்காத நடிகர்களை புலம்பெயர்ந்த நாடுகளில போய்கட் பண்ணுறதும்.. அவங்கட படங்களை இங்கினயுக்க ஓட விடமாட்டம் எண்டு அறிவிக்கிறதும் நாங்கதான்..! இந்த சிக்கல்களில இருந்து விடுபடத்தான் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி எண்டு அவை நினைச்சிட்டினமோ தெரியாது."

'இருக்கலாம்.. ஆனா நடிகர்கள் சென்னையில வந்த வெள்ளத்துக்கு தாராளமா உதவுறாங்கள்.."

'இதுவும் எனக்கு விளங்கேல்ல ஐயா.. நடிகர்கள் உதவி செய்யவேணும் எண்டு நாங்க ஏன் நினைக்கவேணும்.? சுலீதாரண மக்கள் படம்பார்த்துக் குடுத்த காசிலதான் அவை பணக்காறர் ஆனவை எண்டது உண்மைதான்.. ஆனா நீங்க காசு சும்மா குடுக்கேல்லைத்தானே.. உங்கட பொழுதுபோக்குக்காகத்தானே கொடுத்தனீங்கள்.. உங்களுக்கு பிடிச்ச நடிகர் எண்டுதானே காசைக் குடுத்து சந்தோசமா படம் பாத்தனீங்கள்.. நீங்கள் குடுத்த காசுக்கு உங்களுக்கு சந்தோசம் கிடைச்சுது எண்டதோட கணக்கு தீர்ந்திட்டுது... இல்லையோ? பிறகு ஏன் அவையை வெருட்டுறியள்? நாங்க கொக்கோ கோலா குடிச்சதால கொக்கோகோலா கொம்பனிக்காறன் எங்களின்ரை சுக துக்கங்களில பங்குபெற வரவேணும் எண்டு கேக்கிறனாங்களே? இல்லைத்தானே... நடிகர்களை மட்டும் கூத்தாடி எண்டு இளக்காரமா நினைக்கிறம்போல.."

'அடிக்கிற கைதான் அணைக்கும்.."

'மாற்றி யோசித்தும் பாருங்கோ.. அணைக்கிற கைதான் அடிக்கும். சுனாமியைப் பாருங்கோ... சென்னை வெள்ளத்தைப் பாருங்கோ.. மனிசரை அணைக்கிற இயற்கை முரண்டு பிடிச்சா அடிதான்.. கதை கந்தல்தான்.. இப்ப ஒரு கதை சொல்லட்டே..." என்றேன்.

இகுருவி ஐயா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'ஒரு முறை கடும் மழை பெய்து கொண்டு இருந்ததாம்.. ஒரு குரங்கு நல்லா நனைஞ்சு போய் ஒரு மரத்தடியில இருந்துதாம். அந்த மரத்தில தூக்கணாங்குருவிக் கூடு ஒண்டும் இருந்துது. அதுக்குள்ள பாதுகாப்பா இருந்த தூக்கணாங் குருவிகள் குரங்கைப் பாத்திட்டினம். ஏதோ ஆதங்கத்தில 'குரங்கே.. எங்களைப்பார்.. நாங்க கட்டின ஒரு வீடு எங்களுக்கு இருக்கு.. நீ ஏன் உனக்கெண்டு ஒரு வீட்டைக் கட்டேல்லை?" எண்டு ஒரு தூக்கணாம் குருவி கேட்டுதாம். அதுக்கு குரங்கு 'எனக்கு வீடு கட்டத் தெரியாது" என்று வெட்கத்துடன் சொன்னதாம். 'கை இல்லாத நாங்களே கூடு கட்டி வாழுறம். கை இருக்கிற உனக்கு கூடு கட்டத் தெரியேல்லையே" என்றதாம் தூக்கணாங்குருவி. குரங்கு கடுப்பாயிற்றிது. 'இந்தக் கைகளுக்கு கூடு கட்டத் தெரியாதுதான். ஆனா கட்டின கூட்டைப் பிரிக்கத் தெரியும்... பாக்கிறியா.. பாக்கிறியா.. பாக்கிறியா.." எண்டு சிங்கம் சூர்யா மாதிரி தூக்கணாங்குருவிகளின் கூட்டை தன் கைகளால் பிய்த்து எறிந்துவிட்டு போய்விட்டது"

'என்ன சொல்ல வாறாய்?"

'இயற்கையை மதிக்க வேணும். எங்களின்ரை ஆசைப்படி இருக்குமாறு இயற்கையை ஓரளவுக்குத்தான் கேக்கலாம். இயற்கை கடுப்பானா அவ்வளவுதான். காலநிலை மாற்றம் இயற்கை கடுப்பானதன் அறிகுறி. அது இப்பதான் உலகத்தைத் தாக்க ஆரம்பிச்சிருக்கு.. ஐயா... இயற்கையை நாங்க மாசுபடுத்தி மாற்றிவிட்டதால தூக்கணாங்குருவி எண்ட குருவி இனமே இண்டைக்கு இல்லாமப் போயிட்டுது.. இந்த போக்குத் தொடர்ந்தால் மனிதர்கள் நாங்கள்கூட இந்தப் பூமியில இல்லாமலே போய்விடவும் கூடும் ஐயா.. இயற்கை ஒரு அரசன்மாதிரி.. அந்த அரசனின்ரை அதிகாரத்துக்குக் கீழைதான் நாங்க வாறம் எண்டதை மறக்கக் கூடாது.. புருசனை நம்பி அரசனைக் கைவிடக்கூடாது..."

'பயப்பிடுத்தாதயடாப்பா... பயமாக் கிடக்கு.. கடவுள் கை குடுப்பார்..."

'கை எண்டுறது குடுக்கிறதுக்கு மட்டும்உபயோகமாகிறதில்லை.. தேவைப்பட்டா கை பிய்ச்சும் எறியும்.. கவனம்.."

PURCHASE - REFINANCE - EQUITY TAKE OUT
வீடென்ன உலகத்தையே வாங்கலாம்!
Suganthan Thavarajasingam
Mortgage Agent Lic # M08010501
CALL 416.859.2564
Office: 416.283.2377 x 116
35 Grand Marshall Dr, Toronto ON M1B 5W9 FSCO #10473
OBSIDIAN MORTGAGE CORPORATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage celebrates 'Annual Awards 2015 and Gala'

By Siva Sivapragasam

RE/MAX Community Realty Inc. celebrated its Annual Awards 2015 & end of the year function on Friday, Dec 4th with a large guest turnout at the Scarborough Convention Centre.

RE/MAX Community Realty Inc. is an independently owned and operated Real Estate Brokerage run by a team of dedicated and trusted professionals backed by the internationally reputed RE/MAX brand, renowned for its a strong presence in the Real Estate market.

RE/MAX Community Realty Inc. is a franchise holder and owned and independently operated at present by a dedicated team managed by experienced professionals Rajeef Koneswaran & Logan Velumailum. They both have earned the trust, respect and confidence of the public coming to them for the services of a Real Estate agent towards buying or selling a home over many years.

Logan Velumailum is the Broker of Record for the Company welcomed the guests and briefed the guests about the Company and thanked the sponsors for the presentation of Awards. Logan is gifted with several years of experience in the Real Estate business.


Several of the agents of the Company received Awards for their dedicated services and achievements this year, a special award for Employee of the Year presented to Razia Akbarzada along with an Appreciation Award presented to Ms. Krishni Narine for emceeing the Company's annual events since 2012. RE/MAX founders Frank Polzler & Walter Schneider were made surprised with their portraits carved in wood, and the mementos were accepted by Chris Alexander, Senior Franchise Sales & Strategic Growth Consultant and Nancy Sears, Franchise Development Consultant.

Rajeef & Logan thanked everyone and especially the sponsor partners for their continued support rendered to the brokerage and its team members throughout the year. Guests were entertained to a sumptuous dinner at the end of the proceedings of the function.

Seen here are some pictures taken at the Event.

**Photo Courtesy: Ekuruvi**

Executive Club Award Winners




Mansoor Bajwa, Rasheela Sinnarajah, Christina Vilosanan, Imran Hussain

Mayuran Rajashivam, Thas Vallipuram, Sheron Hurley, Thakshaan Jayaranjan

Mohan Panchalingam, Bakeer Subramaniam, Murali Sivaguru, Nim Nirmalan

Theepan Logeswaran, Sayon Balasuntharam, Jeyakumar Somasundram, Kannan Panchalingam

Emily Nery, Tharuma Somasunderampillai, Afzal Paracha, Herman Hunte

Rajah Tharmalingam, Praba Kandasamy, Theepan Selvaratnam

Nila Ravindran, Zakir Patel, Suthan Arulanantham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

# celebrates 'Annual Awards 2015 and Gala'

**Top Producer & Platinum Award Winner**



Brandon Williams

**Platinum Award Winners**



Kayan Kanesalingam



Akilan Sivapalam



Joey Quiambao

**100 Percent Club Award**



Ken Kirupa



Pirapa Nallathamby



Jambo Viswalingam



Uthayakumar Subramaniam

**100 Percent Club Award**



Ranvir Dogra



Selva Puvaneswaranathan



Thiba Shanmugarajah



Leon Williams

**100 Percent Club Award**



Mark Antazo

**Rookie & 100 Percent Club Award**



Leon Williams



Thiba Shanmugarajah



Mark Antazo

**Executive Club Award**



Subha Aynkharan



Nicky Nemard



Shamil Hussain



Mahan Ghajemukan

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை விழிப்படைய வைத்துள்ள




# பிரான்ஸ் தாக்குதல்



## ரஷ்யாவுடனான பிரான்ஸின் கூட்டு வெற்றியளிக்குமா?



**உலக ஏகாதிபத்திய போட்டி நிரலில் முட்டிக் கொள்ளும் ரஷ்யா, அமெரிக்க வல்லரசுகள் ஐ.எஸ், தீவிரவாதத்தை ஒழிக்கும் திட்டத்தில் ஒன்று சேர்ந்தமை ஆச்சரியமளிக்கும் உண்மையானாலும் ஐ.எஸ். தீவிரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் ரஷ்யாவின் கைஓங்கும் பட்சத்தில் அமெரிக்காவுக்கு அது பேரச்சத்தை உண்டுபண்ணும் என்பதோடு ஐரோப்பிய நாடுகளுக்கு தன் மேலாண்மையை உரத்துக்கூறும் வாய்ப்பாகவும் பயன்படும்.**

'இவர்கள் ஒரு சித்தாந்தத்தால் கவரப்பட்டு, தங்களுடன் ஒத்துப்போகாதவர்களை சற்று தரம் குறைவான மனிதப்பிறவிகளாகப் பார்க்கிறார்கள். இந்த மனிதச் சீரழிவு அவர்களால் கொல்லப் படுகிறவர்களின் நிலையுடன் அவர்களால் அனுதாபப்பட முடியாமல் போகவைக்கலாம். ஆனாலும் அவர்கள் அவர்களது லட்சியத்துக்கு விசுவாசமாக இருக்கிறார்கள். அதற்காக ஒன்றாக இணைந்து செயல்படுகிறார்கள். அவர்களுக்குள் தோழமை உணர்வு இருக்கிறது. இந்த அம்சங்கள் எல்லாம் 'கொலை வெறி மனநோய்' கொண்ட தனி நபர்களுக்கு இருக்காது. அவர்கள் வெறும் எண்ணிக்கையை மட்டும் பார்ப்பார்கள். சித்தாந்தங்கள் தனிநபர் கொலையாளிகளை அபூர்வமாகவே ஈர்க்கின்றன. உலகின் அல்லது சமூகத்தின் எல்லாப்பகுதிகளிலும் இருப்பதைப் போலவே சில தீவிரவாதிகளுக்கும் இந்த மனநோய் அம்சங்கள் இருக்கலாம்.

ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இது இருக்கும் என்பது சாத்தியமல்ல. கொலைவெறி மனநோய் கொண்டவர்கள் குழு ஒன்று ஒரு பொதுவான இலக்குக்காக, இணைந்து செயல்படமுடியாது. ஏனென்றால், இந்த கொலைவெறி மனநோய் கொண்ட தனிநபர்களை யாரும் தலைமை தாங்கி வழி நடத்துவது கடினம்'

பாரீஸில் நவம்பர் 13 அன்று நடந்த கொடூரத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோன் கெரி, இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளை 'கொலைவெறி மனநோய் பிடித்த அரக்கர்கள்' என்று வர்ணித்திருந்தார். இதுபற்றி லண்டன் யுனிவர்சிற்றி கல்லூரியின் டெவெலப்மெண்டல் சைக்கோ பெத்தாலஜி துறை பேராசிரியரான எஸ்லிவைடிங் மேற்கூறிய பதிலை முன்வைத்திருந்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் 120 உயிர்களை பலிகொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள், உலகளவில் தவிர்க்க முடியாத பேசுபொருளாக தங்களை இனங்காட்டியுள்ளனர். உலகம் முழுவதையும் இஸ்லாமிய அரசாக்கும் கொள்கையுடன் செயற்படும், இவ்வமைப்பின் ஒவ்வொரு செயற்பாடும் மிக கொடூரமானதாகவும், தம்மை மிக பயங்கரமானவர்களாகவும் சித்தரிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது. மதத்தின் பெயரால் கொல்லப்படும் உயிர்கள் ஒருபோதும் மனித தர்மத்தையோ அந்த மதத்தின் போதனைகளையோ பிரபல்யப்படுத்த ஏற்ற காரணமாக அமையாது. அதற்கு பதிலாக மாற்றமுடியாத காழ்ப்புணர்வை வளர்த்தெடுப்பதுடன் நாத்தீகப் பற்று மிக்க சமூகத்தை உருவாக்கவல்ல வகையிலேயே அதன் மறுதாக்கம் அமையப்பெறும் என்பதற்கு உலகம் கண்ட சிலுவைப்போர்கள் சாட்சிகளாகின்றன. உலகளாவிய ரீதியில் மதச்சகிப்புத்தன்மை பரவலடைந்திருந்தாலும் அடிப் படைவாதச் சிந்தனைகொண்ட குழுக்களால் அவை திசை மாற்றத்துக்குட்படும் நிலை மாற்றத்துக்குட்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மேற்கு ஐரோப்பாவில் பிரான்ஸில்தான் முஸ்லிம்கள் மிக அதிகமாக வசிக்கின்றார்கள். அங்கு அவர்களின் மக்கள் தொகை 50 லட்சமாகும். கடந்த 2010 இல் ஐரோப்பாவில் முதன் முறையாக பிரான்ஸ் பொது இடங்களில் 'பர்தா'வுக்கு தடைவிதித்தது. பாதுகாப்பு காரணங்களை முன்நிறுத்திய இம்முடிவுக்கு பல்வேறு விதமான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன. முகத்தை மட்டுமோ அல்லது முழு உடலையுமோ மூடும் பர்தாக்களை மட்டுமல்லாமல் ஒரு தனிநபரின் அடையாளத்தை மறைக்கும் முகமூடிகள், தலைக்கவசங்கள் உட்பட்டவற்றையும் தடைசெய்யும் ஒரு சட்டம் ஏறக்குறைய ஏகமனதான ஆதரவுடன் பிரான்ஸ் அரசாங்கத்தால் நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பாரீஸ் தாக்குதலுக்கு பின்னரான பிரான்ஸின் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 1 ஆம் திகதி முதல் பிரான்ஸ் படைகளால் தீவிரவாதிகளை தேடி அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இத்தேடல் வேட்டையில் 16 ஆம் திகதி அதிகாலையில் சென்டெனிஸ் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொலீஸாருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பாரீஸ் நகரை அதிர வைத்திருந்ததுடன் இத்தாக்குதலில் பயங்கரவாதிகளின் சார்பில் பெண் தற்கொலை குண்டுதாரியொருவரும் களத்தில் இறங்கியிருந்தார்.

சென்டெனிஸ் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பிலிருந்து பொலிஸார் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட பதில் நடவடிக்கையில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பிரென்ஞ் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பாரீஸ் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான அப்டெல் ஹமீத் அபவுட் (26) என்பவர் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. பெல்ஜியம் நாட்டு குடியுரிமை பெற்றுள்ளதுடன், அந்நாட்டு பொலிஸாரால் தேடப்படும் தீவிரவாதியாகவும் இனங்காணப்பட்டுள்ள அபவுடின் புகைப்படங்கள் பெல்ஜியம் நாட்டு பத்திரிகைகளில் வெளியாகிய வண்ணம் உள்ளன.

இதேவேளை, நவம்பர் 13ஆம் திகதி படாகிளான் கலையரங்கில் தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரியும் இனங்காணப்பட்டுள்ளார். உமர் இஸ்மாயில் முஸ்தபா எனப்படும் இந்நபர் பாரீஸின் தென்மேற்கிலுள்ள லூஸ் எனும் பகுதியில் உள்ள மசூதிக்கு தினமும் சென்று வந்துள்ளமை விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. பாரீஸின் கோர்கோரன்னஸில் 1965 இல் பிறந்த உமர் 2004 முதல் 2010 வரையான காலப்பகுதியில் சிறு சிறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவராவார். எனினும் சிறைத்தண்டனைகள் எதையும் பெற்றிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கையின் போது தற்கொலைத் தாக்குதல் நடத்திய பெண் தீவிரவாதி ஹசானா எஹெய்ட் பவுல்ஹாசன் (20) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ஹசானா ஐரோப்பாவின் முதல் பெண். தற்கொலை குண்டுதாரி என ஐரோப்பிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

உலகின் மிகப்பணக்கார தீவிரவாதக் குழுவாக கருதப் படும் இஸ்லாமிய அரசு, சிரியாவிலும் ஈராக்கிலும் தன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை இணைத்து 'கேலிப்பேட்'(இஸ்லாமிய புனித அரசு) ஆட்சியை நடத்துவதாக கூறிக்கொள்கிறது.

குறிப்பாக சவூதி அரேபியா மற்றும் கட்டார் போன்ற நாடுகளிலும் பிற நாடுகளிலும் உள்ள செல்வந்தர்களும், இஸ்லாமிய தர்ம ஸ்தாபனங்களும் இந்த அமைப்புக்கு நிதி வழங்குனராக இருக்கின்றனர் என பரவலாக தகவல்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2014 இல் மட்டும் ஐ.எஸ். வாரமொன்றுக்கு பல மில்லியன் டொலர்கள் வரை சம்பாதித்திருக்கும் என்று அமெரிக்க நிதித்துறையின் கணிப்பீடுகள் கூறுகின்றன.

முழுவதுமாக 100 மில்லியன் டொலர்கள் ஈட்டப்பட்டிருக்கலாம் என்று அது கருதுகிறது. இந்த வருமானம் கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பல பொருட்களை உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலமாக கிடைத்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

ஆனால் எண்ணெய் தொடர்பான கட்டமைப்பு மீது நடத்தப்பட்ட வான்தாக்குதல்கள் இப்போது இது போன்ற வருவாயை குறைத்திருக்கும் என்று நம்பப்படுகிறது. 2014 இல் ஆட்கடத்தல்கள் மட்டுமே இந்த அமைப்புக்கு சுமார் 20 மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொடுத்திருந்தன. உளவு அமைப்பு என்று பெயரிடப்பட்ட ஐஎஸ். அமைப்பின் ஒரு துறையே இந்த கடத்தல் வேலைகளில் ஈடுபடுகிறது. தனது முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் வசிக்கும் பல இலட்சக்கணக்கான மக்களை மிரட்டி மாதமொன்றுக்கு பல மில்லியன் டொலர்கள் சம்பாதிக்கிறது என்று அமெரிக்க நிதித்துறை கூறுகிறது.

அதன் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் மூலம் செல்பவர்கள் அல்லது அங்கு வசிப்பவர்களுக்கு 'சேவைகள்' அல்லது 'பாதுகாப்பு' வழங்குவது போன்றவை மூலம் பணம் வசூலிக்கும் நடைமுறையும் இருந்து வருகிறது.

வங்கிகளை கொள்ளையடித்தல், சூறையாடல், புராதன பொருட்களை விற்றல் மற்றும் கால்நடைகளை திருடுதல் மூலமாகவும் ஐ.எஸ். அமைப்பு தன் பணபலத்தை அதிகரிக்கிறது. மதச்சிறுபான்மையினர் மீது 'ஜிஸ்யா' என்ற சிறப்பு வரியை இந்த அமைப்பு விதித்து, அவர்களைக் கட்டாய பணம் அறவாக்கலுக்கு உட்படுத்துகிறது.


கடந்த ஆண்டு ஈராக்கிய நகரான மோசுல் நகரில் உள்ள பள்ளிவாசல்களில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி அனைத்து கிறிஸ்தவர்களும் மதம் மாறவேண்டும் அல்லது ஜிஸியா என்ற சிறப்பு வரியைச் செலுத்த வேண்டும் அல்லது அவர்கள் அந்த நகரைவிட்டு வெளியேறாமல் இருந்தால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறாகமனிதகுலத்திற்கெதிரான மோசமான அமைப்பாக தன்னை வெளிப்படுத்தும் ஐ.எஸ். அமைப்பின் செயல்பாடுகள் உலகளவில் அவ்வமைப்பை உலக நாடுகளிலிருந்தும் மனிதர்களிடமிருந்தும் ஓரம் கட்டும் சூழ்நிலைக்கு தன்னை தள்ளியுள்ளது.

வடஈராக்கில் சிஞ்சார் நகரை இஸ்லாமிய அரசு கைப்பற்றியபோது யாஸிதி மதச்சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் மற்றும் சிறுமிகளைச் சிறைப்பிடித்து பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தியது.

இவ்வாறு இன்று இவ்வுலகில் வாழும் சமூகம் கண்டிராத மனித சமூகத்திற்கு எதிரான பாரிய குற்றங்களையும் — அழிவுகளையும் அரங்கேற்றிவரும் ஐஎஸ். அமைப்பு கடந்த மாதம் பாரீஸ் நகரில் தன்னுடைய அட்டூழியத்தின் அடுத்த நகர்வை நகர்த்தியிருக்கிறது. இத்தாக்குதல் உலகநாடுகளை ஆத்திர மூட்டியிருப்பதுடன், சர்வதேசம் ஒன்றிணைந்து அவ்வமைப்பை அழிக்கும் சந்தர்ப்பம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது.

அமெரிக்காவின் கூட்டணி தலைமையிலான படையினர் ஐஎஸ். பயங்கரவாதிகளை அழிப்பதில் பல்வேறு தேக்க நிலைகளை எதிர்கொண்டுவந்த நிலையில், ரஷ்யாவின் கைகோர்ப்பு தாக்குதல் முயற்சிகள் அடுத்த கட்டத்தை முன்னேற்றத்துக்குட்படுத்தியிருந்தது. கடந்த அக்டோபர் மாதம் சிரியாவில் உள்ள ஐ.எஸ். தலைமையகம் மீதான ரஷ்யகூட்டுப்படையினரின் தாக்குதலின் போது, ஆயுதக் களஞ்சியம் உட்பட அதன் தலைமையகமும் தகர்த்தெறியப்பட்டது. இந்நிலையில் சோவியத் யூனியனாக இருந்த ரஷ்யா உடைந்த பின்னர் எல்லைதாண்டிய ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

ரஷ்யாவின் இத்தாக்குதலின் பின் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நிலைப்பாடு வலுப்பெற்றுள்ளதாக



அமெரிக்க ஜனாதிபதி பராக்ஒபாமா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈராக், சிரியா, எகிப்து, லிபியா உட்பட பல நாடுகளின் அரசியல் முரண்பாடுகளைதனக்குசாதகமான சமிஞ்கைகளாக கையாண்டு அந்நாடுகளின் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதன் மூலமாக தன் கட்டுப்பாட்டில் அவற்றை வைத்திருக்கும் கனவை அண்மித்தது. இந்நிலையில் ஈராக் மற்றும் சிரியாவில் பரவியுள்ள ஐஎஸ். அமைப்பு அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தது. உலகளவில் கவனிக்கத்தக்க திருப்பத்தை அவ்வமைப்பு மீது ஏற்படுத்தியிருந்தது. உலக ஏகாதிபத்திய போட்டி நிரலில் முட்டிக்கொள்ளும் ரஷ்யா, அமெரிக்க வல்லரசுகள் ஐ.எஸ். தீவிரவாதத்தை ஒழிக்கும் திட்டத்தில் ஒன்று சேர்ந்தமை ஆச்சரியமளிக்கும் உண்மையானாலும் ஐ.எஸ். தீவிரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் ரஷ்யாவின் கையோங்கும் பட்சத்தில் அமெரிக்காவுக்கு அது பேரச்சத்தை உண்டுபண்ணும் என்பதோடு ஐரோப்பிய நாடுகளுக்கு தன் மேலாண்மையை உரத்துக்கூறும் வாய்ப்பாகவும் பயன்படும்.

இந்நிலையில் கடந்த வாரம் ஐ.எஸ். அமைப்பு பிரான்ஸில் நடத்திய தாக்குதலையடுத்து ஐ.எஸ்.அமைப்பை ஒழிக்கும் செயற்பாட்டிற்காக பிரான்ஸ் ரஷ்யாவுடன் கூட்டுசேர்ந்துள்ளமை அரசியலரங்கில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாரீஸில் நடந்த தீவிரவாத தாக்குதலின் பின்னராக சிரியாவில் ஐஎஸ். தீவிரவாதிகள் பதுங்கியுள்ள முகாம்களின் மீது ஈவிரக்கம் இல்லாமல் தாக்குதல் நடத்துமாறு பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹோலண்டே கூறியுள்ள நிலையில், பிரான்ஸ் விமானங்கள் சரமாரியான தாக்குதல்களை தீவிரப் படுத்தியிருந்தன. இத்தாக்குதலில் சிரியாவின் ரக்கா நகரில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் பயிற்சி முகாம் மற்றும் தலைமையகம் அழிக்கப்பட்டதாக பிரான்ஸ் அரசு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஜீ—20 மாநாட்டில் பங்கேற்ற துருக்கி நாட்டுக்கு சென்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடியிர் புடின்னுடன் பிரான்ஸ் ஜனாதிபதி தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு பேசினார். ஐ.எஸ். தீவிரவாதிகளை முற்றாக அழிப்பதற்கு ரஷ்யாவின் விமானப்படையின் ஒத்துழைப்பு தங்கள் நாட்டுக்கு தேவைப்படுவதாக அவர் வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதாக கூறிய ரஷ்ய ஜனாதிபதி, பிரான்ஸ் அரசுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்தி ஐஎஸ். தீவிரவாதிகளை ஒழிப்பதில் அந்நாட்டுக்கு துணைநிற்க வேண்டியது அவசியம் என தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான உச்சக்கட்டப்போர் திட்டங்களை உறுதி செய்வதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதி மொஸ்கோ நகரில் ரஷ்ய ஜனாதிபதி பிரான்ஸ் ஜனாதிபதியை சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

உலகுக்கும் மக்களுக்கும் அச்சுறுத்தலாக உருமாறிவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக சர்வ தேசம் ஓரணியில் திரளவேண்டிய கட்டாயமானதும் அவசரமானதுமான சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது. உலக நாடுகள் அனைத்திலும் பரவிவாழும் ஐ.எஸ்.களை அடியோடு அழிப்பது என்பது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை. அத்துடன் அந்த இலக்கை குறுகிய காலத்திற்குள் அடைந்துவிடவும் முடியாது. இருப்பினும் கூட அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை காலம் கடத்தாது அவசரகதியில் ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். இல்லாவிடில் மனித இனத்தின் படுபாதகமான அழிவினை எவராலும் தடுத்து நிறுத்த முடியாத அச்சம் சூழ்ந்த இருண்ட யுகத்துக்குள் உலகம் செல்வதை எவராலும் தடுக்க முடியாத நிலைமை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- மரண அறிவித்தல்கள் வீட்டிலிருந்தபடியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக் கொள்ளவும்
- GTA இல் அதிகம் பேர் அமரக்கூடிய புதிதாக புனரமைக்கப்பட்ட அறைகள்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளவும்
- SlideShow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்கு செய்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும் எப்பாகத்திற்கும் Wreath (மலர் வளையம்) வைப்பதற்கான சேவையைப் பெற்றுக் கொள்ளவும்

* இலங்கையின் எப்பாகத்திற்கும் மலர்வளையம் அனுப்புவதற்கான சேவை



Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call :
**Vilosan Sivatharman** B.Eng
முதலாவது கனடியத்தமிழ் Funeral Director
**416 993 0826**

Call :
**Christeen Seevaratnam**
Funeral Counsellor
**416 258 6759**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகிப்புத்தன்மை, சமத்துவம், நீதி மற்றும் மனித உரிமைகள்

**போன்றவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கனடா விளங்குகிறது!**

## கனடிய நாடாளுமன்றத்தில் டிசெம்பர் 8 ஆம் நாள் கரி ஆனந்தசங்கரி ஆற்றிய கன்னிப் பேச்சு!



(கடந்த டிசெம்பர் 8 ஆம் நாள் ஸ்காபரோ — றூச் பார்க் நடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி அவர்கள் தனது கன்னிப் பேச்சை நாடாளுமன்றத்தில் ஆற்றினார். அதன் தமிழ் வடிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.)

சபாநாயகர் அவர்களே, நான் எனது நேரத்தை சவுத் ஷோர் — செயிண்ட். மார்கரெட்ஸ்ஸின் உறுப்பினருடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஸ்காபரோ — றூச் பார்க் தொகுதியின் முதல் உறுப்பினராக இங்கு நான் தெரிவு செய்யப்பட்டதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். என்மீது நம்பிக்கை வைத்து அவர்களின் பிரதிநிதியாக என்னைத் தெரிவு செய்ததற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அல்லது மீண்டும் தேர்தலில் வெற்றிபெற்ற எனது சகாக்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட உங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் வளர்ச்சிக்காக இந்த அறையில் இருக்கும் அனைவருடனும் ஒருங்கிணைந்து பணியாற்ற நான் உறுதி பூண்டுள்ளேன். அரியணை உரைக்கு ஆதாரவாகப் பேசுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

ஸ்காபரோ — றூச் பார்க் முந்தைய ஸ்கார்புரோவின் ஆறு தொகுதிகளுள் ஒன்று, தற்போது ரொறன்ரோ நகரின் ஒருபகுதியாகவும் இருக்கிறது. கனடாவின் அனைத்துப் பகுதிகளைக் காட்டிலும் நாங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட சமூகங்களின் குறியீடாக இருக்கிறோம்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எனது தொகுதி மற்றும் அது அமைந்துள்ள பகுதிக்கான தேவைகளைப் பட்டியலிட எனக்கு அனுமதியளிக்க வேண்டும். றூச் பார்க் எனது தொகுதியின் இதயம் போன்றது. ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் றூச் ஆறு, புதிய தேசிய பூங்கா, ரொறன்ரோ விலங்குக் காட்சிச்சாலை, மேட்டு நீரோடை (Highland Creek) ஸ்காபரோ நதிக்கரை போன்ற இயற்கையின் எழில் கொஞ்சும் நிலக்காட்சிகளால் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம்.

இந்த றூச் பார்க் எனது தொகுதியின் இதயமாக விளங்குகிறது. இது எண்ணற்ற தனிநபர்கள் மற்றும் குழுக்களின் வாழ்க்கைப் பணியின் பலனாக அமைந்த ஒன்று. பூங்காவின் முழு ஆற்றலை வெளிக்கொணர அரசு உறுதி பூண்டுள்ளது. பிரதமர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சருக்கு எழுதிய ஆணைக் கடிதத்தில், நாட்டின் முதல் நகர்ப்புற தேசிய பூங்காவை மேம்படுத்த எனது சகாவை ஒன்ரேறியோ அரசுடன் இணைந்து செயல்பட வலியுறுத்தப்பட்டிருந்தது. இதில், முக்கிய சுற்றுச்சூழலை பாதுகாக்க மேம்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் பூங்கா எவ்வாறு நிர்வகிக்கப்படவேண்டும் போன்றவையும் அடங்கும். இது என்னைக் கிளர்ச்சியுறச் செய்கிறது.

சமூகத்தின் தேவைகள் மற்றும் வேட்கைகளைப் பிரதிபலிக்கும் வகையிலும் மற்றும் வருங்கால சந்ததியினருக்கு ஒரு மரபுரிமைப் பேற்றைவிட்டுச்செல்லும்வகையிலும் நமது பகுதியில் ஒரு தேசிய பூங்காவைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நம் நாட்டின் பிற புறநகர்களைப் போல ஸ்காபரோவிற்கும் உட்கட்டமைப்பு தேவை. அடுத்த ஆண்டு தொடங்கி, கூட்டுறவு உடன்படிக்கை மற்றும் எங்கள் தொகுதியில் இருக்கும் 12 கூட்டுறவு வீடமைப்புக்களை எழுச்சியூட்டுவதாக இருக்கும். இக் கூட்டுறவு வீடமைப்பில் 900 குடும்பங்களுக்கு மேலாக வாழ்கின்றன.

முந்தைய அரசு நமது சமூகத்தின் முக்கிய தேவையான உட்கட்டமைப்பை அலட்சியம் செய்தது. உட்கட்டமைப்பில் முதலீடு செய்ய இதை விட வேறு நேரம் வராது. இன்று வட்டி விழுக்காடு வரலாற்றில் மிகக் குறைவாக இருக்கிறது. வேலைவாய்ப்பை அதிகரிக்க மற்றும் வேலைகொடுப்போரை ஈர்க்க நமக்குச் சரியான உட்கட்டமைப்புத் தேவை. மேம்படுத்த வேண்டிய பொருளாதாரத்தை நாம் கையேற்றிருக்கிறோம். இந்தக் காரணங்களுக்காகவே நாங்கள் அவசரமாகத் தேவைப்படும் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்ப உட்கட்டமைப்பில் முதலீடு செய்யவிருக்கிறோம்.

ஸ்காபரோ றூச் பார்க்கில், முன்னாள் வீரர்களுக்கான வீடுகளின் தரம் உயர்த்தல் பட வேண்டும். குடும்பங்கள் வீட்டில் ஒருவருடன் ஒருவர் நேரத்தைக் கழிப்பதற்குப் பதில் தெருவில் காலத்தை செலவிடுவதைத் தவிர்க்கப் போக்குவரத்து வசதிகள் அவசியம். இளையோர் மற்றும் மூத்தோர் ஆகியவர்களுக்கான சமூக மையங்கள் மற்றும் மூத்தோர்களுக்கான கூட்டுறவு வீடுகள் தேவை.

இளைஞர்கள், எனது தொகுதியுடன் ஒருங்கிணைந்துள்ளனர். அதிக இளைஞர்களைக் கொண்டுள்ள ஒரு பகுதிக்கு நான் பிரதிநிதியாக இருக்கிறேன் என நினைக்கும்போது எனக்குப் பெருமையாக உள்ளது. மல்வேர்ண் மற்றும் டான்ஃபோர்த் சமூகங்கள், இளைஞர் வளர்ச்சிக்கான துடிப்பான இடங்கள். இவர்களுக்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இவர்களுக்கு சரியான ஆதரவும் தேவை. அவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் அதிக வேலைவாய்ப்புகளை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும். மற்றும் அவர்களும் இந்த சமூகத்தின் ஒரு அங்கம்தான் என்பதை உணரவைக்க வேண்டும். இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டம், இளைஞர்களை சரியான வயதில் சரியான திறமைகளை வளர்க்கச் செய்துஎதிர்காலத்தில்வேலைகளுக்கு ஏற்றவாறு அவர்களைத் தயார்படுத்த பக்கபலமாக இருக்கும்.

ஸ்காபரோ — றூச் பார்க் தொகுதியில் பணி மற்றும் வேலை வாய்ப்புகளை நாம் உருவாக்க வேண்டும். ஸ்காபரோ ரோட்டரி கிளப், புதிய ஸ்காபரோ புத்துயிர் திட்டத்தை மெற்கொள்ளவிருக்கிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஸ்காபரோ வர்த்தக சங்கம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் திறக்கப்பட்டது. இந்தச் சங்கம், ஸ்காபரோவில் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் வளர்ச்சி மையமாக இருக்கும் எனவும் மற்றும் அதிக வேலை வாய்ப்புகள் உருவாக்கித்தரும் எனவும் நான் நம்புகிறேன். என் சகாக்களுடன் இணைந்து, எனது தொகுதியில் உள்ள பிரச்சனைகளை சரி செய்ய ஆர்வமாக உள்ளேன்.

இந்த மன்றத்திலும் அதற்கு வெளியேயும் அகதிகளின் நற்பெயருக்கு எதிரான தொடர் களங்கங்கள் என்னை வெகுவாக பாதித்துவிட்டது. அண்மைக் காலமாக நாம் அகதிகளை தீவிரவாதிகள், சுமைகள், விரும்பத்தகாதவர்கள் என வர்ணித்து வந்துள்ளோம். அவர்களை நாம் பேய்களாகச் சித்தரித்துள்ளோம். மானிடத்தின் துன்பம் மற்றும் மனித நேயத்தின் நெருக்கடியை நாம் புரிந்துகொள்ளவும் மறுக்கிறோம்.

இன்று, நாம் அனைவரும் இச்சபையில் கூடியிருக்கும் நிலையில், சிரியாவில் இருந்து வெளியேறும் அகதிகள் கனடாவை நோக்கி வர ஆயத்தமாகுகின்றனர். கனடாவை அவர்கள் தங்களது புதிய வீடு என அழைக்கின்றனர். கனடியர்களின் நம்பிக்கைகள் மற்றும் இலட்ச்சியங்கள், முன்பு அகதிகளாக வந்த தலைமுறையினர் மீது எவ்வாறு மாறுபாடின்றி இருந்ததோ, அதேதான் இனி வரவிருக்கும் அகதிகள் பற்றியும் இருக்கும் என நான் நம்புகிறேன்.

ஆப்கானியர்கள், கொசோவர்கள், சோமாலியர்கள், தமிழர்கள், வியட்னாமியர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் பல நாட்டு அகதிகளை வரவேற்றது போல கனடா நமது புதிய அகதிகளை கை கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத உரிமைகள் நாளையிட்டு ஸ்காபரோ றூச் பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கரி ஆனந்தசங்கரி நாடாளுமன்றத்தில் வாசித்த அறிக்கை

திரு. சபாநாயகர் அவர்களே,

இன்று மனித உரிமைகள் நாள் - மனித உரிமைகள் பற்றிய உலகலாவிய பிரகடனத்தைக் கொண்டாடும் ஒரு நாள்.

இந்தப் பிரகடனம், இந்த உலகில் வாழும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமைகளை வரையறை செய்கிறது. குறிப்பிட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என நாம் அனைவரும் கூட்டாக ஒப்புக்கொண்டுள்ளோம். இருப்பினும் இந்த உரிமைகளுக்கு உயிர் கொடுக்க நாம் தவறிவிட்டோம்.

மனித உரிமைகள் தொடர்ந்து சர்வசாதாரணமாக மீறப்படுவதை நாம் அன்றாடம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம்.

கனடியர்கள் என்ற முறையில் மனித உரிமை மற்றும் கண்ணியம் பற்றி நாம் ஈட்டிய சாதனைகளை நாம் கொண்டாடலாம் ரு முக்கியமாக 164 சிரிய அகதிகளை வரவேற்ற இந்த நாளில் ரு இன்னும் நிறையப் பணிகளை நாம் செய்ய வேண்டியுள்ளது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக நமது பழங்குடியின மக்களது உரிமைகள் தொடர்பாக செய்ய வேணடியுள்ளது.

தங்களது மனித உரிமைப் பணிகள் நிமித்தம் அடிக்கடி அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் அல்லது மோசமான வகையில் கொலை செய்யப்படும் மனித உரிமைப் பாதுகாவலர்களின் அழிக்க முடியாத பணியை நான் இங்கு நினைவுகூற விழைகிறேன்.

ஈரானிய வழக்கறிஞர், திரு ஹொஸ்ஸெயின் இரயீசி அவர்களை கனடா மற்றும் நடாளுமன்ற குன்றுக்கு வரவேற்பதில் நான் பெருமையடைகிறேன். இவர் கார்ல்டன் பல்கலைக்கழகம் மற்றும் ஒட்டாவா பல்கலைக்கழகம் இடையேயான இடர் திட்டத்தின் மாணாக்கர்களால் பாதுகாக்கப்பட்டார். திரு இரயீசி, ஈரானியர்களின் சிவில், அரசியல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்துள்ளார்.

இத்தகைய பேசப்படாத நாயகர்களை நாம் கொண்டாடுவோம். அனைவருக்கும் மனித உரிமை கிடைக்க உறுதி எடுத்துக் கொள்வோம்.

வரவேற்கிறது.

இந்தச் சபையில் இப்போது கூடியிருக்கும் நம்மில் பலர் ஒரு காலத்தில் அகதிகளாக வந்தவர்கள்தான். இப்போது இந்நாட்டிற்குப் பங்களிப்பதில் பெருமை கொள்கிறோம். ஜனநாயக நிறுவனங்களின் அமைச்சர், குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சின் துணை அமைச்சர், மற்றும் யோர்க் சவுத்—வெஸ்டர்ன் தொகுதியின் பிரதிநிதியான எனது நல்ல நண்பர் ஆகியோர் இந்த பங்களிப்பின் எடுத்துக்காட்டுக்கள்.

இந்தச்சவையில் எனது கதையைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான் ஒரு பெருமைமிக்க தமிழ்க் கனடியன். இலங்கையில் இருந்து ஒரு தமிழ் அகதியாக நான் இங்கு வந்தேன். தமிழ்மக்கள் கொடுமைப்படுத்தப் பட்ட இனத்தவர்கள். ஒரு கொடிய போரில் 100,000 தமிழர்கள் மாண்டுள்ளனர். இலங்கையில் நடைபெற்ற போரின் கடைசிக் கட்டத்தில் போர்க் குற்றங்கள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் சிறிலங்காவில் நடைபெற்றுள்ளன என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உயர் ஆணையர் கண்டுபிடித்துள்ளார். தமிழர்கள் நீதியைத் தேடுகின்றனர், போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பான ஒரு பன்னாட்டு சுதந்திர குற்றவிசாரனை நடைபெற வேண்டும் எனக் கேட்கின்றோம்.

2009 இல் போர் முடிவுற்றபோதிலும் அமைதி இன்னும் ஏற்படவில்லை. பாலியல் குற்றங்கள் இடம் பெறுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. தமிழர்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலத்தை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் பல ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார்கள். சிலர் பல தசாப்தங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில் நாட்டைவிட்டு வெளியேறிய மக்கள் தங்களது குடும்பங்களைக் காப்பாற்ற பாதுகாப்பான, பத்திரமான இடங்களைத் தேடுகின்றனர்.

2010 இல் எம்வி சன் சீ கப்பலில் வந்த சில தமிழ் அகதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எண்ணற்ற ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைச் சந்தித்தேன். அப்படி சந்தித்த ஒரு பெண்ணின் கதையை என்னால் மறக்கவே இயலாது. போரின் கடைசி நாட்களில், ஒரு பதுங்கு குழியில் தன் கணவர் மற்றும் மூன்று குழந்தைகளுடன் ஒளிந்திருந்தார். அப்பெண். தன் குடும்பத்திற்கு தண்ணீர் எடுக்க வேண்டும் என பதுங்கு குழியிலிருந்து வெளியே சென்ற அந்த நேரம் ஒரு குண்டு விழுந்து அவளது வாழ்வை புரட்டிப் போட்டுவிட்டது. அவரது மூன்று குழந்தைகள் மற்றும் கணவர் சில நொடிகளில் காணாமல்போயினர். இந்தத் தாய், தனது வாழ்க்கையை மீண்டும் உயிர்த்தெழச் செய்ய, தனது உயிரைப் பணயம் வைத்து அந்நியர்களுடன் தைரியமாக கப்பலில் ஏறி இங்கு வந்துள்ளார். இது ஒரு அகதியின் அனுபவம்.

25,000 சிரியர்களுக்கு புதிய வாழ்வையும் பாதுகாப்பையும் அளிக்கக் கனடியர்கள் சரியான செயலைத்தான் செய்கிறார்கள். ஜோர்டான், லெபனான் மற்றும் துருக்கியில் இருந்து வரவிருக்கும் இலட்சக்கணக்கான எதிர்கால அகதிகளில், அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் மீதே நாங்கள் கவனம் செலுத்துகிறோம். இலட்சக்கணக்கான அகதிகளை செயல்படுத்த மற்றும் அவர்களுக்கு உதவவிடாமுயற்சியுடன்செயல்படும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர் ஆற்றுகிற நற்பணியைப் பற்றி இங்கு நான் பதிவு செய்ய விழைகிறேன். யு.என். ஹெச்சி.ஆருக்கு கனடா மேலும் $100 மில்லியன் டொலர்களை அளிக்க முன்வந்ததை வரவேற்கிறேன். அந்த நிறுவனம் சமீபத்திய வரலாற்றில் மிகப் பெரிய குடியேற்றத்தைக் கையாண்டு கொண்டிருக்கிறது.

முடிவாக, சகிப்புத்தன்மை, சமத்துவம், நீதி மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கனடா விளங்குகிறது. சிரிய அகதிகளை உள்ளே அனுமதித்து, அவர்களை ஒருங்கிணைக்கும் விடயத்திற்கான ஒரு முன்னுதாரணமாக நாம் இருக்கிறோம். உண்மையில், வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பலதரப்பட்ட மக்கள் கனடாவை தங்கள் தாய்வீடாகக் கருதுகின்றனர். பல வகையில் உலகமே பொறாமை கொள்ளும் வகையிலான ஒரு நீதியான சமூகத்தை நாம் உருவாக்கியுள்ளோம்.

இருப்பினும், இந்த நீதியான சமூகத்தில் அதிக அநீதியும் காணப்படுகிறது. நாம் அனைவரும் கூட்டாக பழங்குடிகளான இனுயிட் மற்றும் மெடிரிஸ் மக்களை மறந்துவிட்டோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையின் அறிக்கை நிறைய உயிர் பிழைத்தவர்களின் கதைகளைக் கொண்டுள்ளது. அத்தகைய சில கதைகளை உறுப்பினர்கள் பார்வையிடுமாறு வேண்டுகிறேன். நீதிபதி முர்ரே சின்க்ளேய்ரின் டி.ஆர்.சி பரிந்துரைகளை நமது அரசு ஏற்றுள்ளது. இந்தப் பரிந்துரைகள் முழுமையாக செயல்படுத்தப்பட்டால் ஒரு புதிய பாதையில் முன்னோக்கி நாம் நகரலாம்.

இந்த அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளில் ஒன்று, கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பழங்குடியினப் பெண்கள் மற்றும் சிறுமிகள் பற்றி ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்பதாகும். வான்குவர், கால்கேரி, வின்னிபெக், ரொறன்ரோ, மொன்றியல் அல்லது ஹலிஃபாக்ஸ் போன்ற தலைநகரங்களை எடுத்துக்கொள்வோம். 40 ஆண்டு காலத்தில் மேற்கூறிய ஏதேனும் ஒரு நகரத்தில் 1,200 பேர் காணாமல் போயுள்ளனர் என வைத்துக் கொள்வோம். இந்த 1,200 வழக்குகளும் தீர்க்கப்படவில்லை என வைத்துக்கொள்வோம். அந்தத் தலைநகரங்களில் ஏற்படும் சீற்றத்தை உறுப்பினர்கள் கணிக்க முடியுமா? கனடியர்கள் என்ற முறையில் 40 ஆண்டுகளில் கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பழங்குடியினப் பெண்கள் மற்றும் சிறுமிகள் விடயத்தை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இந்தச் சிக்கலை நாம் எங்கிருந்து களையத் தொடங்குவது?


இவர்களின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க செய்யும் செயலை நமது அரசு தொடங்கியுள்ளது என்பது நாம் பெருமை கொள்ளவேண்டிய விடயம். நமது பிரதமர் இந்த சிக்கலுக்குத் தேவையான தலைமைத்துவத்தை தனது செயல்களின் மூலம் காட்டியுள்ளார். கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பழங்குடியினப் பெண்கள் மற்றும் சிறுமிகள் பற்றிய விசாரணை பற்றி மேம்போக்கான கருத்துக்களை அரசு கூறியுள்ளது. இந்த விசாரணை துவங்கவேண்டும் ஆனால் இந்தச் சோக நிகழ்வின் பல்வேறு பகுதிகளை விளங்கிக் கொள்ளாமல் இதைத் தொடங்க முடியாது. இந்தச் சபை, இந்த நாடாளுமன்றம், இந்த நேரத்தில் நமது முதல் மக்களின் திசையை மீட்டமைக்கலாம்.

கடைசியாக, நாம் அல்கோன்குயின் மக்களின் மரபுவழி நிலத்தில் இருக்கிறோம். மேலும், இந்தச் சபையில் கூட்டாக, ஒரு புதிய மார்க்கத்திற்கான திசையை, கனடா மற்றும் உள்நாட்டு, இனுயிட் மற்றும் மெட்திஸ் பழங்குடி மக்களுக்கும் இடையில் காட்டுவதில் நாம் வரலாற்றின் பாதத்தின் மீதிருக்கிறோம் என ஒப்புக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிஸ் சூழல் மாநாடு (கொப்-21)



# பூனைக்கு மணி கட்டுவது யார்?

சிவதாசன்

பாரிஸில் இரண்டு வாரமாக நடைபெற்ற ஐ.நா. உலகச் சூழல் மானாடு முடிவுக்கு வந்திருக்கிறது. மானாடு வெற்றி என்று தீர்மானம் வேறு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் கியோட்டோ, கொப்பென்ஹேகன் நகரங்களில் தோல்வியடைந்த மானாடுகள் பாரிசில் வெற்றியளித்திருப்பதாகக் கொண்டாடுகிறார்கள்.

மாநாட்டின் நோக்கம் பூகோள வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பைக் குறைத்துக் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்பது. அதைச் சாதிப்பதற்கு பல அப்விருத்தியடைந்த, அடைந்துவரும் நாடுகளின் ஒத்துழைப்புத் தேவை. முன்னய மாநாடுகளில் அபிவிருத்தியடைந்த நாடுகள் பல ஒத்துழைக்கவில்லை. இந்த தடவை ஒத்துழைக்கச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இத் திட்டத்தை அமுற்படுத்துவது எளிதல்ல என்றும் கூறப்படுகிறது. காரணம் இந்நாடுகள் எல்லாமே தமது பொருளாதார முன்னெடுப்பில் மட்டுமே அக்கறை கொண்டனவாக இருக்கின்றன. உலக அதிகாரப் போட்டியின் வெற்றியைத் தீர்மானிப்பது பொருளாதாரம் என்று தான் வாய்ப்பாடு சொல்கிறது.

விஞ்ஞானிகள் மனிதகுல மேம்பாட்டை மட்டுமே கருத்திற் கொண்டு தமது ஆராய்ச்சிகளை மேற் கொள்ளுகிறார்கள். சூழல் மாற்றங்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு பலத்த பேரழிவுகளைக் கொண்டுவரக் கூடாதென்ற அக்கறை அவர்களுக்கு இருக்கிறது.

சூழல் மாற்றத்திற்கு அதி முக்கிய காரணம் காபனீரொக்சைட் வாயுவின் அதிகரிப்பு எனவும் இதை உற்பத்தி செய்யும் மூலங்களாக எரிவாயுப் பாவனையும் (57% வாகனங்கள், மின்னுற்பத்தி) மற்றும் காடழிப்பு (17%) என்பனவுமே காணப் படுகின்றன எந்த தரவுகள் மூலம் அவர்கள் நிறுவுகிறார்கள். ஆனால் பொருளாதார நலம் கருதும் அரசுகளும் அரசியல்வாதிகளும் இப்படியான விஞ்ஞானிகளின் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்தது மட்டுமல்ல அவர்களின் ஆய்வுகளை நம்பவும் மறுத்து வந்தார்கள். காரணம் அவர்களில் பலர் எண்ணை வியாபாரத்திலும் காடழிப்பு வருமானங்களிலுமே வாழ்ந்து வருபவர்கள். இப்படியானவர்களின் அழுத்தங் களினாலேயே கியோட்டோ, கொப்பென்ஹேகன் மாநாடுகள் தோல்வியில் முடிந்தன. மக்களும் அவர்களை நம்பினார்கள்.

ஆனால் [illegible]

குறிப்பாக கடந்த வருடம் (2014) வரலாற்றிலேயே அதியுச்ச வெப்ப நிலையைக் கண்ட வருடமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தரவு பேணுதல் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இது வரை பார்த்தால் 'வெப்பமான வருடங்கள்' என அறியப்பட்ட 15 வருடங்களில் 14, 21ம் நூற்றாண்டிலேயே காணப்பட்டிருக்கின்றன.

2014 ம் ஆண்டின் அதியுச்ச வெப்பநிலை மக்களை விஞ் ஞானிகள் பக்கம் தள்ளிவிட்டது. லாபம் சம்பாதிப்பதைவிடவும் குழந்தைகளின் எதிர்காலமே முக்கியம் என அவர்கள் கிளர்ந் தெழுந்ததன் வெளிப்பாடே பாரிஸ் கொப் 21 மாநாட்டின் வெற்றி. அது அரசியல்வாதிகளுக்கான வெற்றி, மக்களுடையதல்ல.

வளிமண்டலத்தின் இன்றய சராசரி வெப்பநிலை 15 பாகை செல்சியஸ். பூமி உருவாகிய காலத்திலிருந்து இது பல தடவைகள் கூடியும் குறைந்தும் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இருந்தாலும் தற்போதய வெப்பநிலை அதிகரிப்பின் வேகம் விஞ்ஞானிகளைக் கவலை கொள்ள வைத்திருக்கிறது. இந்த வேகத்தில் அதிகரித்தால் பூகோளத்தின் பனி மூடிகள் உருகி கடலின் நீருயரம் அதிகரித்து பல தாழ்ந்த பிரதேசங்கள் அமிழ்ந்துவிடலாமென்றும் அதே வேளை சூரிய ஒளியின் பெரும் பகுதியைப் பிரதிபலிக்கும் பனி மூடிகள் இல்லாதபோது பூகோளம் இன்னும் வேகமாக வெப்பமடையும் எனவும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால் வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பிற்கும் காபனீரொக்சைட் வாயுவின் அதிகரிப்பிற்கும் என்ன சம்பந்தம் என வாசகர்கள் சிலர் கேட்கலாம்.

பூகோளத்தில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளி (வெப்பம்) முற்றாகப் பிரதிபலித்துவிட்டால் பூமி குளிரில் உறைந்துவிடும். எமது பூமியைச் சுற்றி இருக்கும் வளிமண்டலத்தில் இருக்கும் காபனீர் ஒக்சைட் போன்ற வாயுக்களின் படலம், தெறித்து வெளியே போகும் சூரிய வெப்பத்தின் ஒரு பகுதியை மீண்டும் பூமியை நோக்கித் தெறிக்க (இரண்டாம் தெறிப்பு) வைக்கின்றது. இதனால் தான் எங்கள் வளிமண்டலத்தின் சராசரி வெப்பநிலை 15 பாகை செல்சியஸ் ஆக இருக்க முடிகிறது.

ஆனால் வாகனங்களினதும், மின்னுற்பத்தி மற்றும் ஆலைப் புகைபோக்கிகளிலிருந்து வரும் புகைகளில் உள்ள காபனீரொக்சைட் பெருமளவில் வளிமண்டலத்தை அடையும்போது பூமியிலிருந்து தெறிக்கும் வெப்பத்தின் கணிசமான பங்கு இந்த அதிகரிக்கப்பட்ட காபனீரொக்சைட் படலத்தினால் திரும்பவும் பூமியை நோக்கியே தெறிக்க வைக்கப்படுகிறது. இதையே கிறீன் ஹவுஸ் வாயு ( green house gas) என்கிறார்கள்.

இந்த பாரிஸ் மானாட்டின் தீர்மானத்தின்படி காபனீரொக்சைட் போன்ற வாயுக்களை அதிகம் உற்பத்தி செய்யும் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தங்கள் எரிவாயு மற்றும் நிலக்கரிப் பாவனைகளைக் கட்டுப்பட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்பதே முடிவு.

இப்படியான நாடுகளின் பொருளாதாரத்தின் அடிநாதமே எரிவாயு மற்றும் நிலக்கரிப் பாவனை தான். ஆசியா, தென்னமெரிக்கா போன்ற நாடுகளில் நடைபெறும் காடழிப்புகள் கூட மேற்கு நாடுகளின் சந்தைகளை நிரப்புவதற்காகவே. அவர்கள் பாவனையைத் தாமாக முன்வந்து குறைக்கப் போவதில்லை. அப்படியானால் எல்லா நாடுகளுக்கும் ஒவ்வொரு அளவுக் கட்டுப்பாடு (கோட்டா) நிர்ணயிக்கப் பட வேண்டும். பணக்கார நாடுகளில் மக்கள் சூழலுக்காக எவ்வகையான சுய கட்டுபாடுகளுக்கும் தயாராக



இருப்பார்கள் என நம்பலாம். ஆனால் இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் ஏற்கெனவே தமது அதிருப்தியைக் காட்டியிருக்கிறார்கள்.

எந்த நாட்டின் கோட்டா எந்தளவு என்பதை யார் எப்படித் தீர்மானிப் பது? வருடாந்த கோட்டாவை எட்ட முடியாத பட்சத்தில் அந்நாடுகள் மீதான தண்டனையை யார் எப்படி வழங்குவது?

இங்கு பிரச்சினை நாடுகளில் இல்லை. நாடுகளின் நாயகமாக இருக்கும் ஐ..நா. சபையில் தானிருக்கிறது.. இந்த பாரிஸ் மாநாட்டை ஏற்பாடு செய்தது இச் சபைதான். எப்போதுமே அதிகார அரசியலின் நிழலில் ஒதுங்கி வாழும் இந்தச் சபையால் தீர்மானங்களை நிறைவேறற மட்டுமே முடியும். அதிகார நாடுகளின் தேவைகளைத் தீர்க்காத எவ்வித தீர்மானமும் வெற்றியடையப் போவதில்லை. இத் தீர்மானம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கால்களில் போடப்படும் ஒரு பொருளாதாரத் தளையாக ஏன் பார்க்கப்படக் கூடாது என்பதற்கும் ஆதரவாளர்கள் பலருண்டு.

விடயம் நல்லது. நம்பிக்கை தரும் உலக சபை உருவாகும்வரை எதிலும் நம்பிக்கையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Newest Office in SCARBOROUGH

#1 RE/MAX

RE/MAX® ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED

## ADVANTAGE

- ☑ Offer preparation
- ☑ Listing viewing follow up
- ☑ Free personal agent website
- ☑ Social media set-up
- ☑ Lottary based referral program
- ☑ Referrals from remax.ca and global.remax.com

## New Agents are Welcome

**Rathees Paramalingam**
Broker Of Record
**416-777-6000**

**Sri Nadarajasundram**
Manager
**416-276-6666**

1286 Kennedy Rd, Unit #3, Toronto, ON, M1P 2L5
**416-270-1111**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org